
# எங்கே செல்கிறோம்?



அ. அய்யாமுத்து

O-,6NAY5,
N75
109139

கோவை அய்யாமுத்து ஒரு தளராத வீரர். உண்மை ஒன்றே அவர் நோக்கம். யாருக்கும் பயப்படாத நெஞ்சம்.

—இராஜகோபாலாச்சாரி

★

நண்பர் அய்யாமுத்து அவர்கள் எழுத்துலகுக்கு மூத்த சகோதரர். தேசியப் பணியில பழம் பெரும் வீரர்.

எழுத்தும் பேச்சும் அவரிடம் போட்டியிடும். அப்போட்டியிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் சொக்கி நிற்பார்கள். அந்த சொக்கி நின்ற திருக்கூட்டத்தில் பன்னெடுங் காலமாக நானும் ஒருவன்.

—எஸ். எஸ். மாரிசாமி M. P.

★

அறப்பெற்றியும், மறப்பீடும் நிறைந்த ஆண்தகை எங்கள் அண்ணன் அய்யாமுத்து. காந்தியடிகள், ராஜாஜி போன்ற பெரும் வியக்திகளோடு நேர்நின்று தமது இதயத்தின் நீதிக்கு உகந்த வழியில் அவர்களோடு இணைந்தும் பொருதும் வந்திருப்பவர். எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைவல்லாரோடும் ஒன்றுகக் கலந்துநிற்பவர். பொதுவாக மானிட வாழ்வின் மேடுபள்ளங்களை நன்கு உடனிருந்து பழகி உன்னதமான வாழ்க்கை முறையில் நிற்பவர்.

(அமரர்) திருலோக சீதாராம்,
ஆசிரியர் 'சிவாஜி'

# எங்கே செல்கிறோம்?

கோவை. அ. அய்யாமுத்து

விற்பனை உரிமை :

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை-17

முதற்பதிப்பு : 1975.
பதிப்புரிமை ஆசிரியருக்கு

O-, 6NAY6,E
N75

விலை ரூ. 5-00

TAMIL NADU ARCHIVES LIBRARY
109139
MADRAS-600 008

வெளியிட்டோர் :

கோவை. அ. அய்யாமுத்து
சிங்காரம்பாளையம், கிணத்துக்கடவு
கோவை மாவட்டம்

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்
சென்னை-14.

# முன்னுரை

இப்புத்தகத்திலே காணப்படும் கட்டுரைகள் நவ இந்தியா, ஏர் உழவன், குடியரசு, கிராமராஜ்யம், பேரிகை, சிவாஜி, தியாகபூமி, மஞ்சரி போன்ற பல பத்திரிகைகளில் வெளியானவை.

ஒரு பத்திரிகைக்கென்று எழுதப்பட்ட கட்டுரையைப் பல பத்திரிகைகள் தாமாகவே தங்கள் தங்கள் பத்திரிகையில் பிரசுரித்தன.

உதாரணமாக 'செல்வமும் அதிகாரமும்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை பல பத்திரிகையில் பிரசுரமான பின்னரும் 'மஞ்சரி' எனும் மேலான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு அதன் ஆசிரியர் எனக்கொரு தொகை சன்மானமாக அனுப்பிவைத்து என்னைப் பெருமைப்படுத்தினர்.

எனவே என்னை நான் புகழ்ந்து கொண்டேன் என்ற குற்றத்துக்கு ஆளாகமாட்டேன்.

எனது கட்டுரைகள் பல பத்திரிகை ஆசிரியர்கள் புகழினைப் பெற்றது என்பதைத்தான் குறிப்பிட்டேன்.

இவ்வாறு புகழ்பெற்ற கட்டுரைகளைத் தாங்கி வரும் இப்புத்தகம் தமிழக நூலகங்களில் வைக்கப்பட்டால் பல்லாயிரக் கணக்கான மக்கள் படித்துப் பயன் பெறுவர்

எனும் ஆசையால் இதனை எனது தள்ளாத வயதில் வெளியிடத் துணிவு கொண்டேன்.

எனது கட்டுரைகளைப் பிரசுரித்து என்னைக் கௌரவித்த பத்திரிகை ஆசிரியர்கள் அனைவருக்கும், இவற்றைப் புத்தக வடிவில் உருவாக்கிய மூவேந்தர் அச்சகத்தாருக்கும், அதன் இயக்குனர் G. T. முத்து அவர்கட்கும், இப்புத்தகத்தை விற்பனை செய்யும் பொறுப்பினை மனமுவந்து ஏற்றுள்ள வானதி பதிப்பக அதிபர் திருநாவுக்கரசு அவர்கட்கும், இதனை வாங்கி வழங்கும் நூலகத்தார்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வந்தே மாதரம்

—கோவை. அ. அய்யாமுத்து

# பாராட்டுரைகள்

எனக்கு வயது அறுபது பூர்த்தியானபோது எனது நண்பர் A. K. செட்டியார் அவர்கள் எனது வாழ்க்கைச் சம்பவங்களை ரத்தினச் சுருக்கமாக எழுதினர். அது சென்னை யினின்று பிரசுரமான "நவ இந்தியா" தினசரிப் பத்திரிகையில் 12-4-60 தேதியன்று எட்டுக்காலங்கள் நிறைந்த ஒரு முழுப் பக்கத்தில் பிரசுரமாயிற்று. அக்கட்டுரை என்னைப்பற்றி இராஜாஜி அவர்கள் அளித்த ஆசியுடன் முடிகிறது. அதாவது:

"நான் அறிந்த தேசத்தொண்டர்களுள் மிக யோக்யமானவர்களில் முதல் வரிசையில் ஒருவர் என் நண்பர் அய்யாமுத்து அவர்கள். குணம், சாமர்த்தியம், அறிவு மூன்றிலும் குறைவில்லாதவர். 60 ஒரு பெரிய வயதல்ல. அவர் நீடூழி வாழ்க."

—நன்றி "நவஇந்தியா"

*　　　*　　　*

பேரிகை ஆசிரியரும், தமிழ்நாடு சுதந்திரக் கட்சியின் செயலாளரும், என் நண்பருமான எஸ். எஸ். மாரிசாமி அவர்கள் எனது கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து சுதந்திரக் கட்சி ஏன்? எனும் பெயருடன் ஒரு புத்தகம் ஜூன் 1961ல் பதிப்பித்து வெளியிட்டார். அப்புத்தகத்துக்கு கனம் ராஜாஜி அவர்கள் அளித்த முன்னுரையில் கூறியுள்ளதாவது!—

"இந்த அரிய பிரசுரத்துக்கும், அதை எழுதிய அய்யாமுத்து அவர்களுக்கும் என் அன்பார்ந்த வாழ்த்து. கோவை, அய்யாமுத்து ஒரு தளராத

வீரர். உண்மை ஒன்றே அவர் நோக்கம். யாருக்கும் பயப்படாத நெஞ்சம். படிக்க வேண்டிய புத்தகம்.

16-6-61. இராஜகோபாலாச்சாரி.

* * *

கதர் அபிவிருத்திக்காக நான் ஆற்றிய அரிய சாதனைகளைப் பாராட்டி 31-8-1939ம் ஆண்டில் மகாத்மா காந்தியடிகள் தமது 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதிய கட்டுரைக்கு "அயர்வறியாத உழைப்பாளி" என்ற தலைப்புக் கொடுத்திருந்தார்.

* * *

நண்பர் அய்யாமுத்து அவர்கள் எழுத்துலகுக்கு மூத்த சகோதரர். தேசியப் பணியில் பழம் பெரும் வீரர்.

எழுத்தும் பேச்சும் அவரிடம் போட்டியிடும். அப்போட்டியிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் சொக்கி நிற்பார்கள். அந்த சொக்கி நின்ற திருக்கூட்டத்தில் பன்னெடுங்காலமாக நானும் ஒருவன்.

—எஸ். எஸ். மாரிசாமி M. P.

* * *

அறப்பெற்றியும் மறப்பீடும் நிறைந்த ஆண்தகை எங்கள் அண்ணன் அய்யாமுத்து. காந்தியடிகள், ராஜாஜி போன்ற பெரும் வியதிக்களோடு நேர்நின்று தமது இதயத்தின் நீதிக்கு உகந்த வழியில் அவர்களோடு இணைந்தும் பொருதும் வந்திருப்பவர். எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைவல்லாரோடும் ஒன்ருகக் கலந்து நிற்பவர். பொதுவாக மானிட வாழ்வின் மேடுபள்ளங்களை நன்கு உடனிருந்து பழகி உன்னதமான வாழ்க்கை முறையில் நிற்பவர்.

(அமரர்) திருலோக சீதாராம்
ஆசிரியர் 'சிவாஜி'

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எங்கே செல்கிறோம்? (1968) | ... | 1 |
| 2. | "கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்!" (1967) | ... | 13 |
| 3. | பஞ்சாலை நெருக்கடி (1968) | ... | 20 |
| 4. | ஜன்னல் அலங்காரம் (1968) | ... | 30 |
| 5. | இரும்பும்-கரும்பும் (1968) | ... | 41 |
| 6. | மீண்டும் காந்தி வரவேண்டும் (1968) | ... | 48 |
| 7. | மனித சுதந்திரம் (1963) | ... | 57 |
| 8. | மாற்றமும்-ஏமாற்றமும் (1968) | ... | 69 |
| 9. | புனித வழி எங்கே? (1964) | ... | 74 |
| 10. | நமது கிராமங்கள் (1964) | ... | 82 |
| 11. | இன்பமும்-துன்பமும் (1964) | ... | 96 |
| 12. | சர்வோதயக் கோமாளிகள் (1973) | ... | 107 |
| 13. | செல்வமும்-அதிகாரமும் (1970) | ... | 111 |
| 14. | அந்த நாளும் வந்தது! (1972) | ... | 126 |
| 15. | நமது கிராமங்கள் முன்னேற்றமடைய நாம் என்ன செய்ய வேண்டும்? | ... | 136 |

# 1

# எங்கே செல்கிறோம்?

### வந்தே மாதரம் என்போம்

இந் நூற்றுண்டின் ஆரம்பத்தில் வந்தேமாதரம் என்ற தாரக மந்திரம் வங்கத்தினின்றும் ஒலித்தது.

சுதேசியம் என்ற நாட்டுணர்ச்சி நாடெங்கும் பரவிற்று.

கங்கைக்கரை புரண்டு திரண்டெழுந்த அப் பிரவாகம் காவிரியின் கரை புரளப் பாய்ந்தது.

குமரி முதல் இமயம் வரை வாழ்ந்த மக்களின் சிந்தனை கிளர்ந்து விரிந்தது.

ஒளி பிறந்தது.

இருள் அகன்றது.

அச்சம் தவிர்ந்து, ஆண்மை உச்சநிலை அடைந்தது.

வங்கப் பிரிவினை பரதகண்டத்தின் சுதந்திர வித்தாக இப் புண்ணிய பூமியில் முளைத்தது. முப்பது முக்கோடி மக்களின் கண்ணீரால் அப்பயிர் வளர்ந்தது.

அன்னிபெசண்டின் ஓம் ரூல் அப் பயிரில் மலர்ந்தது. காந்தீயம் என்னும் கனி பழுத்தது. அன்பு, அகிம்சை, தியாகம், சேவை, ஒழுக்கம் ஆகிய நற்சீலங்களின் தருவாக அச் செடி ஓங்கி உயர்ந்து படர்ந்து வளர்ந்தது.

சுயராஜ்யம் நமது பிறப்புரிமை என்று கர்ஜித்தான் லோகமான்ய பாலகங்காதர திலகன்.

ரௌலட் சட்டம் என்ற பலிபீடத்தை ஆங்கிலேயன் எழுப்பினன்.

## 2

இந்து, முஸ்லிம், சீக்கியர், கிறிஸ்தவர், பௌத்தர், ஜைனர் ஆகிய சர்வமதத்தினரின் இரத்தம் அப்பலிபீடத்தின்மீது பாய்ந்தது.

பேசும் மொழிகள் பதினெட்டுடைய எங்கள் பாரதத் தாய் ஒரே சிந்தையினளாகப் புன்முறுவல் பூத்தாள்.

ஒத்துழையாமைக் கொடியை உயர்த்தினன். அப் பாரதத் தாயின் அருமந்தப் புதல்வனுகிய காந்தி.

அவன் உலகத்திற்குப் புதுநெறி காட்டினன்.

'தன்னுயிர்போலே தனக் கழிவெண்ணும் பிறனுயிர் தன்னையும் கணித்தான்.'

'மன்னுயிரெல்லாங் கடவுளின் வடிவம், கடவுளின் மக்களென்றுணர்ந்தான்.

'இன்ன மெய்ஞ்ஞானத் துணிவினை மற்றுங் கிழிபடு போர், கொலை, தண்டம் பின்னியே கிடக்கும் அரசியலதனிற் பிணைத்திடத் துணிந்தான்—அப்பெருமான்!'

அப்புது நெறி கண்ட அகில உலகமும் ஓர் ஆதர்சம் பெறலாயிற்று.

காந்தியின் சங்கநாதம் கேட்டுப் பாரத தேசமே திரண்டெழுந்தது.

சிந்து, பாஞ்சாலம், உத்தரம், வங்கம், கலிங்கம், ஆந்திரம், மராட்டியம், கர்னுடகம், தமிழகம், கேரளம் ஆகிய பாரதப் பழம் பெரு நாட்டின் அங்கங்கள் அதிர்ந்தெழுந்தன.

வல்லபாய், வித்தல்பாய், சௌகத்தலி, மகமதலி, லஜபதிராய், இராஜாஜி, இராஜேந்திரப் பிரசாத், சித்தரஞ்சன், மோதிலால், அன்சாரி, அபுல்கலாம், ஜவஹர், சரோஜினி, சிதம்பரம், வ. வெ. சு. சவர்க்கார், சுப்பிரமணிய சிவா, வாஞ்சி போன்ற வீரர்களும், வீராங்கனைகளும் போர்க்கோலம் பூண்டெழுந்தனர்.

சட்டங்கள் தவிடு பொடியாயின. சிறைக் கோடங்கள் தவக்கோடங்களாயின. சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் திகைப்புற்று திணரலாயிற்று.

ஆனால் இன்று!

**சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்!**

செந்தமிழ்நாட்டைத் தட்டியெழுப்பியவன் சுப்ரமண்ய பாரதி.

'தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா' என்று நாமக்கல்லனைப்போல் அவன் சொல்லவில்லை.

'நம் நாடு தமிழ் நாடு' என்று பாரதிதாஸனைப்போல் கூறு போடவில்லை.

'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்று பாரதி தமிழனுக்குச் சொன்னான்.

'இன்னரு நீர் கங்கை யாறெங்கள் ஆறே' என்றானே ஒழிய கோவைக்கு வந்த பஸ்ஸின்மீது கங்கா, யமுனா என்ற பெயர்ப் பலகைகளைக்கண்ட தி. மு. க. தொண்டனைப்போல் அவன் சினந்து சீரழியவில்லை.

பாரத தேசமென்று தோள் கொட்டச் சொன்னான்.

'வெள்ளிப் பனிமலையின்மீதுலாவுவோம் என்றான்.

'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம், அதைக் காவிரி வெற்றிலைக்கு மாற்றுக்கொள்வோம்' என்று சொன்னானேயன்றி, மதியழகனைப்போன்று மற்ற மாகாணத்துக்கு வெல்லம் அனுப்பமாட்டோம், மணிலாக்கொட்டைஅனுப்ப மாட்டோம் என்று அந்தப் பாரதி யென்ற தமிழன் சொல்ல வில்லை.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைத்துச் சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம் என்றான் பாரதி.

வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளிற் பயிர் செய்வோம் என்று சொன்ன பாரதிக்கும் இன்று

நம்மிடையே வாழும் பிராந்திய வெறியர்களுக்கும் உள்ள வேற்றுமையை எண்ணும்போது நெஞ்சம் கொதிக்க வில்லையா?

## எப்பதம் வாய்த்திடுமேனும்

நம்மில் யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும் என்று பாடினன் பாரதி.

முப்பது கோடியும் வாழ்வோம். வீழில் முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் என்று பாரதி பாடிய நாட்டிலே இன்று எத்தனை வேற்றுமை, எத்தனை பிரிவுணர்ச்சிகள்!

தமிழ் சேனை, சிவசேனை, கோபால் சேனை, பீமசேனை மொழி வெறிகள்! நாடு உருப்படுமா?

சுப்ரமண்ய பாரதி—வயதில் இயேசு கிறிஸ்துவை ஒத்தவன். தேசபக்தியில் திலகரையும் மிஞ்சியவன். புலமையில் வள்ளுவரின் வரிசையில் நிற்பவன். தெய்வபக்தியில் யாருக்கும் இணையற்றவன். கம்பனுக்குப் பிறகு தமிழகத்தில் பிறந்த ஒரே கவிஞன் பாரதி. பாரதிக்குப் பிறகு அவனையொத்த கவிஞன் இன்றும் பிறக்கவில்லை. வறுமையிற் செம்மை கண்டவன் பாரதி அமரகவி. அவன் உலக கவி. அவனே நமது வழிகாட்டி, அவன் நாமம் வாழ்க.

பாரதியின் பாடல்களை நமது மாணவர்கள் மனப்பாடம் செய்வார்களேயானல் அவர்கள் நெஞ்சுறுதியுடன் நேரான பாதை காண்பர்.

## நமது அரசியல் சாஸனம்

1947 ஆகஸ்டு 14-ந்தேதி நள்ளிரவு பனிரண்டு மணிக்கு, நம்மை 150 ஆண்டுகள் ஆண்டிருந்த பிரிட்டிஷார், நமது கையில் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டுக் கப்பலேறினர்கள்.

மூன்றுண்டு காலம் சிரமப்பட்டு நாம் நமக்கே ஒரு அரசியல் சாஸனம் வகுத்துக்கொண்டோம்.

கடந்த இருநூறு ஆண்டுகளாக உலகெங்கும் நடைபெற்று வந்துள்ள ஜனநாயக அரசியலைக் கூர்ந்து பார்த்து ஆய்ந்தெடுத்துத் தேர்ந்து முதல்தரமான அரசியல் சாஸனத்தை எழுதி முடித்தோம்.

## மூன்றடுக்கு மாளிகை

அவ்வாறு நாம் நிர்மாணித்த அரசியல் சாஸனம் மூன்று பிரிவுகளைக்கொண்டு, ஒன்றுக்கொன்று அநுசரணையாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும் உப்பரிகைகளாகும்.

முதல் பிரிவை அரசியல் மாளிகையின் அடித்தளமாகப் பாவிக்கலாம். அதாவது இந்தியாவில் பிறந்து வளர்ந்து இந்தியாவையே தாயகமாகக் கொண்டுள்ள ஆண் |பெண் இரு பாலரில் இருபத்தோரு வயதானவர்கள் எல்லோருக்கும் சாதிமதம் நிறம் தொழில் பேதமின்றி வாக்குரிமை அளித்தோம். அதுவே அடித்தளம்.

இரண்டாவதாக ஐந்தாண்டுகளுக் கொருமுறை வாக்காளர்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்டு சட்டசபைகள் நிறுவிச் சட்டசபை மெம்பர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் நாட்டின் நிர்வாகத்தை ஏற்று நடைபெறச் செய்தோம்.

மூன்றும் பிரிவாகவும் அரசியல் மாளிகையின் கூடகோபுரமாகவும் உயர்தர நீதிமன்றத்தை ஏற்படுத்தி மக்களுக்கும், ஆள்வோருக்கும் அரசியல் சாஸன விதிகளை மீருமல் கண்காணித்துவரச் செய்தோம்.

## நடைமுறையில் நாம் கண்டதென்ன?

ஜனநாயக ஆட்சி நடைபெறும் உலக நாடுகளில் இந்தியா மிகப் பெரியது என்பதில் ஐயமில்லை.

இந்தியாவில் 45 கோடிமக்கள் வாழ்கிருர்கள். சற்றேறக் குறைய இருபது கோடி வாக்காளர்கள் இருக்கிருர்கள்.

இதில் பெரும் பகுதியாளர் ஏழை எளியவர்கள். பொறுப் புணர்ச்சியற்றவர்கள். கல்வி வாசனையும் இல்லாதவர்கள். எனவே வாய்வீச்சு வீரர்களின் மேடைப் பேச்சைக் கேட்டு இலேசில் ஏமாறக்கூடியவர்கள். உப்புமா, காபி, கைநிறை யத் துட்டு, வோட்டுச்சாவடிக்கு மோட்டார் சவாரி இத் யாதி கண்டு மயக்கம் கொள்கின்றவர்கள். எவன் அதிக மாகக் கூச்சலிட்டுப் பேசுகிறானோ அவனை நம்புகிறார்கள்.

வாக்காளர் நிலைமை இவ்வாறிருக்கத் தேர்தலுக்கு நிற் கும் வேட்பாளர் நிலைமை படுமோசமானது. மேடையேறிப் பேசும் ஒரே ஒரு வல்லமை அவனுக்கிருந்தால் போது மானது.

வேட்பாளர் பெரும்பாலோருக்கு ஒழுக்கமுண்டா, கல்வியுண்டா, செய்திறன் உண்டா, நற்சிந்தனையும், அன் பும், அறிவும், செய்தொழில் அநுபவம் உண்டா, சாதனை கள் உண்டா என்ற கேள்விகட்கே இடமில்லை. சண்டப்பிர சண்டமாகப் பேசத் தெரிந்தால் போதும்; வெற்றி நிச்சயம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

கடந்த தேர்தலில் சிறப்பாக நமது செந்தமிழ் நாட் டில், தேர்தல் மேடைகளில் சினிமா நடிகர்களும், நாடக மேடை நடிகர்களும் தோன்றித்திறம்பட நாடக வசனங்கள் பேசி மக்களை மயக்கினார்கள்.

இந்த நடிகை நடிகர்களின் தலைவனாகிய அண்ணாதுரை தனது கட்சி தேர்ந்தெடுக்கப்பட்டால் ரூபாய்க்கு மூன்றுபடி பட்டணத்துப் பக்காகப்படி அளக்க முடியும் என்று அளந் தார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் —"காலா காந்தி"— மக்கள் தலைவர் காமராசர், நிலம், மனை, கல்வி, உணவு, உடை, புஸ்தகம் குடியிருப்பு எல்லாம் இலவசமாகக் கொடுப்பதாகத் தமுக்கடித்தார். நிலவரியை நீக்கிவிடுவ தாகவும் சொன்னார்.

ஒரு கட்சி வேட்பாளனாவது மக்களைப் பார்த்துக் கஷ்டப்பட்டு உழையுங்கள், எட்டுமணிநேர உழைப்பை மனமாற நாட்டிற்கு நல்குங்கள், உங்கள் கடமையைச் செய்யுங்கள், நாட்டின் நலனை மறவாதீர்கள். தியாகம், சேவை, சத்யம், ஒழுக்கம் கைகொள்ளுங்கள் என்று செ ல்லவேயில்லை. அப்படியெல்லாம் சொல்லியிருந்தால் வாக்காளப் பெரு மக்கள் சிறந்த அரசியல் ஞானம் பெற்றிருப்பார்கள். வேட்பாளர்களின் அறிவு, திறமை, தேர்ச்சி, ஒழுக்கம், சேவை ஆகியவற்றை எடைபோட்டுப் பார்த்து வோட்டளித்திருப்பார்கள்.

அமைச்சர்களாக வீற்றிருப்பவர்களுக்குப் பரந்த நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. சீனக்காரன் பல்லாயிரக்கணக்கான மைல் பிரதேசத்தை ஆக்ரமித்துக்கொண்டிருப்பதைப் பற்றிய சிந்தனையும் கவலையுமில்லாமல் இங்கொரு தெருவுக்கும் அங்கொரு கிராமத்துக்கும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். வீணாகச் சமுத்திரத்தில் விழும் தண்ணீரைத் தேவையுள்ள பிரதேசங்களின் விளைச்சலுக்குப் பயன்படுத்தப் பிரியமில்லாதிருப்பதோடு விரோத மனப்பான்மையும் காட்டி வருகிறார்கள்.

ராஜ்ய அமைச்சர்களின் அறிவீனம் இவ்வாறு மிளிர்கையில், மத்திய அமைச்சர்கள் அரசியல் சாஸனத்துக்கு முற்றிலும் எதிர்மாறாகப் பலவாறு சட்டங்கள் இயற்றிவிட்டார்கள். மேல் மட்டத்தில் அரசியல் சாஸனத்துக்குப் பாதுகாப்பாகவிருக்கும் நீதிபதிகள் இச்சட்டங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்தமாத்திரத்தில், அரசியல் சாஸனத்தையே ஒருமுறையல்ல பதினேழு முறைகள் திருத்தி ஸ்திரமற்ற தன்மையை ஏற்படுத்திவிட்டார்கள்.

எவருடைய தயவு தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாமல் நடுநிலை தவறாது வீற்றிருந்து நீதி செலுத்தும் நீதிபதிகள் தங்கள் உத்தியோகத்தில் காலம் முடிந்தபின் நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொள்வோம் என்ற எண்ணத்துக்கு இடமில்லாமல், உபகாரச் சம்பளம் பெற்ற பின்னரும் அரசாங்கத்

தினரால் அளிக்கப்படும் பதவிகட்குத் தங்கள் நாவில் ஜலத்தைச் சொட்டிக்கொண்டு வீற்றிருக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

**அட்லியின் அறவுரைகள்**

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு மூல புருஷராக விருந்த பிரிட்டிஷ் பிரதமர் லார்டு அட்லியெனும் துரைமகனுர், நமது குடியரசின் பதினுன்காவது விழாவையொட்டி எழுதியுள்ள ஒரு கட்டுரையின் ஒரு பகுதியை இதோ படியுங்கள்:

**இந்தியாவில் ஜனநாயகத்துக்கு ஆபத்துக்கள்**

*இந்திய ஜனநாயகத்தின் வெற்றிக்குரிய அம்சங்களை மட்டும் நான் கூறிவிட்டு, அதன் அபாயத்துக்குரிய அம்சங்களைப்பற்றி மௌனம் சாதிப்பேனேயாஞல், அது அறிவுடைமையாகாது.

ஊழல் என்ற பெரும் பூதம் தனது விகாரமான தலையை, அமுக்யம் வாய்ந்திராத சில இடங்களிலும் காட்டியுள்ளதாக ஆதாரபூர்வமான தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது.

இதிலே இரண்டுவிதமான அபாயங்கள் இருக்கின்றன. முதலாவதாக நல்ல நிர்வாகத்தை ஊழல் அழித்துவிடுவதுடன், ஜனநாயக ஆட்சியின் ஆணிவேரையே நாசப்படுத்தி தேசீய ஒழுக்கத்தையும் பாழ்படுத்திவிடும்.

இரண்டாவதாக அது கம்யூனிசம் தலைதூக்க வாய்ப்பளித்துவிடும்.

கலக்கத்துக்குரிய மற்ருெரு அம்சத்தையும் இந்தியா காட்சியளிக்கிறது. அது ஒரே அரசியல் கட்சி நீண்ட காலமாகப் பதவிவகித்து வருவதாகும். சுதந்திரப் போராட்ட காலத்திலே பலதிறப்பட்ட கருத்துடையவர்கள் காங்கிரசில் சேர்ந்து உழைத்தது இயல்பே ஆனுலும், அவர்கள்

தொடர்ந்து அக்கட்சியில் இடம் பெற்றுவிட்டார்கள். சட்டபூர்வமான ஒரு எதிர்கட்சி உருவாகாமலும் போய்விட்டது. ஒரே கட்சியின் ஆட்சி வலியுறுத்தப்படாவிடினும் அமுலில் இருப்பது நல்லதல்ல.

இதன் விளைவாக கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கட்சியாகச் செயல்படவும், ஒரு ராஜ்யத்தில் [அக்காலத்தில் கேரளராஜ்யத்தில்—அய்யாமுத்து] அதிகாரத்தைக் கைப்பற்றவும் முடிந்தது.

இத்துடன் ஒரே மனிதன் நீண்டகாலமாகப் பிரதமராக இருப்பதும் சேர்ந்துகொண்டது. ஒரே கட்சியோ, ஒரே மனிதனோ நெடுங்காலம் ஆட்சிபீடத்திலிருப்பதும் நல்லதல்ல. அதனால் ஆட்சியிலே தளர்வும், அசிரத்தையும் விளைவதோடு, ஆட்சிப் பொறுப்பை ஏற்கவல்ல திறமையும் அநுபவமும் பிறர் பெற வாய்ப்பும் அற்றுப்போய்விடும்.

மேலும் லார்டு அட்லி எழுதியுள்ளதாவது:

### தேசம் துண்டாடப்படும் அபாயம்

'தேசத்தின் ஐக்யம் சிதறிவிடுமோ என்ற மற்றொரு அச்சமும் என்னுள்தோன்றியுள்ளது. மொழிவாரி மாகாணப் பிரிவினைக்கு எத்தகைய காரணங்கள் (முன்பு) காட்டப்பட்டபோதிலும், பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நிறுவியிருந்த ஒருமைப் பாட்டுணர்ச்சியை, (இன்று) மாகாணப் பிரிவினைகள் சிதைத்துவிடும் அபாயமும் இருக்கிறது.

ஒன்றுக்கொன்று முரண்படும் எதிர்ப்புடைய பல கண்டதுண்டங்களாக இந்தியா பிளவுண்டு பிற்போக்கடைவதைக் காண நான் விரும்பவில்லை.

இந்தியாவும் அதன் எண்ணற்ற மக்களும், பெறற்கரிய பேறனைத்தும் பெற்றுப் பிரகாசமுடன் எதிர்காலத்தில் திகழவேண்டுமென்பதே எனது விருப்பமும், நம்பிக்கையுமாகும்.

*(26—1—1964 'ஹிந்து' சென்னை)*

## இடது வலதுசாரிகள்

சுதந்திரப் போராட்ட காலத்தில் காங்கிரசில் சேர்ந்து உழைத்த பலதிறப்பட்டவர்கள், சுதந்திரம் பெற்ற பிறகும் காங்கிரஸில் இடம் பெற்றுவிட்டதாக லார்டு அட்லி சொல்லியிருப்பது அவ்வளவு சரியானதாக கொள்ளமுடியாது.

சுதந்திரப் போராட்டம் முடிந்த பின்னர் மாஸ்கோ பக்தர்களான டாங்கே, பூங்கே, ராமமூர்த்தி, ஜீவானந்தங்கள் காங்கிரசைவிட்டு வெளியேறி விட்டார்கள்.

சோஸலிஸ்டு சமுதாயத்தை அமைக்க விழைந்த சோசுக்களான' ஜெயப்பிரகாச நாராயணன், அட்சுத் பட்டவர்த்தன், ஆச்சார்ய கிருபளானி, நரேந்திரதேவ், அருணுஆசப்அலி கமலாதேவி போன்றவர்களும் காங்கிரஸை விட்டு வெளியேறித் தனிக்கட்சி அமைத்துக்கொண்டார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாகச் சுபாஷ்சந்திரபோஸின் பக்தர்கள் பார்வர்ட் பிளாக் என்ற கட்சிப் பெயரோடு பிரிந்துவிட்டார்கள்.

## காந்தியின் செல்லப்பிள்ளை

ஜவஹர்லால் நேரு எப்போதுமே ஒரு சோசலிசவாதி. அவர் சோசலிச ஏடுகளைக் கரைத்துக் குடித்தவர். இந்திய சோஸலிஸ்டுகளிலே அவரை தீவிரமானவர் என்று தாராளமாகச் சொல்லலாம். உண்மையில் அவர் காங்கிரஸைவிட்டு வெளியேறி இந்திய சோசலிஸ்டுக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றிருக்க வேண்டியவர்.

ஆனால் அவர் சிடுமுஞ்சி, முன்கோபக்காரர். பிறருடன் ஒத்துழைக்கத் தெரியாதவர். அக்காலத்தில் காந்தியை எதிர்த்துத் தோல்வியுறச் செய்த சுபாஷ்சந்திரபோசுக்கு ஜவஹரைக் கண்டாலே கிஞ்சிற்றும் பிடிக்காது.

மேற்கூறிய காரணங்களால் ஜவஹர் காங்கிரஸைவிட்டு வெளியேற முடியவில்லை. ஆனால் அதே சமயம் அவருக்கும்

மகாத்மாகாந்திக்கும் மிகமிக முரண்பாடான கொள்கை யிருந்தது.

இதை மகாத்மா காந்தி நன்கு அறிவார். கொள்கை யிலும், அதையணுகும் மார்க்கத்திலும் ஜவஹருக்கும் காந்திக்குமிடையே எத்தனை முரண்பாடுகள் இருந்தபோதி லும் இருவரும் ஒருவர்மீதொருவர் பரஸ்பரம் அன்பும் விஸ்வாசமும், மரியாதையும் கொண்டிருந்தனர்.

அன்று பரத கண்டத்திலே வெடிகுண்டுகள் வீசும் பயங்கரவாதிகள் வங்கத்தில் திரண்டிருந்தனர். தூக்கு மேடையேறிய பகவத்சிங்கங்கள் இருந்தனர். இரத்தக் கொதிப்பும், சுதந்திர வெறியும், துடிதுடிப்பும், அவசர புத்தியும், ஆர்வமும் நிறைந்த வாலிபர்கள் காங்கிரசிலும் நிறைந்திருந்தனர்.

காந்தியடிகளால் செலுத்தப்பட்ட சுதந்திர ரதம் ஒரே சீரான வேகத்தில் செல்லவில்லை. அது திடுதிடுவென்று போகும், பிறகு திடுமென்று நின்றுவிடும். அது போர்முரசு கொட்டும். உடனே சமாதான கீதம் பாடும்.

காந்தியும் அவரது கொள்கையும், அவரது போராட்ட முறைகளும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் எளிதில் விளங்காத ஒரு பெரும் புதிராய் இருந்தது.

காங்கிரஸ் ரதம் சேற்றில் சிக்கிக்கொண்டதென்று இராஜாஜியே அதைவிட்டு இறங்கி ஓடிவிட்டார்.

சுபாஷ் சந்திர போஸ் வங்கச் சிறையினின்றும் தப்பி, மாறுவேடம் புனைந்து, பாரத நாட்டின் எல்லை கடந்து ஐரோப்பா சென்று ஹிட்லரின் ஆதரவை நாடினார்.

இந்தியாவில் காந்தியின் செல்லப்பிள்ளையாக ஜவஹர் விளங்கினார். அவரைக் காந்திபார் கட்டிப்பிடித்து தம்முடன் வைத்துக்கொண்டார். அவர்தான் தமக்குப்பின் தமது வாரிசாவார் என்றும் பேசினார்.

காந்தியார் அப்படிச் செய்யாதிருந்தால் ஜவஹர் காங்கிரசை விட்டு வெளியேறியிருந்தால், இந்தியாவின் கடந்த இருபதாண்டுச் சரித்திரம் வேறுவிதமாய் எழுதப் பட்டிருக்கும்.

கற்பனைவாதியான ஜவஹர் காந்திக்குப்பின் காங்கிரசின் முடிசூடாமன்னராகிவிட்டபடியால், அவர் இந்தியாவின் பாரம்பர்யத்தையும், பண்பாட்டையும், இந்திய மக்களின் தகுதி, தகுதியின்மைகளையும் புரிந்து அதற்கேற்ப அரசியல் இரதத்தைச் செலுத்தாமல், அவர் மனம் போன வழியில் சென்று இன்று இந்தியாவைத் திரிசங்கு சுவர்க்கமாக்கி விட்டார்.

ஜவாஹர் காங்கிரசை விட்டு விலகியிருந்தால் அவரது தலைமையில் ஒரு சீரான எதிர்க்கட்சி உருவாக வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம்.

காங்கிரசும் தேசமும் சர்தார் வல்லபாய் போன்ற இரும்புக் கரங்களால் ஆளப்பட்டு, இன்று நம் பகைவர்கள் கண்டு நடுநடுங்கும்படியான ஒரு நிலையை எய்தியிருக்கும். பொருளாதாரச் சீரமைப்பும் யாதொரு குழப்பமுமின்றி அமைந்திருக்கும்.

ஜவஹர் முகமன் கூறுபவர்களாலே சூழப்பெற்றார். ஆமாஞ்சாமிகளாலே வஞ்சிக்கப்பட்டார்.

இறுதியில் புலியிருந்த குகையில் பூனைகள் வாழுகின்ற மாதிரி காங்கிரசிலே 'படிக்காத மேதை'கள் சிறப்பெய்த லாயினர்.

இன்று சுயநலம் ஒன்றைத் தவிர யாதொரு விதமான கொள்கையோ சித்தாந்தமோ இல்லாத உதிரிகளின் கையில் சிக்கிப் பல மாநிலங்கள் சீரழிகின்றன.

கொள்கையற்ற கூட்டமைச்சுகளின் அலங்கோலம் நாடெங்கும் மக்களுக்குக் காங்கிரசின்மீது ஏற்பட்ட வெறுப்பை மாற்றிவிடும்போல் தெரிகிறது.

# 2

# "கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்!"

நமது நாட்டுப்புறங்களிலே உள்ள ஒவ்வொரு குடிசையும் ஒரு சர்வகலாசாலையாக விளங்குகிறதென்று நான் சொன்னால் நீங்கள் அதிசயிப்பீர்கள்.

ஒரு நெசவாளரின் குடிசைக்குள் நுழைந்து பாருங்கள். நீங்கள் அங்கே நுழைந்தவுடன் உங்களுக்குப் பண்பும் அன்பும் நிறைந்த வரவேற்பும், அதைத் தொடர்ந்து உபசரிப்பும் கிடைக்கும். தகப்பன் தேரில் பாவோடிக் கொண்டிருப்பார். தாயார் தார் திரித்துக்கொண்டிருப்பார். பையன் தறியில் நெசவு செய்து கொண்டிருப்பான். தங்கை சமையல் செய்துகொண்டிருப்பாள். குழந்தைகள் கூடத்தில் விளையாடிக்கொண்டிருப்பார்கள். நெசவுக் கலையின் நுண்ணிய அறிவில் அக்குடும்பமே திளைத்திருக்கும்.

ஒரு விவசாயி—சமுசாரியென்னும் அர்த்தபுஷ்டியோடு சில மாவட்டங்களில் வழங்குவார்கள் – இல்லத்துள் சென்று பாருங்கள். எல்லோரும் ஏதேனும் ஓர் வேலையில் ஈடுபட்டுத் தானிருப்பார்கள். யாராவது சோம்பி உட்கார்ந்தாலோ அல்லது படுத்திருந்தாலோ அவன் நிச்சயம் ஒரு நோயாளியாகத்தானிருப்பான்.

ஒரு பண்டைக்கால கிராமத்தை மனத்தினுள்ளே கற்பனை செய்து பாருங்கள். அது எத்தகைய தோற்றமளிக்குமென்று உங்களுக்குத் தெரியுமா? கிராமத்தில் நுழைந்த மாத்திரத்தில் அங்கோர் கோயிலிருப்பது தெற்றெனத் தோற்றமளிக்கும். நமது கிராமங்களெல்லாம் கோவிலை மையமாக வைத்து நிர்மாணிக்கப்பட்டவையல்லவா?

எண்ணெய்ச் செக்காடுவது 'கொய்ந்' என்று ரீங்காரம் செய்து கொண்டிருக்கும். குலாளர் சட்டி பானைகள் தட்டும் ஓசை கேட்கும். கம்மாளர், பித்தளை, செம்பு வெண்கலப் பாத்திரங்கள் தட்டும் ஓசை கணீரென்று காதைத் துளைக்கும். மேலும் நடந்து செல்லுங்கள். நெசவாளர் தறிகள் படபடக்கும் சப்தம் கேட்கும். அதோ பாவடி. அங்கே ஆடவர் பாத் துவைத்துக்கொண்டிருப்பர். தெருத் திண்ணையின் ஒதுக்குப்புறத்தில் பாட்டி கை இராட்டையில் நூலிழைத்துக் கொண்டிருப்பார். கோவில் பண்டாரம் பூஜைக்கு வேண்டிய மலர்மாலைகள் தொடுத்துக்கொண்டிருப்பார். அதோ சேணியர் நூலை விதவிதமான வர்ணங்களில் துவைத்துக் காயப் போடுகிறார். கொல்லர் பட்டரையில் சக்கரம் சுழலுகிறது. உலை காய்கிறது. புஜபலமுள்ளவன் நெரிப்புத் தெரிக்க இரும்பைச் சம்மட்டியால் ஓங்கி அடிக்கிறான். அதோ அப்பெண் கடைக்கண்ணால் உங்களை நோட்டமிடுகிறாள். அவள்தான் அக்கிராமத்தாருக்குக் கூடை, முறம்முடைந்து கொடுப்பவள். அவள் முருகன்மீது பாடும் குறவஞ்சிப் பாட்டைக் கேட்க நீங்கள் தவம் செய்திருக்க வேண்டும். இன்னும் சற்றே நகருங்கள். அதுதான் பாடசாலை. ஆசிரியர் கம்பராமாயண வகுப்பு நடத்துகிறார். ஒரு மாணவன் இனிய குரலில் எவ்வளவு இனிமையாக விருத்தப் பாக்களைச் சொல்லுகிறான் கேளுங்கள்.

அதோ அந்த ஆலமரத்து நிழலில் எருதுக்கு லாடம் கட்டக் காண்பீர்கள். கொஞ்சம் மூக்கைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதுதான் தோல் பதனிடும் சாலை. தோலைப் பதனிட்டு தும்பிகள், பறிகள், செருப்புகள், வார்கள், ஜீனிகள் முதலானவை இங்கே தைக்கிறார்கள். வாருங்கள் அடுத்த தெருப்பக்கம். அங்கே நடந்துகொண்டே என்ன செய்கிறார்கள் என்று யோசிக்கிறீர்கள். அவர்கள் தென்னை மஞ்சினியால் கயிறு திரிக்கிறார்கள். எருதுகளுக்கு கொம்புக் கயிறு, தலைக்கயிறு, மூக்கணங்கயிறு, உழவுக் கயிறு,

கன்னிக்கயிறு, வடக்கயிறு, வால் கயிறு, பாரக்கயிறு, சூடிக் கயிறு, தண்ணீர்க்கயிறு என்பதாகப் பல கயிறு செய்து நகர்ப்புறங்களிலுள்ள சோம்பேறிகளுக்கு அனுப்புகிறார்கள். அது என்ன அப்படிப் பார்க்கிறீர்கள். கமகமவென்று வாசனை மூக்கைத் துளைக்கின்றதா? அதுதானய்யா கரும் பாலை. வெல்லம் காய்ச்சுகிறார்கள். தேம்பாகுதான் கமகமக் கிறது. வாருங்கள் கொஞ்சம் கரும்புப்பால் சாப்பிட்டு விட்டுப் போகலாம். எவ்வளவு பசுமையான ஓடை பாருங் கள். எங்கள் கிராமத்துத் துணியெல்லாம் இங்குதான் சலவை செய்கிறோம். பூ வேலைப்பாடமைந்த அத்துணி களைப் பார்க்கிறீர்களா? அவைபொன்றும் இறக்குமதி சரக்கல்ல. எங்கள் பிள்ளைகளால் அச்சிடப்பட்ட சீட்டிகள் தாமவை. அவற்றையும் நகர்ப்புறவாசிகள் இங்கே திரண்டு வந்து பணங்கொடுத்துப் பெற்றுக்கொண்டு போகிறார்கள். அதோ அத்திண்ணையில் பொற்கொல்லர் கல்யாணப் பெண் ணுக்குத் தாலி செய்து கொண்டிருக்கிறார். அவருடைய, பிள்ளை நெருப்பூதுகிறான்.

அதோ கால்நடைகள் வருகின்றன. சற்று ஒதுங்கி நில்லுங்கள். அவை மேய்ச்சல் காட்டிற்குப் போகின்றன. நீங்கள் பார்த்த ஓடையோரத்தில் நூறு வள்ளக்காடு மேய்ச் சலுக்காகவே ஒதுக்கி வைத்திருக்கிறோம்.

இன்று மதியம், இன்றிரவு நீங்கள் தங்குவதானால் எங்களூர்ப் பிள்ளைகள் நடிக்கும் நாடகத்தைக் காண்பீர்கள்.

எங்கள் கிராமம் முழுவதும் மரங்கள் நடப்பட்டு எவ்வளவு அழகான தோற்றமளிக்கின்றது பார்த்தீர்களா? அதோ எங்கள் ஊர்ச்சாவடி, வாரம் ஒருமுறை அங்கே ஊர்ப் பெரியவர்கள் கூடுவார்கள். சண்டை, சச்சரவு, கொடுக்கல், வாங்கல், பாக்கி சாக்கி எல்லாம் ஆற அமரக் கேட்டு நியாயம் வழங்குவார்கள்.

இந்தக் கற்பனைக் கிராமத்தை இன்று கண்ணால் காண முடியுமா?

ஃ ஃ ஃ

படிக்காதவர்கள் எல்லாம் அறிவற்றவர்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்தான் அறிவாளிகள் என்று இப்போது பொதுவான அபிப்பிராயம் நிலவக் காண்கிறோம்.

அறிவுக்கும் எழுத்துப் படிப்புக்கும் தொலை தூரம். எழுத்துப் படிப்பில்லாமலேயே நமது கிராமப் புறங்களில் பல நூற்றுண்டுகளாக நமது கல்வி, நாகரிகம், கலைகள் பண்பாடு காக்கப்பட்டு வந்துள்ளன. தகப்பன் மகனுக்குப் போதிக்கும் பாரம்பர்யத்தோடு தொழிலும் கல்வியும் வாழ்க்கையின் கலையும் மலர்ந்து திகழ்ந்துள்ளன. ஒவ்வொரு குடிசையும் ஒரு தொழிற்சாலை. அன்றுடம் செய்யும் வேலை பயிற்சி தரும் பாடம், ஒவ்வொரு செயலும் ஒரு சோதனை. செய்யப்பட்ட ஒவ்வொரு பொருளும் ஒரு பட்டம். வாழ்க்கையெனும் சர்வ கலாசாலையில், மானிடக் கலை பயின்று தேறி, ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு பட்டதாரியாக விளங்குகிறுன் என்று சொல்வது மிகையாகாதல்லவா?

ஆனால் அந்தோ! இன்று—சமுகத்தின் பல வேறு பிரிவினர்கட்கும், அவர்களது திறமை அவர்களது உள்ளுணர்வு, அபிலாஷை போன்ற யாதொன்றையும் சிந்திக்காமல், நாகரிகத்தின் வெவ்வேறு படியிலுள்ளவர்களுக்கும், வாழ்க்கையின் பலதிறப்பட்ட தேவைகட்கும், ஒரேயடியாக ஒரே மாதிரியான கல்வி முறை இத்தேசத்திலுள்ள பாடசாலைகளில் புகுத்தப்பட்டுள்ளனவல்லவா?

இது கல்வியா? அணிவகுப்பா? ரெஜிமெண்டேஷனு? படிப்பா? நெட்டுருப்போடும் மிஷினு? சோதனையா? சூதா? வாழ்க்கைக்கும், இக்கல்விக்கும் தொடர்புண்டா? இது அஸ்திவாரமற்ற படுகுழி, தெரிந்துகொள்ள முடியாத சூனியம். சர்வகலா சாலைகள் இந்நாட்டில் தோன்றி நூறுண்டு விழாக்களும் கொண்டாடி விட்டோம். ஆனுல் அப்பழமையின் பிடியிலிருந்து நாம் விடுபடவில்லையல்லவா?

## இயற்கையே சிறந்த ஆசிரியன்

பிறந்ததுமுதல் சாகும்வரை மனிதன் யாதாவதொன்றைக் கற்றுக்கொண்டே இருக்கிறனல்லவா? பிறந்த மாத்திரத்தில் குழந்தை சுவாசிக்கக் கற்றுக்கொள்கிறது. பின்னர் அழுவது, சிரிப்பது, பால் குடிப்பது, உறங்குவது, புரளுவது, அப்புறம் குப்புற விழுவது, நகர்வது அல்லது தவழ்வது, உட்காருவது, நடப்பது, பின்னர் அப்பா அம்மா என்று விளிப்பது, குதிப்பது, ஒடுவது, விழுவது, விளையாடுவது இப்படி ஒவ்வொன்ருகக் கற்றுக்கொண்டே போகிறது. பேசுகிறது. நமக்கே புரியாத கேள்விகளைக் கேட்டு நம்மைத் திணற அடிக்கிறது. பத்து வயதில் சுயமாக எண்ணவும் பதினுன்கு வயதில் உழைத்துப் பொருளீட்டவும் கற்றுக்கொள்கிருன். வயது ஏற ஏறப் பலவிதமான தளவாடங்கள் செய்கிருன். சித்திர வேலைப்பாடமைந்த சாமான்கள் செய்கிருன். தனதில்லத்தைச் சிங்காரிக்கிருன், சித்திரங்கள் வரைகிருன், சிற்ப வேலைகள் படைக்கிருன், கற்பனைகள் களிநடனம் புரிய கவிகள் புனைகிருன், நெசவு செய்கிருன், நகைநட்டுகள் செய்கிருன், சமையற்கலையில் வல்லுநனுகிருன், மருத்துவக் கலையில் சிறப்படைகிருன், வீடுகள் கட்டுகிருன், பொட்டல் பூமியைப் பூங்காவனமாக்குகிருன், உழுது விதைத்து, அறுவடை செய்து பசிப்பிணியைப் போக்குகிருன்.

இந்த ஆயிரக்கணக்கான தொழில்களை விதவிதமாக யார் இவனுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். இவைகளில் தேர்ச்சியும், பயிற்சியும் வெற்றியும் தோல்வியும் யார் பெற வைத்தார்கள்? தண்டனையும், பரிசும், பட்டமும் பதவியும் யார் வழங்கினுர்கள்? இந்தியக் கலையையும் தொழிலையும் பாரம்பாயமாகக் காத்துவந்த இல்லக்கிழார்களும் கிழத்திகளும் அல்லவா?

## இப்பொழுது செய்யவேண்டியதென்ன?

பள்ளிகளும், வித்யாபீடங்களும் பழையபடி கலை, தொழில் உற்பத்தி, எழில் ஒருமைப்பாடு அமைந்த தொழிற்

கல்வி முறையை ஏற்படுத்த வேண்டும். மேனாடுகளில் Crafts School எனப்படும் தொழிற்கல்விச் சாலைகள் நடைபெறுகின்றன. காந்தி அடிகளார் இங்கு ஆதாரக் கல்வி யெனும் புதுமுறையை புகுத்த விழைந்தார். பண்டைக் காலத்தில் உபயோகத்திற்கு வேண்டிய எல்லாப் பாத்திரம், பண்டம், வண்டிகள், வாகனம், இரதங்கள், ஆடைகள் ஆகியவற்றில் கலையை—அருங் கலையை—எழிலை சேர்த்தமைக்கும் சக்தியை தொழிலுடன் இணைத்து வெற்றிமுரசு கொட்டினுர்கள், நமது சமூகஅமைப்பு பூராவும் ஒரு ஐக்கிய சங்கமாக, கலாச்சேத்திரமாக விளங்கியது. இந்தியா பூராவும், அதிலுள்ள ஒவ்வொரு குடும்பமும், இல்லமும், தனது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளத் தக்கதாக இருந்தது என்றும் எங்கும் வேலையும் சுபீட்சமும் நிறைந்து லட்சுமி கடாட்சமும் குறைவின்றி இருந்தது.

அன்று பந்துகளும் வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும், இன்னதென்று தெரியாதிருந்தது.

எனவே, நமது தற்காலத்தையும், பிற்காலத்தையும் அனுசரித்து கல்வி முறையைத் திருத்த வேண்டும். நமது வாலிபர்களுக்கும் பயிற்சியானது நாட்டின் மூலைமுடுக்குகளிலும், பட்டிதொட்டிகளிலும், சுயதேவைப் பூர்த்தி முறை பரவும் வண்ணம், விஞ்ஞானத் துணைகொண்டு சிறுசிறு தொழில்களிலும், கிராமக் கைத்தொழில்களிலும் நாட்டம் கொள்ளச் செய்வதாக இருக்கவேண்டும்.

### புதிய சகாப்தம்

பொருளாதாரத் துறையில் மகாத்மா காந்தி கதர்மூலம் ஒரு புதிய வழியை நமக்கு வகுத்துக் காட்டினுர். கைராட்டைப் பொருளாதாரத்தையும் கல்வியையும் இணைப்புறச் செய்கிறது. கதரும் கிராமக் கைத்தொழிலும் நிலைபெறச் செய்து, அதற்கேற்ற முறையில் நமது கல்வி முறையையும் மாறுதல் அடையும்படி செய்திருக்க வேண்டும். ஆங்கிலேயன் நமது நாட்டைவிட்டகன்று இருபதாண்டுகளாகியும்

நாம் அதைச் செய்யத் தவறிவிட்டோம். அதன் பலாபலனை இன்று கண்கூடாக நாடெங்கும் காண்கிறோம். மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மையும் விரக்தியும் இந்நிலைக்குப் பரிபூரண சான்றுகளாகும். இன்று மாணவர்கள் அரசியல் கட்சிகளின் கைப்பாவைகளாக மாறி விட்டதற்கு மூலகாரணம், அவர்களது வாழ்க்கையில் ஒரு குறிக்கோளற்றுப் போனதேயாகும். ஆகவே பழைய கல்வி முறை புதிய முறைக்கு இடந் தந்தாகவேண்டும்.

நமது மந்திரிகளும், அரசாங்க அதிகாரிகளும் திட்டகர்த்தாக்களும் திருதிராஷ்டிரனைப் போன்று அசைவு கொடாத அறிவு நிலையிலிருந்துகொண்டிராமல் அதனைத் தாண்டிச் சென்று நமது கல்வி முறையைத் தொழிலுடன் தொடர்புடையதாகவும், நமது ஆட்சிமுறையை கிராமங்களிலிருந்து பரவும் வகையிலும் மாற்றியமைக்காவிடில், ''கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள், கற்றுமறிவில்லாத மூடரை என் செய்வதுகாண் கட்சியே கம்பனே'' என்றுதான் பாடவேண்டியவர்களாவோம்.

# 3

# பஞ்சாலை நெருக்கடி

கடந்த 20 ஆண்டுகளில் தொழில் துறையிலும், தொழில் நுட்பத் துறையிலும் ஏற்பட்டுள்ள முக்கியமான மாறுதல்களின் விளைவாக நம் நாட்டின் ஏற்றுமதி வர்த்தகம் ஊக்கம் பெற்றிருக்கிறது.

உலோகப் பொருள்கள், எஞ்சினியரின் பொருள்கள், ரசாயனப் பொருள்கள் போன்ற செய்பொருள்களின் ஏற்றுமதி கடந்த 10 ஆண்டுகளில் 10 கோடி ரூபாயிலிருந்து 125 கோடி ரூபாயாக மதிப்பில் உயர்ந்திருக்கிறது.

இப்போது ஆண்டுதோறும் நான்கு லட்சம் டன் தேனிரும்பும், கிட்டதட்ட ஐந்து லட்சம் டன் எஃகும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. என்சினியரிங் பொருள்களைப் பொருத்தவரை யந்திரக் கருவிகள், மோட்டார் கார்கள், அதன் உதிரி உருப்புகள், கம்பஸ்டின் எஞ்சின்கள், பம்புகள், மின்சார கம்பிகள், மின்சார பாட்டரிகள் போன்று பல பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. ஜவுளி ஆலை யந்திரங்கள், சர்க்கரை ஆலை யந்திரங்கள் உட்பட தொழில் துறை யந்திரங்கள் பல இன்று நம் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

ஆண்டுதோறும் ஒன்றரை லட்சம் மின்சார விசிறிகளும், ஒரு லட்சம் சைக்கிள்களும் ஏற்றுமதியாகின்றன.

ரசாயனப் பொருள்களைப் பொறுத்தவரை விட்டமின் கலவைகளும், ஆண்டி பயாடிக் மருந்துகளும் ஏற்றுமதிப் பட்டியலில் இடம் பெறுகின்றன. சேர்க்கை மருந்துகள், சாயங்கள், சோப்பு வகைகள், அழகு சாதனங்கள் போன்ற

பல்வேறு பொருள்களை ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் நாம் இன்று இருக்கிறோம். மோட்டார் கார், டயர்கள், ட்யூபுகள், சைக்கிள் டயர்கள், ட்யூபுகள், ரப்பர் காலனிகள் ஆகியவற்றின் ஏற்றுமதி கணிசமான அளவு அதிகரித்திருக்கிறது. சைக்கிள் டயர்களையும், ட்யூபுகளையும் பெரும் எண்ணிக்கையில் அனுப்பும்படி இந்திய உற்பத்தியாளர்களுக்கு அமெரிக்காவிலிருந்து ஆர்டர்கள் கிடைத்துள்ளன.

புதிதாய் ஏற்றுமதி வாய்ப்புக்களைப் பெற்றுள்ள மற்றொரு முறை கண்ணாடித் தொழிலாகும். விஞ்ஞானத்துக்கு வேண்டிய கண்ணாடி உபகரணங்கள், மின்விளக்குகளுக்கு வேண்டிய கண்ணாடிப் பொருள்கள் ஆகியவை உட்பட பல கண்ணாடிப் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன.

இந்தியாவில் செய்யப்படும் பிஸ்கட்கள் இன்று ஏற்றுமதியாகின்றன. சூயஸ் கால்வாய்க்கு அப்பால் இதுவரை எட்டிப் பார்த்திராத இந்திய வாழைப்பழங்கள் இன்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் விற்றுப்போகின்றன. பக்குவம் செய்யப்பட்ட கடல் உணவுப் பொருள்களின் ஏற்றுமதி மெச்சத்தக்க வகையில் உயர்ந்திருக்கிறது. 1960–61ல் நான்கு கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்புக்கு கடல் உணவுப் பொருள்களும், மற்ற சம்பந்தப்பட்ட பொருள்களும் ஏற்றுமதி ஆயின. 1966–67ல் இது 17 கோடியே 36 லட்சம் ரூபாயாக உயர்ந்தது.

மேம்பாடு குன்றிய நாடுகளில் மட்டுமின்றி, மேம்பாடடைந்த நாடுகளிலும் இந்திய செய்பொருள்கள் விற்பனை வாய்ப்புக்களைப் பெற்றுள்ளன. இந்தியாவில் தயாரான சில எஞ்சினியரிங் பொருள்கள் அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளில் விற்பனையாகின்றன. இந்த நாடுகளில் மட்டும் 1967–68ம் ஆண்டில் சுமார் ஏழு கோடி ரூபாய் மதிப்புக்கு எஞ்சினியரிங் பொருள்கள் விற்றுப்போயின. அதேபோல, அமெரிக்காவுக்கும், கானடாவுக்கும் காலணிகளையும். இவற்

ரூடு சம்பந்தப்பட்ட மற்ற பொருள்களையும் ஏற்றுமதிசெய்யத் துவங்கி விட்டோம்.

மேம்பாடடைந்த நாடுகளிலிருந்து பலமான போட்டா போட்டி இருந்துங்கூட ரெயில் வாகனங்கள், ரெயில் பெட்டிகள், மின்சாரக் கம்பிகள், மின்சார ட்ராஸ்மிஷன் இணைப்புக்கள், பலுதூக்கிகள் போன்றவற்றுக்கு இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு ஏராளமான ஆர்டர்கள் கிடைத்துள்ளன:

வெளிநாடுகளில் பல்வேறு திட்டங்களுக்கும் பூர்வாங்க எஞ்சினியரிங் சர்வேக்களை மேற்கொண்டு, திட்டமிட்டு, பொருள்களை வழங்கி பிறகு, தொழிற் பிரிவுகளை முழுமையாய் அமைத்துக் கொடுப்பதற்கான ஒப்பந்தங்களிலும் இந்தியா கையெழுத்திட்டிருக்கிறது. ஆசியாவிலும், ஆஃப்பிரிக்காவிலும் உள்ள மேம்பாடு குன்றிய நாடுகளில் இந்திய தொழில் அதிபர்கள் இவ்வாறு சுமார் 50 கூட்டுமுயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்: இந்தியாவின் தொழில் நுட்பத் திறமையையும், தேர்ச்சியையும்தான் இது எடுத்துக் காட்டுகிறது.

கடந்த சில வாரங்களாகக் கோவை மாவட்டத்தில் உள்ள பஞ்சாலைகள் நெருக்கடி பற்றிய செய்திகளே தினசரிப் பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்பி வருகின்றன.

கோவை மாவட்டத்திலுள்ள பஞ்சாலைகள் பல ஒன்றன் பின் ஒன்றாக மூடப்பட்டு வந்துள்ளன.

மூடப்படாதவைகள் தங்கள் வேலை நாட்களைக் குறைத்தன.

பஞ்சாலைத் தொழிலாளர்கள் பலருக்கு காலாகாலத்தில் சம்பளம் கொடுக்கப்படவில்லை.

பஞ்சாலைகளில் பணம் டெபாசிட் செய்த குடும்பங்கள் பல கண்ணீர் வடித்து வருகின்றன.

விவசாயிகள் பலரிடம் பருத்தி விற்கப்படாமல் இருக்கிறது.

ஜின்னிங் பாக்டரிக்காரர்கள் நூற்பு மில்களுக்குப் பஞ்சு சப்ளை செய்துவிட்டுப் பணம் பணம் என்று வாயைப் பிளக்கிறார்கள்.

பதின்மூன்று கோடி ரூபாய் விலை மதிப்புள்ள நூல் கட்டுகள் கோவை மாவட்டத்தில் தேங்கிக் கிடக்கின்றனவாம்! மற்றும் பல கோடி ரூபாய் மதிப்புள்ள ஜவுளியும் தேக்கமுற்றுக் கிடக்கிறது.

மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் போன்ற கிளர்ச்சி செய்வதாகப் பயமுறுத்திச் சுமார் ஆயிரம் பேர்களுக்குமேல் சிறைச்சாலைகட்கும் போய் வந்துவிட்டனர்.

சென்னை மந்திரிகள் கூடிக்கூடிப் பேசி நிலைமையை எப்படி சமாளிப்பது என்று யோசித்து வருகிறார்கள்.

மூடப்பட்ட மில்களை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்று தொழிற்சங்கத் தலைவர் கூறுகிறார்கள். அதன் சாத்யக் கூறுகளை ஆராயக் கமிட்டிகளும் நியமிக்கப் பட்டுள்ளன.

இந்தியாவின் துணித் தேவைகளைப் பூர்த்திசெய்ய லங்காசயரையும், மான்செயடரையும் அனுமதித்திருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு முதலாவது உலக யுத்தத்தின் போதுதான் அதன் கஷ்டம் தெரிந்தது. அத்துடன் இந்தியாவில் மூண்டெழுந்த சுதேசி இயக்கமும் துணை சேர்ந்துகொள்ளவே ஆமதாபாத், பம்பாய் போன்ற இடங்களில் நிறுவப் பட்டிருந்த பஞ்சாலைகள் உயிர் பிடிக்கலாயின. இந்திய அரசாங்கம் இந்திய மில்களுக்குக் காப்புவரிபோன்ற எத்தகைய சலுகைகள் அளிக்காதிருந்துங்கூட இந்திய மில்கள் அந்நிய ஜவுளியுடன் போட்டியிட்டு தலையெடுக்கலாயின.

## 1. காலங்கடந்த கருவிகள்

இன்றைய நெருக்கடிக்கு முதற் காரணம், இந்திய மில்களில் பெரும்பாலானவையில் பூட்டப்பட்டுள்ள இயந்திர சாதனங்கள் மிகவும் பழசாகி அவற்றின் நூற்புச் சக்தி

குறைந்துவிட்டதாம்; அவை தற்காலத்துக் கேற்றவை யல்ல.

வற்றிப்போன பசுவிலிருந்து பால் கறந்து வியாபாரம் செய்ய முயன்றவன் கதை போன்று இம்மில்களின் கதையும் இன்று ஆயிற்று.

இயந்திரங்களைப் புதுப்பித்து அதன்மூலம் உற்பத்தியை துரிதப்படுத்தும் முயற்சியைத் தொழிலாளர்கள் எதிர்த் தார்கள், திறமை மிக்க இயந்திரங்களைப் பூட்டினுல் இப்போ துள்ள ஆட்களின் எண்ணிக்கை தேவைப்படாமற்போகும்; அதனுல் ஆள் குறைப்பு ஏற்படும் என்ற காரணங்களைக்கூறி அவர்கள் எதிர்த்தார்கள்; அவர்களுடைய எதிர்ப்புக்குச் சில அரசியல் பூசாரிகளும் ஆதரவு காட்டினுர்கள்.

இருபது வருடங்களுக்குமுன்னுல் இயந்திரங்களைப் புதுப் பித்திருந்தால் சுமார் நூறு கோடி ரூபாய் செலவில் அவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கும். ஆனுல் இன்றுள்ள விலைவாசி களும், கூலி நிலவரங்களும், நாணயமாற்று ஏற்றத் தாழ்வு களும் கணக்கிட்டுப் பார்த்தால் ஆயிரங் கோடி ரூபாய்கள் செலவிடவேண்டி வரும்.

இன்றுள்ள இந்திய பஞ்சாலைகளில் சுமார் இருநூறு மில் கள் இன்றோ நாளையோ இழுத்து மூடவேண்டிய நிலையில் உள்ளன. அவற்றை யாராலும் நடத்திச் செல்ல முடியாது. இந்த இருநூறு மில்களில், மில்லொன்றுக்கு ஆயிரம் பேர் கள் வேலை செய்வதாக வைத்துக்கொண்டாலும் இரண்டு லட்சம் பேர்கள் கண்டிப்பாய் வேலை இழந்தே தீர்வார்கள்.

## 2. நல்ல நிலையில் உள்ள மில்கள் எப்படி வேலை செய்கின்றன?

இரண்டாவதாக வற்றாத பசுக்களாவது வேளைக்கு நான்கு லிட்டர் கறந்தால் பரவாயில்லை. அவை கறக்கும் பால் அதை மேய்ப்பவன் கூலிக்கே போதுமானதாய் இல்லா திருந்தால் என்ன செய்வது? நன்ருக வேலை செய்யும்

256 பஞ்சாலைகளை ரிசர்வ் பாங்க் ஆராய்ச்சி செய்து பார்த்த தாம். இம்மில்களில் பங்குத் தொகைகள் எண்பது சதம் செலுத்தப்பட்ட முதலீடுகளை வைத்து வேலை செய்பவை. இவையனைத்தும் சேர்ந்து 1961–62ம் ஆண்டில் முப்பத்திரண்டு கோடி ரூபாய் இலாபம் அடைந்திருந்தன. ஆனால் 1965–66 ஆண்டு முடிய ஐந்தாண்டு காலத்திற்குள் இவற்றின் ஆதாயம் மூன்று கோடி இருபத்திரண்டு இலட்சத்திற்கு இறங்கிவிட்டது!

1961ல் பத்து ரூபாய் இலாபம் பெற்ற மில் 1966 ல் ஒரே ரூபாய்தான் இலாபமாகப் பெற்றது!

மற்றும் 123 மில்கள் தாங்க முடியாத நஷ்டத்தில் வேலை செய்தனவென்று ரிசர்வ் பாங் அறிக்கை கூறுகிறது.

இம்மில்லுகள் இம்மாதிரி நஷ்டத்தில் வேலை செய்வதால் அவற்றை நடத்தும் முதலாளிகள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பது திண்ணம்.

ஒரே ஒரு மாட்டை மேய்த்துப் பால் கறந்து ஜீவிப்பவன், அம்மாடு உதைத்தால் கஷ்டப்பட நேரிடும். பத்து மாடுகள் வைத்திருப்பவன் நிலைமை அப்படியல்லவே! ஒரு மாடு உதைத்தாலும் ஒன்பது கறக்குமல்லவா?

அதே நிலையில் பஞ்சாலை ஒன்றை மட்டும் நம்பி வாழும் முதலாளிகள் அபூர்வம். பல தொழில் ஸ்தாபனங்கள் அவர்களுடைய மேல் பார்வையில் இருப்பதால் அவர்கள் கஷ்டப்படவேண்டிய அவசியமில்லை.

## 3. அரசாங்கம் என்ற பெரிய பூதம்

பஞ்சாலைகள் இலாபத்தில் வேலை செய்தாலும், நஷ்டத்தில் வேலை செய்தாலும் அரசாங்கம் அவ்வளவாகப் பாதிக்கப் படுவதில்லை.

சீட்டாட்டத்தில் மேசைக் காசு எடுப்பவனுக்கு எவன் ஜயித்தாலென்ன, எத்தனை பேர் தோற்றாலென்ன? அவன்

ஒவ்வொரு ஆட்டத்துக்கும் மேசைக்காசு எடுக்கத் தவறுவதில்லையல்லவா?

அதேமாதிரிதான் அரசாங்கத்தின் நிலையும். மில்லுகளில் உற்பத்தியாகும் ஒவ்வொரு கட்டு நூலுக்கும் அரசாங்கம் எக்சைஸ் வரி வசூலித்து விடுகிறது. ஒவ்வொரு மீட்டர் துணிக்கும் வரிக் கணக்கிட்டு மில்கேட்டு வாசலிலேயே வசூலித்து விடுகிறது.

அந்த நூலும், துணியும், விற்கப்பட்டாலென்ன விற்கப்படாமல் தேங்கிக் கிடந்தாலென்ன, அரசாங்கத்துக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. பழங்காலத்தில் தொழிலாளரை வஞ்சித்துப் பிழைப்பவன் முதலாளி என்பார்கள். தற்காலத்தில், முதலாளிகளைக் கொன்று கொழுப்பது அரசாங்கம் என்ற முறை ஏற்பட்டுள்ளது. முதலாளி கவிழும்போது அவனுடன் சேர்ந்து தொழிலாளிகளும் கவிழ்க்கப்படுவது பிரத்தியட்ச உண்மையாகிவிட்டது.

ஆடுகளை அடித்து விழுங்குவது புலிகள் என்றால், புலிகளைக் கூட்டோடு விழுங்குவது அரசாங்கம்.

## 4. காலங் கடந்த கருத்துக்கள்

நமது நாட்டில் கவைக்குதவாத துருப்பிடித்துப் போன கருத்துக்கள், புத்தம் புதியவைபோல ஊசலாடிக் கொண்டிருப்பது நமது நாட்டைப் பிடித்த சனியனாகும்.

எல்லாக் கருத்துக்களும், எல்லாக் காரியங்களும் எல்லா மக்களுடைய நலனையே அடிப்படையாகக் கொண்டிராத நாடு இனிமேல் உலகத்தில் முன்னேற முடியாது.

முதலாளி வர்க்கமென்றும், தொழிலாளி வர்க்கமென்றும், பிரித்துக் கூறும் எண்ணம் மாறாத வரையில் எந்நாடும் க்ஷேமமுற முடியாது.

மனிதவர்க்கம் எந்த நாட்டிலும் உழைத்தால்தான் வாழ்க்கை நடத்த முடியும்.

அவ்வுழைப்புச் செம்மையுற மனம், உடல், பொருள் ஆகிய மூன்றும் இணைந்தும் இசைந்தும் செயல்பட வேண்டுமேயல்லாது, அவற்றை வர்க்கங்களாக கூறுபோட்டு, வர்க்கப் போராட்டத்தில் கருத்தைச் செலுத்தினால் மனித வர்க்கம் புனிதமடையாது.

பஞ்சாலைகளில் வேலை செய்யும் நிர்வாகிகளும், மேல் பார்வையாளர்களும், பல்வேறு தொழிலாளரும் அப்பஞ்சாலைகளைத் தங்கள் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்டுள்ள பெருஞ்சுமையாகவும், கடனாகவும் மதித்து, வஞ்சமின்றி வாய்மையும் ஒழுக்கமும் தவறாமல் உழைத்தால்தான் நாடும் நாட்டிலுள்ள மக்கள் யாவரும் நலம்பெற முடியும்.

## 5. பொன்முட்டையிடும் வாத்தைக் கொன்றால்...

அவ்வெண்ணமும், செயலும் இல்லாமல், பஞ்சாலைக்குள் வேலை செய்பவர்கள் தங்களை வெவ்வேறு வர்க்கங்களாக எண்ணி வர்க்கப் போரை வளர்த்துக்கொண்டே இருப்பார்களானால், இறுதியில் அரசாங்கம் என்ற பெரும்பூதம், அனைவரையும் அனைத்தையும் விழுங்கி ஏப்பமிட்டு விடும் படியான நிலைமை ஏற்படும்:

அந்நிலையில் துப்பாக்கி முனைக்குப் பயந்து நாட்டிலுள்ள எல்லாமக்களும், நல்லவர்களும், நயவஞ்சகர்களும், சோம்பேறிகளும், சுறுசுறுப்பாளர்களும், அறிவாளிகளும் அறிவற்ற மடையர்களும், திறமைசாலிகளும் திறமையற்ற வீணர்களும் எல்லோரும் ஒன்றுபோல் பாவிக்கப்பட்டுப் பிறந்ததுமுதல் இறந்து மண்ணில் புதைபடும்வரை அரசாங்கத்தின் அடிமைகளாகவே வாழ நேரிடும்.

## 6. இந்நெருக்கடி தீர ஒரே வழி

கூட்டுறவு முறையிலும் இதர முறையிலும் நூற்பு ஆலைகள் கட்டப்படுவதை நிறுத்தி வைக்கவேண்டும்.

கவைக்குதவாத மெஷினரிகளைச் சிறுகச் சிறுக மாற்றிப் புதுப்பித்தாக வேண்டும், அல்லது இலாபகரமாக வேலை செய்ய முடியாது என்று கருதப்படும் மில்களில் உள்ள

மெஷினரிகளைப் பிரித்து எடுத்து, அக்கட்டிடங்களில் வேறு தொழில்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

டெக்ஸ்டைல் கன்ட்ரோல் கைவிடப்படவேண்டும்.

எக்சைஸ் வரிகள் ஒன்றுக்குப் பாதியாகக் குறைக்கப்பட வேண்டும்.

தொழிலாளர்கள் தங்கள் கிராக்கிப்படிகளைப் பாதியாகக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

மில் பங்களார்களும் மானேஜிங் ஏஜண்டுகளும் தங்கள் ஆதாயத்தைச் சரிபாதியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

தொழிலாளிகள் உண்மை தவறுமல் ஒழுக்கத்தோடும், கவனத்தோடும், திறமையோடும் தங்களால் இயன்ற அளவு வேலையை முணுமுணுக்காமல் செய்வதுடன், தன்னடக்கம், மரியாதை, கீழ்படியும் சுபாவம், காலந் தவறுமையாகிய நற்பண்புகளில் திளைக்க வேண்டும். தங்களை ரட்சிப்பவர்களும், தங்களுடைய உண்மையான எஜமானர்களும் மில்களுக்கு வெளியே உள்ள பொதுமக்கள் தாம் என்பதை ஐயந்திரிபற உணர்ந்து, நாட்டுமக்களின் கவனத்தையும் அநுதாபத்தையும் பெறவேண்டும்.

பஞ்சாலை நிர்வாகிகளும் தற்சமயம் கையாண்டு வரும் மோசடிகளையும், பொய்புரட்டுகளையும், உடனடியாகக் கைவிடவேண்டும்.

## 7. எல்லாவற்றிற்கும் மேலாக

நாட்டில் தேங்கி நிற்கும் நூல்களையும், ஜவுளிகளையும் அரசாங்கம் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு போய்விற்று முதலாக்கி வரவேண்டும்.

அந்நிய நாடுகளில் நமது ஜவுளி விற்கும் அளவுக்கு அதாவது நமது ஜவுளி ஏற்றுமதிக்குத் தேவையான அளவுக்கு மேல், அந்நிய நாட்டிலிருந்து பஞ்சு இறக்குமதி செய்வதில்லையென்ற முடிவுக்கு வரவேண்டும்.

இப்போது நமது சினிமா ஸ்டார்கள் நமது மாணவிகள் மாணவர்களிடையே புகுந்துள்ள புதிய மோஸ்தர் ஆடைகளால் நாட்டுக்கும் நற்பண்புக்கும் ஏற்பட்டுள்ள அபாயங்களை அண்ணதுரை ஆய்ந்தறிந்து ஆவன செய்யவேண்டும்.

## 8. மற்றுமொன்று

இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது ஏற்பட்டுள்ள தொழில் மந்தம் தி.மு. கழக ஆட்சியின் பலனாகத்தான் ஏற்பட்டுள்ளது என்று காங்கிரஸ் அதிபர்கள் அளக்கும் பொய்யை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

தங்களுடைய படி அரிசித் திட்டத்தினால்தான் விலைவாசிகள் கிடுகிடுவென்று இறங்கி வருகின்றன என்று தி.மு. கழகத் தோழர்கள் அளக்கும் பொய்யையும் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட வேலைகள் எல்லாம் அநேகமாகப் பூர்த்தி செய்யப்பட்டோ பூர்த்தி செய்யப்படாமலோ நின்று விட்டதாலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப் படாததாலும்தான் நாட்டில் பொதுவாகத் தொழில் மந்த நிலைமையும் விலைவாசி இறக்கமும் ஏற்பட்டுள்ளதென்ற உண்மையை அரசியல் பூசாரிகள் உணர்ந்து, பொதுமக்கள் மத்தியில் விஷமப் பிரசாரம் செய்யாதிருந்தால் எல்லோருக்கும் நல்லது.

# 4

# ஜன்னல் அலங்காரம்

தெருவிலே ஒரு அழகான மங்கை போய்க்கொண்டிருந்தாள்.

அவள் மேனி அழகைக் கண்டு ஒரு வாலிபன் உல்லாசமாகச் சிகரெட் புகையை வாய் நிறைய இழுத்துக் காற்றில் மிதக்க விட்டான்;

செருப்புக் கடைக்காரன் அம்மங்கை அணிந்து செல்லும் அழகான காலணிகளை நோக்கினான்.

ஜவுளிக் கடைக்காரன் அப்பெண்மணி உடுத்தியிருந்த சேலையைக் கவனித்தான்.

தையற் கடைக்காரன் அவளணிந்திருந்த சோளியின் மீது தன் நோட்டத்தைச் செலுத்தினான்.

நகைக் கடைக்காரனின் இரு கண்களும் கழுகுபோல் அம்மங்கையின் காதுகளையும், கழுத்தையும், கைவளையல்களையும் ஊடுருவிப் பார்த்தன.

இவ்வாறாகப் பலபேர் கவனத்தைக் கவர்ந்த மங்கை தன் மருத்துவரின்மனைக்குள் நுழைந்து தனி அறையொன்றில் தனதுடலைச் சோதனைக் குள்ளாக்கினாள்.

அவள் மருத்துவமனையை நாடிச் செல்வதாக எவரும் எண்ணவே இல்லை.

இந்தியாவின் எழிலைக் காணவரும் அந்நியர்கள், நமது பக்ராநங்கலையும், ரூர்கலா, பிலாய், ராஞ்சி, ஆலைகளையும், சித்தரஞ்சன், சிந்திரி ஆகிய தொழிற்கூடங்களையும், பெரம்பூர் கோச் பாக்டரியையும், வானளாவும் கோபுரங்

களையும், மகாபலிபுரம் போன்ற கற்கோவில்களையும் கண்டு வியந்து செல்லக் காண்கிறோம்.

ஆனால் இந்தியாவின் உண்மை இந்தியாவின்—இருப்பிடமும் பிறப்பிடமும், உடலும் உயிருமான கிராமப்புறங்களும், அங்கு வதியும் இந்திய ஜனத் தொகையில் முக்கால் பாகத்திற்கும் அதிகமான ஆண் பெண் சிறுர்களும் அவர்கள் கண்களிற்படாமல், நாம் மேலே சொன்ன யுவதியின் ஆடை, அணி, அலங்காரங்களுக் கொத்தவைகளையே பார்த்துவிட்டுப் போகின்றனர்.

## மூன்று திட்டங்கள் போட்டோம்

இந்தியாவின் உருவத்தைதயே மாற்றியமைக்கும் எண்ணத்துடன் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டோம். ஆண்டுகள் பதினேழு கடந்துவிட்டன. நான்காவது திட்டத்தின் நகல் அடுத்த நவம்பர் மாதம் வெளிவரும் என்று சொல்கிறுர்கள்.

திட்டத்திற்கு ஆதாரமானவை மூன்று. ஒன்று நிலம், இரண்டு தொழில், மூன்றுவது மக்கள்.

நிலத்தில் பெரும்பகுதி கிராமங்களில்தான் இருக்கின்றன. தொழிலில் பெரும்பகுதி கிராமங்களில்தான் நடைபெறச் செய்யவேண்டும். மக்களில் பெரும் பகுதியினர் கிராமங்களில்தான் வதிகின்றனர். ஆனால் நாம் தீட்டிய மூன்று திட்டங்களும், கிராம நிலங்களையும், கிராமத் தொழில்களையும், கிராம மக்களையும் அடிப்படையாகவும் ஆதாரமாகவும் கொள்ளத் தவறிவிட்டன.

சேலத்து இரும்பாலைக்குத்தான் இன்றும் சிண்டு பிடித்துக் கொள்கிறுர்களேயன்றிச் சின்ன சேலத்தில், கள்ளிடைக்குறிச்சியில், வீரகனூரில், உள்ள மக்களையும், இளம் வாலிபர்களையும், கருத்திற்கொண்டு, அவர்கள் முன்னேற்றத்துக்குரிய திட்டங்களில் கவனம் செலுத்துவார் இல்லை.

## பெருமாள் பெத்தப் பெருமாள் ஆகிறார்

அகில இந்தியக்காதி, கிராமத் தொழிற் கமிஷன் என்பதாக ஒரு ஸ்தாபனம் முளைத்தது. அதன் தலைமைக் காரியாலயம் பம்பாய் நகரத்தில் உள்ளது. அதில் ஏராளமான மேஜை நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. அதன் தலைவருக்கு மாதம் நாலாயிரம் ரூபாய் சம்பளம்.

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு ராஜ்பகாதி கிராமத் தொழில் போர்டு உண்டு.

இப்படியாக இவையெல்லாம் ஒன்று சேர்ந்து கடந்த பதினேழாண்டுகளில் நூற்றி எழுபத்தேழு கோடி ரூபாய்களைக் கபளீகரம் செய்துள்ளன. இதில் கதரின் பெயரால் ஜீரணமானது நூற்று முப்பத்தைந்து கோடிகள்!

பம்பாயிலே கதர்க்கடை வைத்திருக்கும் கட்டிடத்திற்கு மாத வாடகை ஏழாயிரம் ரூபாய்!

டெல்லியிலே எத்தனை ஆயிரமோ?

சென்னையிலே கதர்பவனம் கட்டியதற்கு ஐந்து லட்சமோ, பத்து லட்சமோ தெரியவில்லை.

மாநிலந்தோறும் காதி டைரக்டருக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் இருக்கலாம். கதர் இலாகாவில் வேலை செய்பவர்கள் எல்லோரும் ஆபீசர்களே! அவர்கள் சம்பளங்களும், கிம்பளங்களும் மூன்று இலக்கத்தில் குறையாதவை.

ஜில்லாதோறும் காதி மார்க்கட்டிங் ஆபீசர் என்று ஒரு பதவியாம்! அவருக்குக் காரியாலயம், சிப்பந்திகள், அசிஸ்டெண்டுகள் எல்லாம் இருப்பார்கள்.

இவர்கள் கதரை மார்க்கட் செய்யும் இடங்கள் எவை தெரியுமா? சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ரயில்வேக்கள், ராஜ்யபோக்குவரத்து—Bus Transport (இங்கு கதர் வாங்க

மாட்டேனென்று அமைச்சர் சத்யவாணிமுத்து அம்மையார் கூறிவிட்டது ஞாபகமிருக்கலாம்) சர்க்கார் ஆஸ்பத்திரிகள், போஸ்டல் டிபார்ட்மெண்ட், காட்டிலாகா போன்ற இடங்கள்தாம்.

கதர், கதர், கதர் என்று கத்திய காந்தியார் உயிரோ டிருந்தபோது காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை கதரியக் கம் நடைபெறுவதற்கு கையிருப்பில் இருந்த மூலதனம் மொத்தம் இருபத்தைந்து கோடி ரூபாய் அல்ல. இருபத் தைந்து லட்சம் ரூபாய்கள்தான். அதில் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது ஆறு லட்சம்.

திருப்பூர் காந்தி நகரில்—அது என்னல் 1937-ல் ஸ்தா பிதம் செய்யப்பட்டது. ஆனல் என் பெயரையோ, படத் தையோ, உருவச் சிலையையோ நான் அங்கு பொருத்த வில்லை.—பதிமூவாயிரம் செலவில் ஒரு மத்ய கிடங்கு கட்ட வேண்டுமென்று நான் கேட்டேன். அகில இந்திய சர்க்கா சங்கத்துக்கு காந்திதான் தலைவர். நான் தமிழ்நாடு கிளையின் காரியதரிசி. அவர் ஏழைகள் பணத்தை கல்லிலும் காரையி லும் செலவழிக்கக் கூடாது என்றார். நான் கோபித்துக் கொண்டு 1941-பெப்ரவரி மாதம்- அச்சங்கத் தொண்டினின் றும் விலகினேன்.

இன்று காந்தி உயிரோடிருந்தால்—135 கோடி ரூபாய் காதியின் பெயரால் கரைந்து போயிருக்குமா?

## Rural Industries Commission

அகில இந்திய காதி கிராமத்தொழில் கமிஷன் இனிமேல் ரூரல் இண்டஸ்ட்ரீஸ் கமிஷன் என்று பெயர் பெறுமாம். ராஜ்யங்களிலும் ஸ்டேட் ரூரல் இண்டஸ்ட்ரீஸ் போர்டு என்று பெயர் மாற்றப்படுமாம்.

இப்பெயர் மாற்றத்தின் பிறகாவது நாட்டுப்புறங்களில் நவீன விஞ்ஞான முறைகளையும், முன்னேற்றங்களையும், கருத்

திற் கொண்டு மின்சார சக்தியாலும், மின்சாரம் இல்லாத பகுதிகளில் இதர சக்தியாலும், இயங்கவல்லதும், சிங்கர் தையல் மெஷின்களைப்போன்று மனித சக்தியால் இயங்க வல்லதுமான சிறுசிறு மெஷின்கள் புகுத்தப்பட்டு, நாட்டுப் புறங்களெல்லாம் நகர்ப்புறங்களாக மாற்றப்படுமா, அல்லது இப்போதுள்ளபடியே நாட்டுப்புறங்கள் நகரங்களால் சுரண் டப்படும் சந்தைகளாகவே நீடிக்குமா என்று அதுவரை உயிரோடிருந்தால் பார்ப்போம்.

## கதரின் சித்தாந்தம்

கதர் என்பது காந்தியின் சிந்தாந்தப்படி காரமடையில் உற்பத்தியாகி, காட்பாடி ரயில்வே கேட் கீப்பருக்குச் சப்ளை செய்யப்படும் மார்க்கட் பொருள் அல்ல.

கிராமங்களிலுள்ள ஒவ்வொரு வீட்டாரும் தங்கள் தேவைக்கு வேண்டிய நூலைத் தாங்களே தங்களுக்கு ஒழிந்த நேரத்தில் நூற்று, அதை அந்தக் கிராமத்துக் கைத்தறியில் நெசவு செய்வித்து உடுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான் காந்தியார் சொன்ன கதர்த் தத்துவம்.

இத் தத்துவத்தைத் தற்போதைய 'கதர் பக்தர்கள்' காற்றில் பறக்கவிட்டு விட்டு, கதரின் பேரால் 135 கோடி ரூபாய்களை ஏப்பம் போட்டிருக்கிறார்கள்.

பம்பாயில் உள்ள காதி கமிஷன் வாலாக்கள் டெல்லிக் கும், சென்னைக்கும், பிற நகரங்கட்கும் ஏரோபிளேனில்தான் பறப்பார்கள்!

## நகர்ப்புறக் கதர்க் கடைகள்

நகரங்களிலுள்ள அரசாங்கக் கதர்க் கடைகளையெல்லாம் இழுத்துப் பூட்டிவிட்டால், கிராம மக்கள் தாங்கள் நூற்று, நெய்து, உடுத்தியதுபோக மிச்சமுள்ளதைத் தங்கள் தலையில் சுமந்துவந்து, தயிர், பால், வெண்ணை, காய்கறிகள் விற்பது

போன்று விற்றுவிட்டுப் போவார்கள். அல்லது கதர் உடுத்த வேண்டும் என்று ஆவலுள்ள கதர் பக்தர்கள் கிராமங்களுக்குச் சென்று தேடி வாங்கி வருவார்கள்.

நகரங்களிலுள்ள வியாபாரிகள் இக்காரியத்தைச் செய்ய விருக்கும்போது, அரசாங்கம் கதர்க்கடைகளைப் போட்டி போட்டுக் கொண்டு நடத்த வேண்டிய அவசியமில்லையென்று தான் சொல்கின்றேன்.

மற்றும் இப்பணியில் சர்வ சேவா சங்கம் பட்டி தொட்டிகள் தோறும் வியாபித்திருக்கையில் அரசாங்கம் இத்தொழிலைச் செய்வது வீண் வேலையாகும்.

பற்பல தொழில்கட்கும் பயன்படக்கூடிய சிறு சிறு இயந்திரங்களைக் கண்டுபிடித்துக் கிராம மக்களுக்கு விநியோகிக்க நமது நாட்டு இன்ஜினியர்களை அரசாங்கம் ஊக்குவிக்கலாம். புதிய கருவிகள் செய்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கத் திட்டமிடலாம். பயன்படும் கருவிகளைப் பெருமளவில் உற்பத்தி செய்யத் திட்டங்கள் வகுக்கலாம்.

## நமது பொதுத்துறை ஸ்தாபனங்கள்

தனி மனிதர்கள் தொழில் நடத்தினுல், அத்தொழிலில் வரும் வருமானம் முழுவதையும் அவர்களே அடைகிறுர் என்றும், அதன் மூலம் அவர்களுடைய பொருளாதார சக்தி அதிகரித்து, அவர்களால் தேச நலன்கள் பாதிக்கப்படுமென்றும், அல்லது அத்தனியார்கள் தங்களது பொருளாதாரப் பெருக்கத்தால் அரசாங்க இயந்திரத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளவோ, அல்லது தேர்தல்களில் தங்கள் ஆட்களையே நிறுத்தி வெற்றி பெறச் செய்தோ, அரசாங்கத்தையே கைப்பற்றி ஆதிக்கம் செய்வார்கள் என்றும், தனியார் துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சுரண்டப்படுகிறுர்களென்றும், மற்றும் இவ்வாறுன பற்பல சித்தாந்தங்கள் பேசிப் பையப் பையச் சகல துறைகளிலும் சர்க்காரே புகுந்து விவசாயம், வாணிபம், உற்பத்தி, சுரங்கம், கனி

வளம், போக்குவரத்து, சுருங்கக் கூறுமிடத்துச் சகல தொழில்களையும் சர்க்காரே ஏற்று நடத்துவதென்பதே சோசலிசமாகும்.

இந்தச் சோசலிச சித்தாந்தப்படி அரசாங்க இயந்திரத்தையும், அதை இயக்குகின்ற அதிகாரிகள், சிப்பந்திகள், நிர்வாகிகள், மந்திரிகள், அரசியல் பூசாரிகள் தவிர்த்து நாட்டிலுள்ள சகல மக்களும் நம்பத்தகாத அயோக்யர்களாவர்.

இத்தகைய 'அயோக்யர்'களால் நடத்தப்படும் தொழில்கள்மீது கன்ட்ரோல்கள், லைசென்சுகள், பெர்மிட்டுகள், கோட்டாக்கள், எக்சைஸ் வரிகள், விற்பனை வரிகள், வருமான வரிகள், ஏற்றுமதி இறக்குமதி வரிகள் போன்றவை விதித்து அவர்கள் தலை தூக்க முடியாமல் செய்வது சோசலிச சித்தாந்தத்தின் மற்றொரு நடைமுறையாகும்.

இத்துடன் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகள், கெரோக்கள், முற்றுகைகள், நாசவேலைகள், மெதுவாக வேலை செய்யும் முறைகள் முதலியன சோசலிசம் வளம் பெறச் செய்யும் உபாயங்களாகும்.

இம்மாதிரியான சித்தாந்தத்தோடு நமது நாட்டில் கடந்த இருபதாண்டில் பல அரசாங்கத்துறை ஸ்தாபனங்களும், அரசாங்க அதிகாரத்துக்குட்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களும் நடைபெற்று வருகின்றன.

இவற்றில் பெரும்பாலானவை தொடர்ச்சியாக வருடந்தோறும் நஷ்டத்தின் மேல் நஷ்டம் காட்டி வேலை செய்து வருகின்றன.

ஹிந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் என்ற ஸ்தாபனம் 1081 கோடி ரூபாய் மூலதனத்தை முடக்கிக் கொண்டிருப்பது 124 கோடி ரூபாய் நஷ்டமடைந்துள்ளது. 2393 கோடி மூலதனம் கொண்டு வேலை செய்யும் பொதுத்துறை ஸ்தாபனங்கள்

எல்லாமாகச் சேர்ந்து 1962-63ம் வருஷத்தில் 67 கோடி ரூபாய்கள்தான் சம்பாதித்துள்ளன.

4662 கோடி ரூபாய் மூலதனத்தைக் கொண்டு வேலை செய்யும் பொதுத்துறை ஸ்தாபனங்கள் எல்லாமாகச் சேர்ந்து கடந்த வருஷத்தில் அதாவது 1967-68ல் முப்பத்தைந்து கோடி ரூபாய்களை இழந்திருக்கின்றன!

## திட்டங்களின் நோக்கம் நிறைவேறிற்று?

வறுமையின்மீது போர் தொடுத்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம் என்று சவால் கூறித்தானே திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன?

ஆனால் நடந்தது என்ன?

மக்களின் வறுமையின் மீது போர் தொடுக்கப்படாது, மக்களின் சுய முயற்சி, ஊக்கம், சிந்தனை, உடல்வளம், பொருள் வளம், செய்திறன் ஆகியவற்றின்மீது திட்டமிட்டுப் போர் தொடுக்கப்பட்டு, அந்த நற்பண்புகள் யாவும் சிதறடிக்கப்பட்டு வருவதையே கண்கூடாகக் காண முடிகிறது.

அம்மட்டோ? மக்களின் அடிப்படைச் சுதந்திரங்கள் பலவும் பறிபோயுள்ளன.

சர்வாதிகார முறை கொண்ட திட்டங்களினால் கடந்த பதினைந்தாண்டுகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்குப் பதிலாகக் குறைவுற்றதுடன் நில்லாது வாழ்க்கையின் அத்யாவசியப் பொருட்கள் பலவற்றிற்குப் பற்றாக்குறையும் பஞ்சமும் ஏற்பட்டுள்ளன.

மக்கள் தங்கள் கச்சைகளை இறுக்கிக் கட்டிக் குறைவான உணவுண்டு நாடோறும் வலிவும் பொலிவும் இழந்து வருதல் கண்கூடு,

பதினைந்தாண்டுகட்கு முன் முப்பது ரூபாய் சம்பாதித்தவன் இன்று தொண்ணூறு ரூபாய் சம்பாதிப்பவனாகத் தோன்றலாம். ஆனால் பதினைந்து வருடங்கட்குமுன் முப்பது ரூபாயைக்கொண்டு முப்பது நாட்கள் மூன்று வேளையும் வயிறார உண்டு காலம் கழித்த அதே மனிதனால் இன்று தொண்ணூறு ரூபாயைக் கொண்டு பதினைந்து நாட்கள் காலந்தள்ளுவது அரிதாய் இருக்கின்றது என்பதுதான் நாம் திட்டங்களால் அடைந்த பலாபலன்.

பதினைந்தாண்டுகட்கு முன் நமது நாட்டில் துணிப் பஞ்சம் இருந்திருக்கலாம். ஆனால் இன்று உற்பத்தியாகும் துணிமணிகளை வாங்கி உடுத்துபவர்களுக்குப் பஞ்சமேற்பட்டுள்ளது.

நகரப்புறங்கள் எல்லாவற்றிலும், கிராமங்கள் பலவற்றிலும் மக்கள் குடியிருக்கப் போதுமான வீடுகள் கிடையா. குடிக்கும் தண்ணீருக்கும் அடிதடிப் பஞ்சம்.

1951ல் அறுபத்தேழரைக் கோடி ரூபாயாக இருந்த எக்சைஸ் வரிகள் 1967ல் ஆயிரத்து இருநூற்றைம்பது கோடியாக உயர்ந்துள்ளதென்றால் பண்டங்களின் விலைகளும் உயர்ந்து, மக்களின் வாங்கும் சக்தியும் குறையாமல் என் செய்யும்?

ஆங்கிலேயன் இந்நாட்டை ஆண்டிருந்தபோது 300 கோடியாக இருந்த பட்ஜெட் செலவு இன்று 3000 கோடியாக உயர்ந்துள்ளது.

நேர்முகமாகவும், மறைமுகமாகவும் விதிக்கப்பட்டுள்ள இவ்வரிப்பளுவைத் தாங்கமுடியாமல் பாமர மக்கள் பட்டினி கிடக்கப் பற்பல தொழில்கள் மந்தநிலை எய்தியுள்ளன.

## தாங்கமுடியாத கடன்சுமை

இந்த டம்பாச்சாரித் திட்டங்களினால் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் அரசாங்கம் பன்னீராயிரம் கோடி ரூபாய்

கடன் பெற்றிருக்கிறது. இதற்கு வருடா வருடம் வட்டி செலுத்த மட்டும் அயல் நாட்டுச் செலவாணி முந்நூறு கோடிக்குச் சம்பாதித்தாக வேண்டும். உள்நாட்டுக் கடனுக்கு முந்நூற்றைம்பது கோடி ரூபாய்கள் வட்டி செலுத்த வேண்டும்.

நாட்டில் நடமாடும் கள்ளப்பணப் பெருக்கமும், கள்ளக் கடத்தல் வியாபாரங்களும், பிற ஊழல்களும், சகலமும் இத்திட்டங்களினுல் ஏற்பட்டுள்ள விளைவுகளாகும்.

கெய்ரான்களும், பட்னுய்க்களும், முந்திராக்களும், தேஜாக்களும், அவர் போன்றவர்களும் இத்திட்டங்களினின் றும் பிரசவமான குழந்தைகள்.

இத்திட்டங்களினுல் ரூபாயின் மதிப்புக் குறைந்தது. நமது ஏற்றுமதி வர்த்தகம் சீர்குலைந்தது.

உண்ணும் உணவுக்கு ஒவ்வொரு நாளுங்கிழமையும் பிற நாட்டுக் கப்பலின் வருகையை எதிர்பார்க்க வேண்டிய தாயிற்று.

## வேலையில்லாத் திண்டாட்டம்

ஒவ்வொரு பொதுத்துறை திட்ட ஸ்தாபனத்திலும், பஞ்சாயத்து யூனியன், மாதர் நல இலாகா, அரிஜன நல இலாகாகளிலும், சோவியத் பாணியில் தேவைக்கு மீறிய ஆட்கள் சேர்க்கப்பட்டும், இந்த நாட்டில் சுமார் இரண்டு கோடி மக்கள், படித்துப் பட்டம் பெற்றவர்களும், திறமை சாலிகளும், வேலை செய்யத் தகுதியுடையவர்களும் இன்று யாதொரு வேலையுமின்றித் திண்டாடிக் கொண்டிருக்கின் றனர்.

பெருந் தொழில்களான பஞ்சாலைகள், சணல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள், இரும்பாலைகள், இன்ஜினீரிங் தொழிற் சாலைகள், நிலக்கரிச் சுரங்கங்கள் காகித மில்லுகள் போன்றவை அரசாங்கத்தின் தவருன திட்டங்களின் பலனுக

நோயுற்றுக் கிடக்கின்ற காரணத்தால் வேலையற்றோர் தொகை நாடோறும் கூடிக்கொண்டே இருக்கின்றது.

அநேக தொழிற்சாலைகளைப் பற்றியுள்ள நோய்கள் தீராத புற்று நோய்களாகக் காட்சி தருகின்றன.

மக்களின் சேமிப்பு சக்தி குறைந்து வருகிறது. மூலதன மார்க்கட்டுக்கு முடக்கு வியாதி கண்டுள்ளது.

கூட்டுறவுத் துறையில் வேலை செய்யும் அமராவதி சர்க்கரை ஆலையில் 1964-65ல் 42 லட்சம் நஷ்டம். 65-66ல் 45 லட்சம் நஷ்டம். அதற்குப் பிந்திய வாண்டுகளில் 57 லட்சம் நஷ்டம். இவ்வாலைக்குச் சேர்க்கப்பட்டுள்ள பங்கு தாரர்கள் சுமார் மூவாயிரம். மூலதனம் சுமார் முப்பது லட்சம். இத்தனை நஷ்டத்தையும் எப்படித் தாக்குப் பிடிக்கிறதென்று கேட்கிறீர்கள்? சர்க்கார் கடன் கொடுத்திருக்கிறார்கள்!

கூடிக்கெடுப்பது கூட்டுறவு என்று நான் சொன்னால் சண்டைக்கு வருவீர்கள்.

# 5

# இரும்பும்—கரும்பும்

## இந்தியாவின் முதுகெலும்பு

சிலநாட்களுக்கு முன் இந்திரா காந்தி அம்மையார் பக்கரா இரும்புத் தொழிற்சாலை நிறுவனத்தில் பேசும்போது இரும்பாலைகள் இந்தியாவின் பொருளாதாரத்துக்கு அடிப் படையானவையென்று தெரிவித்தார். அவ்வம்மை கூட்டுக் கிளிபோல் அவருடைய தகப்பனால் வளர்க்கப்பட்டவர். எனவே தந்தையின் சொற்களைத் தத்தைபோல் பேசி விட்டார்கள்!

இந்தியாவுக்கு உடனடியாக வேண்டுவது இரும்பல்ல; உணவு.

இந்தியமக்களில் முக்கால் வாசிக்கும் அதிகமானவர்கள் இந்தியாவின் கிராமப்புறங்களிலே வசிப்பவர்கள். அவர்களனை வரும் விவசாயத்தையும், அதன் சார்புத் தொழில்களையும் செய்து வாழ்பவர்கள். இந்தியாவின் தேசிய வருமானத்தில் சரிபகுதி விவசாயத்தினின்றுதான் கிடைக்கிறது. உணவு தான் மக்களின் அடிப்படைத் தேவைகளில் முதலாவதாகும். உண்ணுதற்கு உணவில்லையேல், எண்ணுதற்கு ஒன்றுமே யிராது. பத்தும் பசி வந்திடப் பறந்து போய்விடும்.

## விளம்பரங்கள் வேண்டாம்

கிராமப் பஞ்சாயத்து சபைகள் ஏற்பட்டவுடனே, கிராம ராஜ்யம் வந்துவிட்டதாகவும், காந்தியின் கனவு பலித்து விட்டதாகவும், இராம ராஜ்யம் மலர்ந்து விட்டதாகவும் பறை கொட்டினார்கள். தமிழ் நாட்டில் உள்ள நாலாயிரமோ,

நாற்பதினுயிரமோ பஞ்சாயத்தார்களை சென்னைக்குப் பவனி வரச் செய்து பெரிய தேசியத் திருவிழாக் கொண்டாடினுர்கள், காந்தியின் அடிச் சுவடுகளைப் பின்பற்றிச் செல்வதாகத் தம்பட்டம் அடித்தார்கள்.

லட்சோப லட்சம் ரூபாய்களைச் செலவழித்து மோட்டார் கார்களிலும் பஸ்களிலும் செல்வோர் கண்களில் படும்படி நெடுஞ்சாலைகளில் சுண்ணும்புக் கால்வாய்களும், தச்சுப்பட்டறைகளும், தோல் பதனிடும் சாலைகளும், கோழிப் பண்ணைகளும் கட்டி பெரிய பெரிய விளம்பரப் பலகைகளைத் தொங்க வைத்தார்கள். மக்கள் வாழும் கிராமங்களுக்குள் இவைகளைக் கட்டினுல், அவை நெடுஞ்சாலைகளில் போவோர் கண்களில் படாதல்லவா. ஆகையினுல் அவற்றை விளம்பரத்துக்காகவே வீதிகளில் அமைத்தார்கள்.

## எத்தொழில் உண்டு கிராமத்திலே?

பஞ்சாயத்து யூனியன்களில் அதிகாரிகளுக்குப் பஞ்சமில்லை.

அங்கே தொழில் விஸ்தரிப்பு அதிகாரியொருவர் இருக்கிருர். ஆனுல் கிராமங்களில் நவீன விஞ்ஞான உதவியைக் கொண்டு ஒரு சிறு தொழிலேனும் ஆரம்பிக்கப்படவில்லை.

நாட்டில் எத்தனையோ ஆயிரம் இன்ஜினீயர்கள் வேலையில்லாமல் இருப்பதாகப் பத்திரிகைகளில் படித்தோம். ஆனுல் நமது கிராமப்புறங்களில் ஒரு இன்ஜினீயர் மருந்துக்குக் கூடக் கிடையாது. கிராமந்தோறும் ஒரு சிறிய லேத்தும் ஒரு பௌண்டரியும் ஒரு இன்ஜினீயரும் இருந்தால், கிராமத்தில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் வாலிபர்கள் வேலை பழகவும் பயிற்சி பெறவும் வசதி ஏற்படும். விவசாயத்திற்கும் கிராம வாழ்விற்கும் வேண்டிய சகல பொருட்களும், அங்காங்கு செய்யப்படுவதுடன், மோட்டார் பம்பு செட்டுகள், போரிங் மெஷின்கள், டிராக்டர்கள், கலப்பைகள், சைக்

ளிகள் போன்ற எண்ணற்ற கருவிகள் செய்யவும் செப்ப னிடவும் அவை பயன்படும்.

அரசாங்கத்தில் சிறு தொழில் இலாகா இருப்பதும் உண்மைதான். ஆனால் அவை யாவும் கிராமப்புறங்களை அறவே புறக்கணித்துவிட்டு மோட்டார் வாகனங்கள் செல்லும் மெயின் ரோடுகளில்தான் தொழிற்பேட்டை விளம் பரங்களுடன் காட்சி தருகின்றன.

## இரசாயன உரச்சாலைகளும்—உர விநியோகமும்

ஏப்ரல் மாதம் 21-ந்தேதி கோரக்பூரிலே முப்பத்தி மூன்று கோடி ரூபாய் உரச்சாலையொன்றை பிரதமர் இந்திரா அம்மையார் துவக்கிவைத்துப் பேசுகையில் இந்தியாவின் வறுமையைப் போக்க இத்தகைய தொழிற்சாலைகள் தேவை யென்று சொன்னார்.

நமது நாட்டில் சிந்திரி போன்ற உரச்சாலைகள் பலகோடி ரூபாய் செலவில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ளன. அத்தொழிற் சாலைகள் பற்பல காரணங்களால் முழு அளவு வேலை செய்வ தில்லை யென்பது பிரசித்தம். இரண்டாவது திட்ட காலத்தில் அவை நூற்றுக்கு முப்பத்தாறு சதம்தான் உற்பத்தி செய்தன. எனவே அவற்றின் மீது முடக்கப்பட்டுள்ள மூலதனமும், இயந்திரங்களும் சரிபாதிக்குமேல் பிரயோஜனமற்றுக் கிடக் கின்றன. இந்நிலையில் கோரக்பூரில் முப்பத்திமூன்று கோடி செலவில் மற்றொரு உரச்சாலை எதற்கு?

வெளிநாடுகளிலே ரசாயன உரங்கள் விற்கப்படும் விலைகள் மிகமிகக் குறைவாயுள்ளன. ஆனால் அவற்றை இறக்குமதி செய்யும் நமது காருண்ய சர்க்கார் அதன் மீது கண்மூடித்தனமாக விலையைக் கூட்டி விவசாயிகள் தலையில் கட்டுகிறார்கள்.

நமது உரச்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் உரத்தின் விலைக்குத் தாரதம்மியம் கிடையாது. அதன் தரத்தைப் பற்றியும் பேசவேண்டாம்.

அண்மை நாடான பாகிஸ்தானத்தில் ரசாயன உரம் எண்ணூறு ரூபாயுக்கும் குறைவாகக் கிடைக்கிறது. ஆனல், நமது நாட்டிலோ அதன் விலை 2345 ரூபாய்! பிற நாட்டைவிட மூன்று மடங்கு அதிகம். ஆயிரம் டன் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலையில் நானூறு டன்கள்தான் உற்பத்தியானுல் விலை குறைவாகவா இருக்கும்?

இந்த லட்சணத்தில் நமது தொழிலாளர்கள் வேலை செய்யாமலே கூலி உயர்வு கேட்பதும், வேலை நிறுத்தப் போராட்டங்களும், கெரோ என்னும் முற்றுகைகளும், தேசீய உடைமைகளுக்கு விளைவிக்கும் சேதங்களும் நம்மை எங்கே இட்டுச் செல்கின்றன?

## விவசாயப் புரட்சியாம்!

மொரார்ஜி தேசாய் இவ்வாண்டின் பட்ஜெட்டின்மீது பேசுகையில் விவசாயத் துறையில் பெரும் புரட்சி ஏற்படும் அளவுக்குத் தமது பட்ஜெட் சாதகமளிப்பதாகக் கூறினர் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகை 1179 கோடி ரூபாயில் விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது வெறும் 53 கோடி ரூபாய்தான்!

ஏற்கனவே தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகி வரும் இரும்பாலைகட்கு ஒதுக்கப்பட்டுள்ளது 153 கோடி ரூபாய்!

இது போதாதென்று இவ்வாண்டு பெக்காரோ இரும்பாலைக்கு மேலும் ஒதுக்கப்பட்டுள்ளது 110 கோடி ரூபாய்.

விவசாயத்துக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இந்த 53 கோடியில் சரிபகுதிக்கு மேல் ஆபீசர்கள், சிப்பந்திகள், ஜீப் கார்கள் விழுங்கி விடுமெனச் சொல்லவா வேண்டும்.

சுண்டைக்காய் காற்பணம் சுமைகூலி முக்காற் பணம் என்று சொல்வதற்கொப்ப, அடடா நமது சமுதாய நலத் திட்ட காரியங்களில் மேஜைகளும், நாற்காலிகளும் போட்டுக்

கொண்டு மின்விசிறிகளுக்கடியில் உட்கார்ந்திருக்கும் அதிகாரிகளும் சிப்பந்திகளும் எத்தனை கோடியை விழுங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

## விவசாயம் விருத்தியாகுமா?

விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வேண்டும். வெல்லத்தின் விலையேறி விட்டது, பருப்பின் விலை கூடிவிட்டது. நெல்லுக்குக் கொள் முதல் விலை இப்போதுள்ளதற்கு மேல் கூட்ட முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கும்வரை விவசாய அபி விருத்தி காண முடியாது.

விவசாயப் பொருட்கள் நல்ல விலைக்கு விற்கப்பட்டு விவசாயிகள் கையில் ரொக்க முதல் சேர்ந்தால்தான் (Capital Formation) அவர்கள் சுயபலத்தோடு விவசாயம் செய்வார்கள்.

அதை விடுத்து, அவர்களைச் சதா பாப்பர்களாக (Pauper) வைத்துக்கொண்டு, அவர்களுக்கு எளிய வட்டிக்குக் கடன்களும், குறைந்த விலைக்குப் பூச்சி மருந்துகளும், இதர மானியங்களும் வழங்கிக் கொண்டிருந்தால் விவசாயம் நாளுக்கு நாள் நலிந்து கொண்டுதானிருக்கும்.

ஒரு கிலோ வெல்லத்துக்கு நான்கணா கூடி விற்றால் ஒரு விவசாயி அவ்வாண்டில் பத்தாயிரம் ரூபாய் கைமுதல் சேர்த்துவிட முடியும். அம்முதலைக்கொண்டு அவன் கன ஜோராக விவசாயத்தைப் பெருக்குவான்.

ஒரு கிலோ வெல்லம் இரண்டு ரூபாயுக்குப் பதிலாக ஒன்றே முக்கால் ரூபாயுக்கு ஒருவனுக்கு விற்கப்பட்டால் அவன் அந்தக் கால் ரூபாயுக்குப் பீடியோ, சிகரெட்டோ வாங்கி உறுஞ்சுவான். அல்லது ஒரு கோப்பை சாயா வாங்கிக் குடிப்பான், அல்லது சினிமாவுக்குப் போவானேயல்லாது, அக் கால் ரூபாயை உண்டியலில் போட்டு நாட்டின் தொழிலையோ பொருளாதாரத்தையோ வளம்பெறச் செய்யமாட்டான்

என்பதை என்று உணர்ந்து, கட்டுப்பாடுகளைக் கைவிடுவார்களோ அதுவரை விவசாயப் பொருளாதாரம் சீரடையப் போவதில்லை.

## சர்க்கரையோ, சர்க்கரை!

சர்க்கரை நாவுக்கு இனிமையானாலும் அதைப்பற்றி இந்தியாவில் பேசுவது கசப்பாகத்தானிருக்கிறது.

இந்தியாவில் மற்றெல்லாப் பாகத்தையும்விட யு. பி. எனப்படும் உத்தரப்பிரதேச மாகாணத்தில் தான் மிகப் பெருவாரியான நிலங்களில் கரும்பு விளைவிக்கப்படுகிறது. அதைப் பற்றிய புள்ளி விபரங்கள் என் கைவசம் இல்லை.

அம்மாகாணத்தில் கரும்பு விளையும் நிலங்கள் கோதுமை விளைவிப்பதற்கு மிகவும் ஏற்றவை.

ஆனால் அங்கு கரும்பு ஏகர் ஒன்றுக்கு இருபது டன்களுக்கும் குறைவாகவே விளைகிறது. அக்கரும்பில் சர்க்கரைச் சத்தும் அதிகம் இல்லை.

மகாராஷ்டிரத்தில் ஒரு ஏக்கருக்கு ஐம்பது முதல் அறுபது டன் வரை விளைகிறது.

தமிழ்நாட்டில் ஏக்கருக்குச் சராசரி நாற்பது டன்னுக்குக் குறைவில்லாமல் விளைகிறது.

எனவே உத்தரப்பிரதேசத்தில் கரும்பு விளைவிப்பதைப் போன்ற முட்டாள்தனம் வேறு இருக்க முடியாது. அங்குள்ள கரும்புகளையெல்லாம் வெட்டியெறிந்துவிட்டுக் கோதுமை விளைவித்தால் நாம் அமெரிக்காவிடம் கோதுமைக்காகத் தொங்குசெலாம் போடவேண்டியிராது.

உத்திரப்பிரதேசத்தில் கரும்பு விளைவிக்க வேண்டாமென்று சட்டம் போட்டுத் தடைசெய்ய முடியாது என்பது உண்மைதான். ஆனால் யாதொரு சட்டமும் தூண்டுதலும், பிரசாரமும் இல்லாமலே அம்மாகணத்தவர்

ஒரே நாளில் கரும்புத் தோட்டங்களை வலிய வலிய அழித்து விடச் செய்ய மிகவும் இலேசான உபாயம் இருக்கிறது.

என்னவென்று கேட்கிறீர்கள்? இதோ சொல்கிறேன்!

1. இந்தியாவைத் தவிர உலகத்தில் கரும்பு விளையும் மற்றெல்லாப் பாகத்திலும் நயமான சர்க்கரை டன் ஒன்றுக்கு ரூபாய் ஐநூறுக்கும் குறைவாகவே விற்கப்படுகிறது.

2. ஆனல் இந்தியாவிலோ சர்க்கரையின் கட்டுப்பாட்டு விலை டன் ஒன்றுக்கு 1200 ரூபாய். கட்டுப்பாடு இல்லாத விலை அதைக்காட்டிலும் மூன்று மடங்கு அதிகம் என்பது நாடறிந்த ரகசியம்.

3. இந்த லட்சணத்தில் நாம் இங்கிருந்து சர்க்கரையை ஆறுயிரம் மைலுக்கு அப்பாலுள்ள அமெரிக்க நாட்டிற்குக் கப்பலில் ஏற்றிக்கொண்டு போய் அவர்களுக்குத் தொங்கு செலாம் போட்டு டன் ஒன்று ஐநூறு ரூபாயுக்கும் குறைவாகவே விற்று வருகிறோம்.—இதைப் போன்ற வடிகட்டின சும்பத்தனம் வேறு ஏதாவது இருக்க முடியுமா?

4. அயல்நாட்டில் நாம் சர்க்கரையைக் கொண்டுபோய் விற்பதற்குப் பதிலாக, அங்கிருந்து சர்க்கரையை வாங்கிக் கப்பலில் கொண்டுவந்தால் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்படும்.

5. முதல் தடவையாகப் பத்து லட்சம் டன் சர்க்கரை வாங்குவதாக வைத்துக் கொள்வோம். அதன் விலை ஐம்பது கோடி ரூபாயாகும்.

6. அதை இந்தியாவில் கொண்டுவந்து ஒரு டன் அறுநூறு ரூபாயாக விற்கப்படுமானல், உத்திரப்பிரதேச வாசிகளின் கரும்பு விலையும் கிடுகிடென விழுந்துவிடும். அவர்கள் சொல்லாமல் கொள்ளாமல் கரும்பை அழித்து விட்டுக் கோதுமை விளைவிக்கத் தொடங்கி விடுவார்கள் அல்லவா?

7. அதைச் செய்யவல்ல அறிவும், திறனும், துணிவும் நமக்கு இருக்கிறதா?

# 6

# மீண்டும் காந்தி வரவேண்டும்

ஐம்பதாண்டுகளுக்கு முன் காங்கிரசிலே ஹாட், பூட், கோட் மாட்டிய பெரிய மனிதர்கள் பெரும்பாலராக இருந்தனர். அவர்கள் படித்துப் பட்டம் பெற்றவர்களாதலால், அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதையே தங்கள் லட்சியமாகக் கொண்டிருந்தார்கள். எனவே இதர பாமர மக்களின் கவனத்தைக் காங்கிரஸ் கவரவில்லை.

1919ல் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கப்புறம் காங்கிரஸ் ஒருபொதுஜன இயக்கமாகத் திகழலாயிற்று.

ஆங்கிலேய ஆட்சியின்மீது மக்கள் மனதிலே வெறுப் புணர்ச்சி வளர்ந்தது. அரசியல், பொருளாதாரம், கல்வி கலாசாரம் ஆகிய சகல துறைகளிலும் பிரிட்டிஷார் நம்மை அடிமைப்படுத்தித் தேசத்தைப் பல்வேறு துறையிலும் சுரண்டி நம்மை வறுமையிலாழ்த்தி வருகிறார்கள் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் வேரூன்றி நிலைத்தது.

எனவே அந்நியராட்சியை இந்நாட்டினின்றும் விரட்ட வேண்டும் என்ற மாபெரும் லட்சியத்தால் தூண்டப்பெற்ற மக்கள் காங்கிரஸைச் சூழலாயினர்.

மகாத்மா காந்தி வகுத்த மூவகைப் பகிஷ்காரமும், ஒத்துழையா இயக்கமும், சத்யாகிரகமும், சட்டங்களை மீறிச் சிறை செல்லும் திட்டமும், கதர், தீண்டாமை யொழிப்பு, வகுப்பு ஒற்றுமை, தேசியக் கல்வி, மதுவிலக்கு, மொழிவாரி மாகாணம், பொது மொழி, போன்ற வேலைத்திட்டங்களும்,

தேசமெங்கும் ஒரு லட்சியத்தையும் அந்த லட்சியத்தை அடைய சர்வபரித்தியாகமும் செய்ய வேண்டுமென்ற சங்கல்பமும் மக்கள் மனதில் குடி கொண்டது.

படித்தவர்களாலும், பதவி வேட்டைக்காரர்களாலும் சூழப்பட்டிருந்த காங்கிரஸ், தேசபக்தர்களாலும், தேச சேவிகைகளாலும், சாதாரண மக்களாலும் சூழப்பட்டது.

படித்தவர்களும் படியாதவர்களும், செல்வச்சீமான்களும் சீமாட்டிகளும், சின்னஞ்சிறு குடிசைகளில் வாழ்ந்திருந்த ஏழை மக்களும், நகரத்தார்களும், நாட்டுப்புற மக்களும், ஒருங்கே வந்தேமாதரம், பாரத் மாதாவுக்கு ஜே, அல்லாகு அக்பர், வெள்ளேயனே வெளியேறு, சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை என்று நாடெங்கும் ஆர்ப்பரித்து எங்கள் சொத்து, சுகம், தொழில், வீடுவாசல், மனேவி, மக்கள் யாதொன்றையும் லட்சியம் செய்யாமல் தேசவிடுதலே ஒன்றையே தங்கள் ஒரே லட்சியமாகக்கொண்டு, கைகாசையும், கைப்பொருளேயும் செலவு செய்து, பிரிட்டிஷாரின் அடக்குமுறைச் சட்டங்களேத் தவிடுபொடியாக்கிச் சிறைக் கோட்டங்களேத் தங்கள் தவக்கோட்டங்களாக மேற்கொண்டனர்.

## தேச விடுதலே பெற்றபின்

1947 ஆகஸ்டு, 15ந் தேதி தேசவிடுதலே பெற்றபின் தேச மக்களின் ஒரே லட்சியம் நிறைவேற்றப்பட்டபின், காந்தியடிகள் சொற்படி காங்கிரஸ் கலேக்கப்பட்டிருந்தால், காங்கிரஸ் மகாசபையின் உருவம் காந்தியடிகளின் உருவத்தைப் போன்று மக்கள் மனதில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும்.

ஆனல் அது நடைபெறவில்லே.

காங்கிரசைக் கட்டிக் காத்து, தேச விடுதலேப் போரில் சிறை சென்ற 'பெரிய மனிதர்கள்' தேசாதிபதிகளாயினர்.

பெரிய பெரிய பங்களாக்களில் வசிக்கலாயினர். பெரிய பெரிய கார்களில் பவனி வந்தனர். தங்களுக்கு நிரந்தர ஞாபகச் சின்னங்களை ஏற்படுத்திக் கொண்டனர். தங்கள் உருவச்சிலைகளைத் தாங்களே அமைத்துக் கொண்டனர்.

தேசவிடுதலைப் போரில் உயிர்நீத்த உத்தமர்களுக்கு சிலை வைக்கப்படவில்லை.

## லட்சிய மாறுதல்

தேசவிடுதலைப் போராட்ட காலத்தில், எல்லோரையும் காங்கிரசில் சேர்த்து விடுதலைப் போரை வலுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், தெருவில் செல்வோரை காங்கிரஸ்காரன் முகமலர்ந்து நமஸ்கரிப்பதை தன் லட்சிய மாகக் கொண்டிருந்தான்.

தேச விடுதலை பெற்ற பின் தெருவில் செல்பவர்கள், தன்னை நோக்கிப் பல்லிளித்து கைகள் கூப்பி வணங்க வேண்டு மென்று எதிர்பார்த்தான்.

அதுமட்டுமா? என்னப்பா தம்பி சௌக்கியமா வென்று, எங்கு கேட்டுவிடப் போகிறார்களோ வென்று பயந்து, கண்டாலும் காணாதமாதிரி முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விடுவான்.

காமா, சோமா, ராமா, சுப்பா வா போகலாம் என்று வீடு வீடாய்ச் சென்று தன் தோழர்களைத் திரட்டிச் சேர்ப் பதை வழக்கமாகக் கொண்டிருந்த காங்கிரஸ்காரன், பட்டமும் பதவியும் வந்த பிறகு காமனும், சோமனும், ராமனும், சுப்பனும் தனக்குப் போட்டியாய் வருவதைத் தடுக்கும் பொருட்டு, அவர்களைக் காங்கிரஸ் ஸ்தாபனத்தி லிருந்து விரட்டுவதையே ஒரு பண்பாடாக வளர்த்துக் கொண்டான்.

எனவே காங்கிரஸிலே, தோழமை மாறி வேறு என்னவோ தோன்றிவிட்டது.

0-, 6NA45, E
N25

## புதிய லட்சியம்

'அரசியல் அடிமைத் தனத்தை ஒழித்ததோடு நமது லட்சியம் நிறைவேறவில்லை, பொருளாதார அடிமைத் தனத்தையும் ஒழித்தாகவேண்டும்' என்று கூறி, சோசலிசம் என்றும், சோசலிசபாணி என்றும், ஜனநாயக சோசலிசம் என்றும் தங்கள் லட்சியத்துக்கு நாமகரணம் சூட்டினுன்.

ஆனுல் கதர்த்துண்டைப் போர்த்துக்கொண்டு மூன்ரும் வகுப்பில் பிரயாணம் செய்து, காங்கிரஸ் ஆபீஸ் பென்ஜுகளில் படுத்துறங்கியவர்களெல்லாம் மந்திரி பிரதானிகளாகி பங்களாக்களில் வாழ்ந்து, தங்களுக்கு சென்றவிடமெல்லாம் ஜே கோஷங்களும், மலர் மாலைகளும், அணிவகுப்புகளும் எதிர்பார்த்தார்கள்.

துண்டு பீடிக்கு ஏங்கித் திரிந்தவர்களெல்லாம், கையில் சிகரெட் டப்பாவுடன் காணப்பட்டார்கள். காலில் செருப்பில்லாமல் திரிந்தவர்களெல்லாம் ஆகாய விமானத்தில் பறக்கலானுர்கள்.

சுருங்கக் கூறுமிடத்து சுதந்திரப் போராட்ட காலத்தில் பிக்ஷாதிபதிகளாயிருந்த பலர் சுதந்திரம் பெற்றபின் லக்ஷாதிபதிகளாய் மாறலாயினர்.

## எஞ்சியவர்கள் யார்?

ஊரைக் கொளுத்தும் ராஜாவுக்குத் தீவட்டி பிடிப்பவர்கள் மந்திரிகளாவது போல், காங்கிரசின் புதிய எசமானர்களுக்குச் சில எச்சை பொறுக்கிகள்தாம் தாஸாதி தாசரானுர்கள். ஸ்தல ஸ்தாபனங்களிலும், சட்டசபைகளிலும் அங்கத்தினர்களாகிக் கொள்ளையடிப்பதைத் தவிர்த்து வேறு தொழில் இல்லாதவர்கள் பர்மிட், கோட்டா லைசென்ஸ் பெற்றுப் பொருள் சேர்ப்பவர்கள், பஸ்ரூட் முதலாளிகள், மில் அதிபர்கள், தொழில் அதிபர்கள் ஆகியவர்களும், அன்ருட வாழ்வுக்குக் காங்கிரசே கதியென்று காங்கிரஸ் எசமா

னர்களைக் கண்டவுடன் மேல்துண்டை இடுப்பில் கட்டி, கும்பிடு போட்டு வயிறு வளர்த்த "தியாகிகள்" சிலருமே காங்கிரசில் எஞ்சி நின்றார்கள்.

பிறந்த தினங்கள் கொண்டாடுவது, ஊர்வலங்கள் நடத்துவது, தேர்தல் காலங்களில் தெருத் தெருவாய் அலைவது, ஆகியவைகளே இவர்களது பிரதான லட்சியமாகவும், தொழிலாகவும் அமைந்தது.

## சாயம் வெளுத்தது

1952, 1957, 1962 ஆகிய தேர்தல்களில் காங்கிரஸ் பலம் குன்றாதிருந்ததே ஒழிய எள்ளளவும் கூடவில்லை.

சிவன் கோவிலுக்குப் போகிறவன் சிவன் கோவிலுக்கும், தேவாலயத்துக்குப் போகிறவன் தேவாலயத்துக்கும், மசூதிக்குப் போகிறவன் மசூதிக்கும் போவதுபோலக் கடந்த மூன்று தேர்தல்களிலும் காளைமாட்டுப்பெட்டியில் வோட்டுப் போட்டவர்கள் அதிலேயே பக்தி விஸ்வாசத்துடன் போட்டு வந்தார்கள். காங்கிரசும் எப்போதும் போலவே எல்லா மாகாணங்களிலும் ஜெயித்துக்கொண்டே வந்தது.

1967 தேர்தலில்கூட அநேக இடங்களில் காங்கிரசுக்கு வழக்கமான வோட்டுகள் கிடைத்தன. எனவே அது தோற்றதற்குக் காங்கிரசுக்கு மக்கள் ஆதரவு குறைந்துவிட்டதெனச் சொல்வது சரியாகாது.

முந்திய தேர்தல்களில் ஒவ்வொரு தொகுதியிலும் மும்முனை, நால்முனை, ஐமுனைப் போட்டிகளால் எதிர்க்கட்சி வோட்டுகள் சிதறிக்கொண்டே இருந்ததால் காங்கிரசின் சாயம் வெளுக்காமலே இருந்தது. ஆனால் கடந்த தேர்தலில் எதிர்க்கட்சிகள் உடன்பாடு கண்டதால் பலவிடங்களில் காங்கிரஸ் வழக்கமான வாக்குகள் பெற்றும் வெற்றி காண முடியாது போயிற்று.

## தி. மு. க. வெற்றிக்கு ஆதாரம்

வடக்கு வாழ்கிறது.

தெற்குத் தேய்கிறது.

வடக்கு வேறு.

தெற்கு வேறு.

தனிமாநிலம் வேண்டும்.

தமிழுக்கு ஆபத்து

என்ற நச்சுக் காற்று தமிழகத்தில் வீசியபடியால், அதை உட்கொண்ட பாமர மக்களும், பள்ளி மாணவர்களும் புதியதோர் தேசபக்தி வெறிகொண்டு வீட்டைவிட்டுப் பாடசாலையை விட்டு, தொழிலைவிட்டு, தொந்தாட்சணைகளைவிட்டுத் திராவிடநாடு, திராவிடநாடு எனக் கூக்குரலிட்டு, இமயவரம்பன் கதைகள் கூறிக் கூத்தாடி, இசை நாடகமாடி வீறுகொள்ளலாயினர்.

காங்கிரசின் தேச விடுதலைப் போர்க்காலத்தில் எவ்வித உணர்ச்சிப் பிரவாகம் மக்கள் மனதில் பெருகியதோ அவ்வாறே பெருக்கெடுத்து, அதனினும் கடுமையான தற்கொலைகள், துப்பாக்கிச் சூடுகள், போலீசாரைப் பெட்ரோலிட்டுக் கொளுத்துதல், வண்டி வாகனுதிகளைக் கொளுத்துதல், சூறையாடல், சிறை செல்லுதல் போன்ற வன்செயல்களில் ஈடுபடலாயினர்.

எனவே 1967 ல் இராஜாஜியின் சாணக்கியமும், தி.மு.க. தொண்டர்களின் தியாக சேவையும் உணர்ச்சியும் ஒன்றுகூடி வெண்ணைபோல் திரண்டு, பரத கண்டத்தின் எம்மாகாணத்திலும் காணமுடியாத ஒற்றை எதிர்க்கட்சி தமிழகத்தில் அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது.

## புதுச் சாணக்கியம்

தமிழ்நாடு தமிழருக்கே என்று தி. மு. க.வினர் முழங்கிய சங்கு பிற மாநிலங்கள்தோறும் எதிரொலிக்கக் கண்டோம்.

மராட்டியர்களின் சிவசேனை ஆர்ப்பாட்டங்களும் கர்னாடகத்தில் தமிழ் சினிமா எதிர்ப்பும், வடகோடியிலுள்ள அசாமிலும் அசாமியரல்லாதவர் வெளியேறு என்ற ஆரவாரமும், நதிப்போராட்டங்களும், எல்லைப் போராட்டங்களும் அந்தந்த மாநில மக்களின் மனதில் 'தேசீய வெறியைக்' கிளப்பக் கையாளப்படும் புதுச் சாணக்கியமே அன்றி வேறல்ல.

பாகிஸ்தானியர் கிளப்பும் போரிரைச்சலுக்கும், பாரதத்தினர் கிளப்பிவரும் மொழிவாரி, மாகாணவாரிக் கூச்சலுக்கும் அந்தரத்தில் யாதொரு வேற்றுமையும் இருப்பதாகத் தெரியவில்லை.

சோசலிசத்தை லட்சியமாகக் காட்டி மக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லையாகையால் இப்புதிய சாணக்கியம் கையாளப்படுகிறதென்பது வெள்ளிடைமலை.

## பத்தினி - பரத்தையர் சண்டை

பத்தினிகட்கும், பரத்தையர்கட்கும் இடையே மூண்டுள்ள சண்டைபோன்று, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கட்சியும் சோசலிசத்துக்கு வக்காலத்து வாங்கியுள்ளன.

தென்முனையிலிருந்து நக்ஸல்பாரிவரையுள்ள, தி. மு. க; பி. சோ; ச. சோ; காங்கிரஸ்; வலதுசாரி, இடதுசாரி கம்யூனிஸ்டுகள் ஒவ்வொன்றும் தான் தான் சரியான சோசலிசப் பத்தினி, மற்றவர் பரத்தையர் என்று கூப்பாடு போட்டு வருகின்றன.

இவ்வாறு இவைகள் கூச்சல் போட்டுவருவதால் மக்கள் மனதிலே பெருங்குழப்பமும், தொழில் மந்தமும், கட்டுப்பா

டின்மையும், தர்ம வீழ்ச்சியும், அதர்ம எழுச்சியும், மனித உணர்ச்சியற்ற மிருகவுணர்ச்சியும் பொங்கிவரும் பலாபலன் களையே காண்கிறோம்.

## ஆஷாடபூதிகள்

காமராாசருக்கு எவனோ ஒருவன் ஒரு கைகடியாரம் பரிசாகக் கொடுத்தானும். அதை அவர் கையில் கட்டிக்கொள்ளாமல் தன் மடியில் வைத்துக்கொண்டாராம். ஏன் என்று கேட்டதற்கு 'நான் விலையுயர்ந்த கடியாரத்தைக் கையில் கட்டியிருந்தால் அதைக் கண்ணுறும் ஏழைகள் என்ன நினைப்பார்கள்? ஏழைகள் எல்லாம் கைகெடியாரம் கட்டிக்கொள்ளும் காலம் வரும்போது நானும் கட்டிக்கொள்வேன்' என்று அவர் சொன்னதாக அவரது அறுபத்தாருவது பிறந்தநாளையொட்டிச் சென்றவாரம் சென்னையினின்றும் வெளியான 'நவசக்தி' செய்தித்தாள் பிரசித்தம் செய்துள்ளது.

சென்னையிலே தமக்கொரு உருவச்சிலை நிலைநாட்டிக் கொண்ட காமராசரே இப்படிச் சொன்னுரென்றால் இதனிலும் பெரிய ஆஷாட பூதித்தனம் வேறென்ன இருக்க முடியும்? விபசாரி பதிவிரதா தர்மம் பற்றிக் காலட்சேபம் செய்வதும் இப்படித்தானிருக்கும்.

## மற்ஜெரு காந்தி வேண்டும்

இம்மாதிரியான மாயமந்திர சோசவிச ஜாலங்களால் நாடும் மக்களும் உருப்படப் போவதில்லையென்பது திண்ணம்.

சத்யம், தருமம், நீதியாகியவைகளை லட்சியமாகக் கொண்டு, எல்லோரும் வஞ்சனையின்றி உழைத்து, அனைத் துயிர் ஒன்றென எண்ணி, அரும்பசி யெவர்க்கு மாற்றி, மனத்துளே பேதா பேதம், வஞ்சம், பொய், களவு, சூது, சினத்தையும் அகற்றிச் செயல்பட்டு, அன்னை, பிதா, ஆசான், குரு,

தெய்வம் எனப் பணிந்து, ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் என்ற உறுதிபெற்று, சாதி மத பேதங்கள் யாவையும் மறந்து, இமயமுதல் குமரிவரை ஒரே தேசம் ஒரே தேசமக்கள், வாழ்விலும் தாழ்விலும் எல்லோரும் சமமேஎன்ற உணர்வு பூண்டு வர்க்கபேதமும், சாதிபேதமும் கற்பிக்கும் வாதங்களைக் கைவிட்டுக் காந்திய சகாப்தத்திற்கு மக்களை அழைத்துச் செல்ல நம்மிலோர் காந்தி தோன்றுதவரையிலும் நமக்கும் நமது நாட்டுக்கும் விமோசனம் இல்லையென்றே தோன்றுகிறது.

சத்தியம் வெல்க என்பது நமது லட்சியமாகவும், பாரதம் அனைத்தும் ஒன்றே என்பது நமது நம்பிக்கையாகவும், உழைத்து உண்பதே நமது கௌரவமாகவும் நாம் கொள்ள வேண்டும்.

# 7

# மனித சுதந்திரம்

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இல்லையேல் சாவினை அளிப்பாய் கொலைவாளே என்று சார்லஸ் டிக்கன்ஸ் என்ற ஆங்கிலக் கதாசிரியர் தமது "இருநகரக்கதை" எனும் நூலிலே கூறியிருக்கிறார். இன்று நீக்ரோவரின் சுதந்திரத்தை நிலைநாட்ட முயன்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடி கொலைக் கரத்துக்கு ஆளானார் என்ற செய்தியைப் படித்தோம்.

காற்றும், வெளிச்சமும், நீரும் வாழ்விற்கு எப்படி இன்றியமையாதனவோ, அப்படியே டிக்கன்ஸ் கூறிய மூன்றும் உலகில் இன்பமயமான சூழ்நிலையைத் தோற்றுவிக்க இன்றியமையாத உபாயங்களாம்.

அவற்றில் முதலாவதாய சுதந்திரம்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் கருத்தாம்.

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கைகொட்டிச் சிரியாரோ என்று பாரதியார் பாடினார்.

வறுமையும் கவலையும் அவரைச் சுற்றிச் சூழ்ந்திருந்த நேரத்திலும் அவர் "வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ" என்று முழக்கினார்.

அவர் பாடிய நாட்களில் இந்நாட்டை ஆங்கிலேயன் ஆண்டிருந்தான். அவனைக் கப்பலில் ஏற்றிக் கரைகடத்த வேண்டுமென்று பாரதியார் நெஞ்சம் துடித்தது. அவர் மாண்டு இருபத்தாறு ஆண்டுகட்கப்புறம் காந்தியார் பாரதியாரின் கனவை ஈடேற்றினார்.

நம்நாடு சுதந்திரம் பெற்றது. இன்று நமது நாட்டை நாமே ஆளுகின்றோம் என்று பெருமிதத்தோடு கூறிக்கொள்கிறோம்.

## தனிமனித சுதந்திரம்

ஒரு நாடு தன்னைத்தானே தன்னிச்சைப்படி ஆண்டு கொள்ள எப்படிச் சுதந்திரம் அத்யாவஸ்யமோ, அப்படியே அந்நாட்டிலுள்ள ஒவ்வொரு தனிமனிதனும் தன்னிச்சைப் படி (தன்னைத்தானே ஆண்டுகொள்ள) வாழ்க்கை நடத்தச் சுதந்திரம் இருந்தாக வேண்டும்.

ஒரு சுதந்திர நாடு பிறநாட்டு நிர்வாகத்தில் எப்படித் தலையிடக்கூடாதோ, அப்படியே ஒரு சுதந்திர மனிதன் பிற மனிதனுடைய வாழ்வில் தலையிடக்கூடாது.

ஒரு சுதந்திர நாட்டின்மீது பிறிதொரு நாடு எப்படி ஆதிக்கம் செலுத்த முடியாதோ அப்படியே ஒரு சுதந்திர மனிதன்மீது பிறமனிதன் ஆதிக்கம் செலுத்த முடியாது.

இன்று நமது நாட்டின் ஒரு பாகத்தின்மீது உரிமை கொண்டாடிக் கம்யூனிசச் சீனன் உட்புகுந்திருக்கிறான். அவனை விரட்டியடிப்பதே இன்று நமக்கும் நமது அரசாங்கத் துக்கும் முதற்கடமையாக அமைந்துள்ளது. ஒவ்வொரு நாட்டுக்கும் எல்லைக் கோடுகள் நெடுங்காலத்துக்கு முன்பே வகுக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தாண்டிவரும் ஆக்கிரமிப் பாளரைத் தடுத்து நிறுத்தவே இராணுவம் நிறுவப் பட்டுள்ளது.

அவ்வாறே ஒவ்வொரு தனிமனிதனுடைய சுதந்திரத்தில் (உரிமையில்) பிறமனிதன் தலையிடாது பார்த்துக் கொள் வதும் நமது கடமையாகிறது. அரசாங்கத்தின் பிரதான ஜோலியும் அதுவேயாகும். ஒவ்வொரு மனிதனுடைய உரிமையும் சட்டபூர்வமாக வரையறுக்கப்பட்டுள்ளது. அவற்றை அரசாங்கமோ பிரஜைகளோ பறிக்காது பார்த்துக் கொள்ள நியாயஸ்தலங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அரசியல் சட்டங்களுக்குப் புறம்பாகத் தன்னைப் போலவே பிறரையும் பாவித்தொழுக வேண்டும் என்ற தார்மிகவுணர்ச்சியை வளர்ப்பதற்கு அறநெறிகளும் ஆன்ம போதங்களும், மதக்கோட்பாடுகளும் நமது வாழ்வில் ஊடுருவி நிற்கின்றன.

சுகாதாரம், போக்குவரத்து, பொதுஜனப் பாதுகாப்பு, தேசப் பாதுகாப்பு, நல்லொழுக்கம், அமைதி, சமாதானம் ஆகியவை நிறைந்த நல்வாழ்வை உத்தேசித்தும் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் அவற்றை மதித்து நடக்கக் கடமைப்பட்டிருக்கிறான். அந்த அளவுக்குச் சமூகநலன் கருதி அவன் தனது சுதந்திரத்தை விட்டுக் கொடுத்து வருகிறான்.

இவற்றிற்குப் புறம்பாகத் தனிமனிதனுடைய சுதந்திரத்தில் தலையிட எவருக்கும் உரிமை கிடையாதெனலாம்.

மனிதன் தன் குடும்பத்துடன் வாழும்போது, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தமது உரிமைகளைச் சிறிது விட்டுக் கொடுத்து வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அந்த அளவுக்கு அவர்கள் அநுபவிக்கும் இன்பதுன்பங்கள் ஒரோர் வகையில் பாதிக்கப்படுகின்றன.

அவ்வாறே பல குடும்பங்கள் சேர்ந்து ஒரு சாதியாகவோ, பிரிவினராகவோ கூடி வாழும்போது பொதுவான கட்டுத் திட்டங்களை அநுசரித்து நடக்க வேண்டியிருக்கிறது.

சகிப்புத் தன்மையும், பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் சுருங்கும்போது கருத்து வேற்றுமைகள் விரிவடைந்து பிணக்கும் பூசலும் கிளம்புகின்றன.

பல சாதியார்கள் அல்லது வகுப்புக்கள் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அம்மதத்தின் பழக்கவழக்கங்கள், ஆசாரஅநுஷ்டானங்கள் அவர்கள் கடைப்பிடித்து வாழ வேண்டிய அளவிற்கு ஒத்துப்போகவேண்டிய நிர்ப்பந்தங்களால் சுதந்திரத்தின் தன்மை மாறுபாடடைகிறது.

இவ்வாருக, அரசாங்கச் சட்டதிட்டங்கள், குடும்பத் தொல்லைகள், சாதிசமூகப் பிடுங்கல்கள், மதக்கோட்பாடுகள் ஆகியவற்றுடன் பொருளாதார நிர்ப்பந்தங்களும் கூடுமிடத்துத் தனிமனிதனுடைய சுதந்திரத்துக்குப் பெருந் தலைவலி ஏற்படுகிறது.

## சுதந்திரத்தின் முக்கியம்

ஆனால், எந்நிலையிலும், சுதந்திரம் காக்கப்பட வேண்டிய பொருளாகும். அப்பொருள் நாம் உள்ளும்புறமும் இழுத்து வரும் மூச்சுக்கொப்பாகும். அஃதில்லையேல் வாழ்வுமில்லை. வாழ்விருந்தும் பயனிராது. எனவே மனிதன் தன் சுதந்திரத்தைக் காக்க எதையும் இழக்கச் சித்தமாயிருப்பான். இதற்கு ஆயிரங்கோடி சான்றுகள் உலக வரலாற்றில் காணலாம். தான் காதலித்த மங்கையை மணம்புரியும் சுதந்திரத்துக்காக எட்டாம் எட்வர்டு பட்டத்தைத் துறந்த கதை ஒன்றே சுதந்திரத்தின் வன்மையை வலியுறுத்தப் போதுமானதாம்.

வறுமை, அநீதி, குழப்பம் சூழினும் அவற்றை உடனடியாகத் தீர்க்கும் பொருட்டு, சுதந்திரத்திலார்வமுள்ள மனிதன் அதை விட்டுக் கொடுக்க இசைய மாட்டான்.

பொருளாதார முன்னேற்றம் உற்பத்தி விநியோகப் பெருக்கங்கள் எம்முறையில் சித்திப்பதாயினும் சரி, அதற்கு ஒரே ஒரு உரைகல் தானுண்டு; தனிமனித சுதந்திரத்துக்கு அம்முறை தீங்கு விளைவிப்பதாக இருக்கக்கூடாது என்பதாம்.

பிறருடைய சுகதுக்கங்களில் பங்கு கொள்ளவும், கூடி வாழவும் மனிதன் கடமைப்பட்டிருக்கிறான்.

மனிதன் தனித்து வாழப் பிறந்தவனல்ல, யூதர்களுடைய பழைய ஏற்பாட்டில் கூறியுள்ளவாறு கடவுள் முதலில் ஆதாம் என்ற மனிதனைப் படைத்தார். பிறகு யோசிக்கலானார். ஆதாம் தனித்துவாழ முடியாது. அவனுக்குத் துணை வேண்டுமெனக் கருதி ஏவாளையும் படைத்தார். இல்லற

மல்லது நல்லறமல்லவென நாமும் தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வருகிறோம்.

தனித்து வாழ்தலைச் சுதந்திர வாழ்வுடன் ஒப்பிட்டுரைக்க வொண்ணுது தனித்து வாழ்தலென்பதும் முற்றுந் துறந்த முனிவர்களாலும் முடியாத காரியம்.

உடலும் உளமும் சுதந்திரமாகச் செயல்பட வாய்ப்பிருக்க வேண்டும். உடலைக் கட்டிப் போடலாம். உள்ளத்தைக் கட்டிப்போட எவராலும் முடியுமா? சிந்தையை அடக்கியே சும்மாவிருக்கின்ற திறனரிது காண் என்று நம்மவர் கூறியிருக்கிருர்கள்.

## கருத்துச் சுதந்திரம்

"மற்றெல்லாச் சுதந்திரத்தைக் காட்டிலும் நான் அறிவதற்கும், சொல்வதற்கும், என் மனதுக்குகந்ததை விவாதிப்பதற்கும் எனக்குச் சுதந்திரம் கொடு" என்று கருத்துச் சுதந்திரத்தை ஏற்படுத்திக் கூறினர் ஜான் மில்டன் என்பார்.

நமது மனக்கோயிற்கதவை எப்போதும் திறந்து வைத்திருக்க வேண்டும். புதுக்கருத்துகள் நுழையவும் உண்மையறியவும், தவறுகளையுணர்ந்து திருத்தவும் திருந்தவும், அதற்குச் சுதந்திரம் இருக்குமானுல் மற்றெல்லாச் சுதந்திரங்களும் தாமே அமையும்.

உண்மை என்பது மனிதர் தம் அநுபவத்தால் அறியப்படுவது. பலரது அநுபவங்களையும் நாம் கூட்டிச் சேர்த்துப் பார்க்கும்போது நமக்கு உண்மை புலனுகும். ஆதலால் நாம் பிறர் பெறும் அநுபவங்களைக் கண்திறந்து பார்க்கவேண்டும்.

ருஷிய நாட்டில் புரட்சி எழுந்தது. சார் மன்னரின் மகுடம் உருண்டது. நிலப் பிரபுத்வம் தடம் புரண்டது. சொத்துக்களெல்லாம் மக்களுக்கே சொந்தமென முழங்கப்பட்டது. ஆனுல் அவை அரசாங்கச் சொத்தாக உருப் பெற்றது. எல்லோரும் அவரவரிஷ்டப்படி உழைக்கட்டும்,

ஊதியமடையட்டுமென்று பறையொலிக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் எல்லாம் அரசாங்கத்தின் சர்வாதீனத்துக் குள்ளடங்கி விட்டது.

கடந்த நாற்பதிதைந்தாண்டுகளில் அந்நாட்டு மக்கள் அநுபவத்தால் கண்ட உண்மையென்ன?

ஏற்றமும் தாழ்வும், ஏக்கமும் துயரும், அங்கு ஒழிந்து விட்டனவா? எல்லோரும் தத்தமக்குரிய தொழில் புரிந்து வாழ்கின்றனரா?

இட்டார்க்கு இட்டபடி, ஆண்டிக் களந்தபடி என்று நமது நாட்டில் ஆண்டவனை முன்னிறுத்திச் சொல்வார்களே அந்தப்படி, அந்நாட்டிலே அரசாங்கம் இட்டபடியும் அளந்த படியும்தான் மக்கள் பெற்று வாழமுடியும் என்ற சட்டங்கள் ஏற்பட்டுள்ளன.

எல்லோருக்கும் ஒன்றுபோல் சம்பளமும் இல்லை. ஆளும் வர்க்கம் ஒன்று. ஆளப்படும் வர்க்கம் மற்றொன்று என்று இரண்டு வர்க்கங்கள் அங்கு நிலைபெற்று வாழ்கின்றன.

நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப்புல்லுச் சுமைதான் என்ற பொதுமொழி அந்நாட்டில் மெய்க்காட்சி யாக விளங்குகிறது. ஆனால் அக்கருத்தை அந்நாட்டிலுள்ள எவரும் வாய்விட்டுச் சொல்ல முடியாது.

## ரஷ்யாவின் லட்சணம்

சோவியத் நாட்டில் உலகத்தை மிரட்டும் ராக்கட்டுகள் செய்கிறார்கள். ஆனால் மக்களுக்குத் தேவையான பக்கட்டு கள் செய்யப்படுவதில்லை. சோவியத் நாட்டில் உலகினில் பர பரப்பூட்ட சந்திரமண்டலத்துக்குப் பாய்கிறார்கள். ஆனால் அந்நாட்டுமக்கள் தரையினில் நடக்கவல்ல செருப்புகள் செய் யப்படுவதில்லை. அங்கே அணுகுண்டுகளுக்குப் பஞ்சமில்லை. ஆனால் அப்பத்துக்கும் பணியாரத்துக்குந்தான் அடிதடியாய் இருக்கிறது.

அந்நாட்டில் இயந்திர சாலைகள் வானளாவக் கட்டுகிறார்கள். ஆனால் மக்கள் குடியிருக்க வசதியான வீடுகள் கட்டப்படுவதில்லை.

அந்நாட்டுக்கு விஜயம் செய்யும் பெரிய மனிதர்களுக்கு எல்லாவற்றையும் அணிவகுத்து ஜோடித்துக் காட்டுகிறார்கள். அந்நாட்டில் உள்ள அடுப்பங்கரைகளையும், படுக்கையறைகளையும் யாரும் கூட்டிக் கொண்டுபோய்க் காட்டுவதில்லை.

அந்நாட்டு மக்களுக்கு விஞ்ஞான போதம் வாரி வாரி அளிக்கிறார்கள். ஆனால் ஆன்ம போதம் மருந்துக்கும் அங்கு அளிக்கப்படுவதில்லை.

## அரசாங்கத்தின் தொழில்

உண்ணும் உணவுக்கும் பஞ்சம். பொய்யும் பித்தலாட்டமும் அனந்தம். இவை யாவும் அந்நாட்டு மக்கள் தம் அநுபவத்தால் கண்ட பேருண்மைகள்.

அநுபவத்தைப்போன்ற பேராசிரியனை அகிலம் கண்டதில்லை. இன்று காரல்மார்க்ஸ் உயிருடனிருந்து அவர் பெயரால் நடைபெறும் ருஷிய அநுபவத்தை ருசித்திருப்பாரேயானால்.........!

அநுபவ சித்தாந்தம் பற்றி ஜான்லாக்கி என்ற சித்தாந்தி சொல்லுகிறார்;

"ஒரு மனிதன் அப்பத்தை அப்பமாகக் கருதுகிறான். மற்றொருவன் அதனை இயேசுவின் சதையாகக் கருதுகிறான். இதனால் யாருக்கு என்ன நஷ்டம்?"

"கிறிஸ்தவர்களுடைய புதிய ஏற்பாட்டைத் தேவனுடைய வார்த்தைகளென்று ஒரு யூதன் நம்பவில்லையானால், அதனால் மனித உரிமை எதுவும் முழுகிவிட்டதாகத் தெரியவில்லையே"

"கிறிஸ்துவ யூத, இஸ்லாமாகிய மூன்று மதங்களையும் சேராத ஒருவன் பழைய புதிய இரண்டு ஏற்பாடுகளையும் நம்பவில்லையானால் அவன்மீது நாசகாரன் என்ற குற்றத்தைச் சுமத்தித் தண்டிக்கத்தகுமா?

"உண்மையைப் பற்றிய சித்தாந்தங்களைக் காப்பது அரசாங்கத்தின் கடமையல்ல; தேசத்தைப் பாதுகாப்பதும், மனிதருடைய உடலையும், உரிமைப் பொருளையும் பாதுகாப்பதே அரசாங்கத்தின் தொழிலாகும்."

"உண்மை தன்னைத் தானே காத்துக்கொள்ளும். அதற்கு எவர் துணையும், பரிவும், பாதுகாப்பும் தேவையில்லை" என்பதே ஜான்லாக்கியின் கருத்தாம்.

"உண்மையும் பொய்மையும் உலகில் கட்டிப் புரண்டு குஸ்தி போடட்டும். அதற்குத் தங்குதடையும், கட்டுப்பாடுகள் போன்ற பாதுகாப்புகளும் யாதும் வேண்டாம். உண்மையை வலியுறுத்த மனித சுதந்திரம் ஒன்றே போதும். அதற்குச் சட்டதிட்டங்கள், கட்டுக்கோப்புகள், தணிக்கையாளர்கள், லைசென்சாதிகள் தேவையில்லையென்று மில்டனார் சொல்லுகிறார்.

உண்மை யாருக்கும் ஏகபோகவுரிமையல்ல. தங்களுக்குத் தான் உண்மை தெரியும், தாங்கள்தான் உண்மைக்கு உறைவிடம் என்று ஒருவனோ, ஒருகூட்டமோ, ஒரு கட்சியோ கருதுவது அறிவின்மையாம்.

சர்வமதங்களையும் மக்கள் பயின்றால் உண்மை தெரியாது மயங்குவரென்று மதாசாரிகள் எண்ணுவதும் மடமையாம்.

சத்தியம் நிலைபெறச் செய்யச் சாந்தம் வேண்டும். சகிப்புத் தன்மை வேண்டும். பரஸ்பர அன்பு வேண்டும், காலத்தின் துணை வேண்டும். இன்றே இப்பொழுதே நிலைநாட்ட எண்ணுவதும் துணிவதும், பலாத்காரத்தைத் தூண்டிவிட்டு எதேச்சாதிகாரத்தில் முடிவு பெறும்.

## சோஷலிஸ்டு சொர்க்கம்

"நீங்கள் சொல்வதற்கெல்லாம் நான் மாறுபாடு உடையவனாக இருக்கிறேன். ஆனால் உங்கள் கருத்துக்களை நீங்கள் சொல்வதற்கு உங்களுக்குள்ள உரிமையை, நான் என் உயிர் கொடுத்தும் காப்பாற்றுவேன்" என்று வால்டேர் என்ற தத்துவஞானி எல்விதீஸ் என்பவருக்கு எழுதினார்.

ஒருவனிடத்தில் பதினான்கணா உண்மையிருக்கும். மற்றொருவனிடம் இரண்டணா உண்மைதானிருக்கும். இரண்டும் சேர்ந்தால்தானே முழு ரூபாயாகும். ஆதலால் எவர் சொல்லுக்கும் நாம் செவிமடுக்கவேண்டும் என்றார் நமது சுவாமி இராமதீர்த்தர்.

எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்ற குறளடிகளையும் நாம் கற்றிருக்கிறோம்.

ஒருவன் கள்ளைக் குடித்துவிட்டுச் சிறந்த வேதாந்த உண்மைகளை எடுத்துரைக்க முடியும். ஒருவன் பாலைக்குடித்துவிட்டுப் படுமோசமான பொய்யுரைக்கவும் கூடும். ஆதலால் ஒருவனது வாயுக்குள் செல்வதைக் கவனியாது, அவன் வாயினின்று வெளிவருவதையே நாம் கவனிக்கவேண்டும், என்றும் கூறியுள்ளார் சுவாமி இராமதீர்த்தர்.

எதிர்ப்பு என்ற "நியூசன்சை" ஒழித்துவிட்ட சோவியத் நாட்டிலும் ஒழிக்கப் பார்க்கும் இதர சோசலிஸ்டு நாடுகளிலும் உண்மை அவ்வூர்களை விட்டுப் பறந்தோடிக் கொண்டிருக்கிறது.

தனிமனிதனுடைய அறிவு, ஆற்றல், உறுதி, ஊக்கமும் முயற்சியாகியவற்றை மதிப்பவர்கள் அவனை ஊக்குவிப்பார்

களேயன்றி அவனைப் பட்டிக்குள் அடைக்க எண்ணமாட்டார்கள்.

ஆனால் எல்லா மனிதரையும் பத்தொடு பதினொன்ருக நினைத்து, அவன் சுதந்திரத்தைப் பறித்து, அவனை மாடாக மதித்து அவனிடம் வேலையைப் பெற்று, சோற்றைப் போட்டுக் கட்டுத்தரையில் கட்டி வைப்பதையல்லவா சோசலிஸ்டுகள் சுதந்திரச் சுகபோகச் சுவர்க்கம் என்று கூறிவருகிருர்கள்!

## அதிகாரத்தின் பேய்த் தாண்டவம்

சிந்தனையின் நல்லூற்ருய், அறிவின் களஞ்சியமாய், நியாயத்தின் நிலைக்களமாய், அநுபவத்தின் சிகரமாய், ஒழுக்கத்தின் குன்ருய், ஒப்புயர்வற்ற மேதையாய் மனிதரில் மாணிக்கமாய், இன்று இரண்டாயிரத்தைந் நூருண்டுகள் கழிந்தோடிய பின்னரும் கருதப்படுகின்றவரும், அன்று தொட்டு பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதல் இன்றுவரை பெர்னுர்டுஷா, பெர்ட்ரண்ட் ரஸல் போன்ற தத்துவஞானிகளால் போற்றப்படுகின்றவரும் கடந்த இரண்டாயிரமாண்டுகளில் தோன்றி மறைந்த எண்ணற்ற ஆன்மகோடிகளுக்கு ஆதர்ச புருஷராய் விளங்கி வந்தவரும், வருகின்றவரும், வரப்போகின்றவருமான சோக்ரதரை அவர் காலத்திருந்த அரசாங்கம், அவர் மீது குறை பல கூறிக் கொலை செய்து விட்டதல்லவா?

சோக்ரதர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் தாமென்ன?

ஏதன் நகரவாசிகள் வணங்கிய கடவுளர்களைச் சோக்ரதர் வணங்கவில்லையாம்! அவர் தமக்குரிய தெய்வத்தைத் தாமே வரித்துக்கொண்டாராம்! வாலிபரின் உளத்தை மாசுறச் செய்தாராம்!

அவர் மீது இக்குற்றங்களைச் சுமத்தியவன் யார்?

ஏதன் மாநகரித்தில் ஆவடித்துத் தோலுரித்து வாணி பம் செய்திருந்த அனிதஸ்.

அனிதசுக்குச் சோக்ரதர் மீது என்ன கோபம்?

தோல் வியாபாரத்தை விடுத்து, ஆன்ம விசாரத்தில் இறங்குமாறு அனிதஸ் மகனை சோக்ரதர் ஊக்குவித் தாராம்!

அதற்குச் சோக்ரதர் பெற்ற வெகுமானம், சிறைக் காவலர் தந்த ஒரு குழாய் விஷபானம்?

இறந்தோரை எழுப்பியும் பிணியாளரை நலமாக்கியும் பொய்மையைக் கடிந்தும் வாய்மை கண்டுவந்தும், நல்லறம் போதித்த நாசரத் முனிவனை அவர் காலத்திருந்த அதிகாரம் என்ன செய்தது?

கல்லால் அடித்தும், காறி உமிழ்ந்தும், தேவநிந்தனை புரிந்தாரென புனைந்தும் சிலுவையிலறைந்த அதிகாரத்தை என்னென்பது?

## சுதந்திரத்திற்குத் தடை வேண்டாம்

இன்று மனித சுதந்திரத்தை மாண்புடன் ஆதரிக்கும் மேதையர் பலரை பிற்போக்காளரென்றும், மதியற்றவ ரென்றும், மதிப்பிடும் அதிகார வெறியை அகம்பாவச் செருக்கை என்னென்பது?

சுதந்திரமாக எண்ணவும், சுதந்திரமாகச் செயல்புரிய வும், சுதந்திரமாக வாழவும், மனிதனுக்கு எவ்விதத் தடை யும் இருத்தலாகாது.

இவ்வுலகிலே தீய சக்திகள் தோன்றி மக்கள் சுதந்திரம் மிதிக்கப்பட்டபோதெல்லாம், வீறுகொண்டெழுந்து, ஏர்

நிருத்தம் புரிந்து வெற்றி கண்டு வீரக்கொடி நாட்டிச் சுதந் திரத்தைக் காத்த உத்தமர் பலராவர். நல்லார் ஒருவருளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யுமழை என்ற மூதுரைக் கொப்ப அமெரிக்க நாட்டில் ஒரு ஆப்ரகாம்லிங்கனும், பார தத் திருநாட்டில் ஒரு மகாத்மா காந்தியும் தோன்றி அந் நாட்டு மக்களுக்குச் சுதந்திரம் யாதெனக் காட்டி விட்டனர். இன்று அவர்கள் வரிசையிலே அமெரிக்க ஜனாதிபதி கென்னடி யும் சுதந்திர தேவிக்குப் பலியானார். வாழ்க கென்னடியின் திருநாமம். வாழ்க மனித சுதந்திரம்.

# 8

# மாற்றமும் - ஏமாற்றமும்

## உழுதவன் கணக்குப் பார்த்தால்

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கோல் தடிதான் மிச்சம் என்பாரிகள். ஆனுல் தற்பொழுது உழுதவன் கணக்குப் பார்த்தே தீரவேண்டும் என்று அரசினர் திட்டம் போட்டுள்ளார்கள்.

ஓராண்டு ஒரு பூமி அமோகமாக விளையும். அடுத்த ஆருண்டுகளுக்கு ஏனேதானே என்று விளையும். மழை மாரி காலா காலத்தில் ஒத்துப் பெய்யவேண்டும். நோய் நொடிகள் அணுகாதிருக்க வேண்டும். எருவும் நீரும், உழைப்பும் அருகாதிருக்கவேண்டும். ஆடுமாடுகள் அழிக்காதிருக்கவேண்டும். இரவில் கள்வர் புகாதிருக்கவேண்டும். விளைந்த தானியம் வீடுவந்து சேரவேண்டும். விலைவாசிகள் கழுத்தறுக்காமல் இருக்கவேண்டும். கடன் கொடுத்த எமனுர்கள் சற்றே கருணை காட்டவேண்டும். பெண்டாட்டி பிள்ளைகள் மனக்கசப்பு இல்லாமல் இருக்கவேண்டும். படியாட்கள் நடையில் ஏய்க்காமல் இருக்கவேண்டும். நல்ல சமயம் பார்த்து உழவெருதுகள் சாகாதிருக்கவேண்டும். அடுத்த பூமிக்காரனுடைய அழுக்காற்றுக்கு ஆளாகாதிருக்கவேண்டும். இப்படி எத்தனை எத்தனையோ விபத்துகளிலிருந்து தப்பி மீளவேண்டும்.

இக்காலத்தில் சூதாட்டமும் விவசாயமும் ஒன்ருகத் தோன்றுகிறது. வாய்த்தால் வாய்க்கும் ஏய்த்தால் ஏய்க்கும்.

அடுத்தவனுக்கு ஆள் அம்பு, ரொக்கம் போன்ற வசதிகள் இருக்கும். தானிய தவசங்களைப் போட்டுவைக்க நல்ல இடமிருக்கும். பந்து ஜன உற்ருர் உறவினர் உதவி இருக்கும்.

அவன் செயிப்பான்—செழிப்பாக இருப்பான். எல்லோருக்கும் அந்த "அதிர்ஷ்டம்" கிடைக்குமா?

அடுத்த வாரம் நிலக்கடலைச் செடியைப் பிடுங்கினல் காய் சற்று முதிர்ந்துவிடும் என்று ஆறுமுகம் எண்ணினன்.

அடசட் ஆளைக் கூப்பிடு இப்போதே, பிடுங்கி எறிவோம் என்ருன் அடுத்த காட்டு அப்புசாமி. நிலத்தில் போதிய ஈரம் இருந்தது காய்கள் அறுந்துபோகாமல் கைக்கு வந்தது. வேலை யும் சுலபம், கூலியும் சபதம், விலையும் கூடுதலாக இருந்தது.

அடுத்த வாரம் ஆறுமுகமும் கைவைத்தான். கூலியாட் களுக்குப் போட்டி, கூலி ஒன்றுக்கு இரட்டிப்பு. பூமி இறுகிய தால் விழுதுகள் அறுந்தன. வேலையும் ஓடவில்லை. விலையும் சரிந்தது.

அப்புசாமி செயித்தான். ஆறுமுகம் தோற்ருன். இதை யெல்லாம் கணக்கில் எழுதிக் காட்ட முடியுமா?

விதைக்கும்போது, களையெடுக்கும்போது, அறுவடை செய்யும்போது, களத்தில் சேர்க்கும் போது, தாம்பு அடிக்கும் போது, இப்படிப் பயிருக்குப் பயிர், இடத்துக்கு இடம், ஊருக்கு ஊர், நாளுக்கு நாள் எத்தனையோ வேறுபாடுகள், கோளாறுகள், இம்சைகள் இதெல்லாம் சொல்லித் தெரி பவை அல்ல.

ஒரு விவசாயக் குடும்பத்திலே ஒரு தலைவன் தலைவி, நான்கு பிள்ளைகள், அவர்களுடைய மனைவி, மக்கள், பேரன் பேத்திகள் என்ெருரு பட்டாளமே இருக்கும். விவசாய வேலைகள் அனைத்தையும் இவர்கள் கண்ணுங் கருத்துமாய் கவனித்தும், கண்காணித்தும் செய்வார்கள். கால்நடை களைக் கருத்துடன் கவனிப்பார்கள். எல்லாம் காலாகாலத் தில் ஒழுங்காக நடைபெறும். எவ்வித சேதமும் இராது.

மற்ெருரு விவசாயக் குடும்பத்திலே, அப்பன் நோயாளி, ஆத்தாள் சிடுமூஞ்சி, பிள்ளை குடிகாரன், பேரன்

சூதாடி. மகள் வாயாடி, மருமகள் ஓடுகாலி என்று அமைந்துவிட்டால்! அட ராம ராமா. இக்குடும்பத்தின் வருமானமும் எப்படி இருக்கும்?

ஒருவர் பூமி ஒப்புரவானது. உள்ளங்கை போல் இருக்கும். அருகும் கோரையும் அற்ற மண் கண்டம்.

அடுத்தவர் பூமி கல்லும் கறடும் மேடும் பள்ளமும்.

மற்ருென்று குருட்டுச் செங்கட்டை. அற்ப சொற்ப மழையொன்றுங் காணுது.

வேருென்று கல்லாஞ் சரளை. இன்ஞென்று மணற் பாங்கு. எல்லாம் ஒன்றுபோல் விளையுமா? ஒரேவிதமான கணக்குக் காட்ட முடியுமா?

தொலை இடிந்துவிடும், கிணறு அடிவெட்டு வெட்ட வேண்டிவரும். அருகு தோண்ட வேண்டும். ஒரு பகுதி வெறும் உழவு மட்டும் போடவேண்டி வரும். நான்கு அணைப்பு மேய்ச்சலுக்கு ஒதுக்க வேண்டிவரும்.

கணக்கன் கணக்கில் ஏக்கர் பத்தாக இருக்கலாம். வாய்க்கால், வரப்பு வண்டித்தடம், எருத்துச் சாளை, களம், கிணறு, குடியிருப்பு, கொரை, மரம், மட்டை, வேலி எல்லாம் கழித்துப் பார்த்தால் அது பத்தாக இருக்குமா?

ஒன்றை விதைப்பான். அது சரியாய் முளைக்காது. அதை அழித்து விட்டு வேருென்றை விதைப்பான். இதெல்லாம் கணக்கன் கணக்கில் ஏறுமா?

ஏறச்செய்வதென்ருல் சுலபமா?

சுருங்கச் சொன்ஞல் விவசாய வருமான வரி போடப் பட்டால், லஞ்சத்தை விதைத்து லஞ்சத்தை அறுவடை செய்யவேண்டிவரும். நல்லவரெல்லாம் பொல்லாதவராகி விடுவார்கள். தீயசக்திகளெல்லாம் தலைவிரித்தாடும்.

## யார் வரி வேண்டாம் என்று சொன்னார்கள்?

சரித்திர காலந்தொட்டு நிலத்துக்குத்தான் வரி விதிக்கப்பட்டது. நிலச் சொந்தக்காரனுக்கு வரி விதிக்கப்படவில்லை. நிலத்தின் தரங்கண்டு வரி விதிக்கப்பட்டதே அல்லாமல் நிலத்தின் பயிர்கண்டு வரி விதிக்கப்படவில்லை.

சேர, சோழ, பாண்டியரென்னும் மூவேந்தர்கள் ஆண்ட காலத்தில் ஆறில் ஒன்றாக இறை பெற்றிருந்தார்கள்.

வேளாண்மை செய்வோர் நிலக் கிழார் — மிகவும் பெருமையுடையோராகப் பாவிக்கப் பட்டிருந்தனர். மேழி பிடிக்குங்கை— வேல் வேந்தர் நோக்குங்கை படைத்திருந்தார்கள். முடிசூட்டு விழாவின்போது முடியெடுத்துக் கொடுத்தவன் நிலக் கிழான் ஆவான்.

மொகலாயர் காலத்தில் நிலவரியை வசூலித்துக் கொடுக்கும் தரகர் ஏற்பட்டனர். அவர்கள்தாம் பாளையக்காரர், மிட்டாதார்கள், ஜமீன்தார்கள், இனும்தாரர் என்றழைக்கப்பட்டனர். மற்றும் பலர் சிற்றரசர்களாகக் கப்பங்கட்டிவந்தனர்.

ஆங்கிலேயர் காலத்தில் ரயத்துவாரி முறை ஏற்பட்டது. கிராமக் கணக்கில் இருந்த பூமிகள் எல்லாம், உழுபவர் பெயருக்குத் தனிப் பட்டாவாக மாற்றப்பட்டது. நிலங்கள் தரவாரியாகப் பிரிக்கப்பட்டு, நிரந்தரமான நிலவரி விதிக்கப்பட்டது.

அவ்வரியை மாற்றுமாறோ, குறைக்குமாறோ, நீக்குமாறோ யாரும் கோரியதில்லை.

ஆனால் சமீப காலத்தில், குறிப்பாகத் தேர்தல் கூட்டங்களில் நிலவரி நீக்கம் தேவையென பல அரசியல் கட்சிகள் வாதாடி வந்தனர். அடடா! அவைகள் ஒன்றை விட ஒன்று மிஞ்சும் அளவுக்குப் பேசிய பேச்சும், அடித்த வாய் வீச்சும், வடித்த கண்ணீரும் ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத கதைபோல இருந்தது.

ஏதோ ஒரு ஊரிலே தலைக்கு இத்தனை என்று தலைவரி போட்டிருந்தார்களாம்! சே சே! இது என்ன அநியாயம் தலைக்குவரி போடவாவது என்று கிளர்ச்சி செய்து, தேர்தலில் போட்டியிட்டு அக்கட்சி செயித்து விட்டதாம். ஜனநாயகம் என்பது அதுதானே. எவன் மேடையேறித் தொண்டை கிழியக் கத்துவானோ அவன்தான் தலைவன். அவனுக்குத் தான் ஓட்டுக் கிடைக்கும். அவன்தான் மந்திரியாவான். மந்திரியானவுடன் தலைவரியை ரத்து செய்துவிட்டு தலையில் உள்ள முடிகளுக்கு வரி போட்டானும்!

அதேமாதிரி தமிழ் நாட்டிலும் சில வாயாடிகள் தோன்றி மேடை மீது ஏற கிளர்ச்சி செய்து ஓட்டுகள் பெற்று மந்திரிகளாகி, நிலவரியை நீக்கிவிட்டு, இப்போது நிலத்தின்மீத வளரும் பயிர்களுக்கு வரிவிதிக்க முனைந்துள்ளார்கள்.

# 9

# புனித வழி எங்கே...

சிவாஜி 4—10—1964 இதழில் வெளிவந்த "மகாத்மா" என்ற தலையங்கத்தை அடிப்படையாகக் கொண்டு கோவை திரு. அ. அய்யாமுத்து அவர்கள் ஆசிரியருக்கு எழுதிய கடிதம்.

செயற்கரிய செய்வார் பெரியார் என்று திருக்குறள் கூறு கிறது. செயற்கரியவற்றுள் அரிது, ஒருவர் தாம் சொல்வதற் கேற்ப நடந்து காட்டுவதேயாம். எனவே மகாத்மா புரை தீர்ந்த புனித வாழ்வொன்றை நடத்திக் காட்டினர் என்று நீங்கள் குறளடி போன்று கூறியிருப்பது எவ்வளவு கனக்கச்சித மாய்த்-தென்னுப்பிரிக்கத் தமிழர் மொழியில்-எவ்வளவு "கணக்காய்" இருக்கிறது! இவ்வுலகு இதுகாறும் எத்தனையோ இலட்சியவாதிகளையும், சிந்தனையாளர்களையும், தத்துவ போதகர்களையும், மகாகவிஞர்களையும், மாமன்னர் களையும் பெற்றிருந்த போழ்திலும், அவர்களில் மிக்கோர் தங்கள் சிந்தனைக்கும், சொல்லுக்கும், செயலுக்கும் சிறிதும் சம்பந்தமற்றவர்களாகவே வாழ்ந்து சென்றனர். எளியா ரைப் பற்றி ஏரோபிளேனில் பறந்து சென்று பரிந்துரையாடி யவர்கள் எல்லாம் பத்தடுக்கு மாளிகையில் படாடோபத் துடன் வாழக் கண்டோம். யானை ஒரு கவளம் சிந்தினுல் அதனைக் கொண்டு கோடானுகோடி எறும்புகள் உண்டு உளமகிழ்ந் துய்யுமெனப் பொருளாதாரம் பேசியவர்களெல் லாம் தங்கள் பிறந்தநாள் விழாவை ஒரு கோடி ரூபாய் செல வழித்துக் கொண்டாடக் கண்டோம். இத்தகைய உலகில் மகாத்மா ஒருவர்தான் தாம் சொல்லியதனைத்தையும்,

செவ்விய முறையில் தமது வாழ்க்கையில் நடத்திக் காட்டியதை நாம் நமது வாழ்நாளில் கண்டு உவக்கும் வாய்ப்பைப் பெற்றோம்.

அவர் வாழ்ந்திருந்த காலம், அவரைச் சுற்றிச் சூழ்ந்திருந்த அலங்கோலம், அக்காலத்திய மக்களின் தாழ்வுற்ற சீலம் ஆகியவற்றிறிடையே, யாதொரு பெருவலியும் துணையுமின்றி அவரிருந்த நிலையையும் அவரை அடக்கியொடுக்க வெதிர்த்த மாசக்தியையும் எண்ணிப் பார்க்கையில் அடடா, அவருக்கிணை அவரையே அன்றி வேறு யாரைச் சொல்ல முடியும்!

கந்தையுடுத்திக் கவலையிலாழ்ந்தும், உப்பிலாப் பழங் கஞ்சியைக் குடித்துப் பயத்திலாழ்ந்தும், குச்சுகளில் வாழ்ந்து மனங்குமைந்தும், வறுமைப் பேயுடன் ஒட்டி உறவாடி யாதொரு ஆதரவும் அற்றிருந்த முப்பது கோடி மக்களின் ஏகப்பிரதிநிதியாய் அம்மகாத்மா தம்மைக் கருதித் தாமும் அப்பஞ்சைகள் போன்று எளிமையின் அவதாரமாய், ஏழைகளின் பங்காளராய், பற்றற்ற துறவியாய், பலன் கருதா நிஷ்காமிய கர்ம வீரராய், அரைக்கச்சையுடுத்தி, மண் குடிசையில் வாழ்ந்து, நாள்தோறும் கைராட்டையைச் சுழற்றிச் சோதர பாவத்தை வளர்த்துச் சுதந்திர வேள்வியைக் காத்து, அறநெறி காட்டி, அன்புறுகத் திகழ்ந்திருந்த புனித வழியையும் நாம் எண்ணும்போது நமது நெஞ்சம் என்ன பாடுபடுகின்றது!

## சமதர்மத்தின் சின்னம் (கைராட்டினமாம்)

கைராட்டை ஒன்றை மட்டும் நம்பி, இவ்வளவு பெரிய நாட்டில் தொழில் வளம் கண்டு, உலகப் போட்டியில் நாம் ஈடுகொடுத்து நிற்க முடியுமா? என்ற தங்களது கேள்வி மிக நல்லதுதான். ஆனால் கைராட்டையை மட்டும் நம்பி வாழுமாறு மகாத்மா எங்கே, எப்போது கூறினார் என்று தங்களால் கூற முடியுமா? யாதொரு உபயோகமுள்ள

தொழிலும் கைமுதலும் ஊக்கமுமின்றி உறங்கிக் கிடந்த ஏழு லட்சம் கிராமப்புறவாசிகளுக்கு எளிதில் உதவக் கூடிய கற்பகம் கைராட்டைதான் என்று அவர் எடுத்து நூற்றுக் காட்டினர். அதை அக்காலத்தில் எதிர்த்தவர்களை, வேறு நல்ல தொழில் காட்டுமாறு அவர் சவால் விடுத்தார். சமமும் முறுக்குமுள்ள ஆயிரம் கெஜம் நூலை மணிதோறும் நூற்கவல்ல கைராட்டின மொன்றை நிர்மாணித்துக் கொடுக்குமாறு பொறியறிஞர்களை வேண்டினர் என்பதனைத் தையும் தாங்கள் ஏன் மறந்தீர்கள்?

நீங்கள் நெற்றியில் விபூதி அணிகின்றீர்கள். விபூதியைப் பூசியே வாழ முடியுமா என்று சினிமாக்காரி சொன்னல் உங்களுக்கு எப்படியிருக்கும்?

நமது தேசீயக் கொடியிலே தர்மத்துக்குச் சின்னமான அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டிருக்கிறதல்லவா, அறத்தை நம்பியே அரசியல் நடத்த முடியுமா என்றொருவன் கூறினல் தங்களுக்கெப்படியிருக்கும்?

ஒருவரையொருவர் சுரண்டுதல் இல்லாத அகிம்சா முறையில் நாம் வாழ்க்கை நடத்துவோம் என்பதற்கு எடுத்துக் காட்டாகவே கைராட்டை நமது தேசீயக் கொடியில் அந் நாளில் பொறிக்கப்பட்டது. தொழிலனைத்தும் குவியல் முறையிலே ஒரு சில இடங்களிலே ஒரு சிலர் ஆதிக்கத்தின் கீழ் நடைபெறச் செய்யாது பரவல் முறையிலே நாடு நகர மெங்கும் பலகோடி மக்களாலே சிறு தொழில்களாகவும் நடுத்தர தொழில்களாகவும் நடைபெறச் செய்யவேண்டுமென் பதையும் இத்தொழில்களை விழுங்காமல் இவற்றிற்கு ஆக்கந் தரும் வகையில் அத்யாவஸ்யமுள்ள பெருந் தொழில்கள் ஆங்காங்கு நடைபெறவேண்டும் என்பதையும் கைராட்டினம் பிரதிபலிக்கின்றதேயன்றி அது நத்தைவேகத்தில் நடைபெறும் பண்டைக்காலத் தொழில்களை வலியுறுத்துவதாகத் தாங்கள் கருத்திற் கொள்ளக் கூடாது. கிராமங்கள் தோறும், நல்ல பாதைகளும், பாடசாலைகளும், தொழிற்சாலைகளும்,

சினிமா தியேட்டர்களும், சுகாதார மருத்துவ நிலையங்களும், பெரிய பெரிய பண்டக சாலைகளும், கிராம மக்களுக்கு நாளொன்றுக்கு நபரொன்றுக்கு பத்து ரூபாய் வருமானம் பெற்றுத் தரவல்ல தொழில்களும் வேண்டுமென்றுதான் கைராட்டினம் சொல்லுகிறதேயன்றி கேப்பையை அரைத்துக் குடித்து கோவணத்தையுடுத்திக் கீற்றுக் குடில்களிலே வாழுமாறு அது சொல்லவில்லை.

மகாத்மா காந்தி கதரியக்கத்தை நடத்துவதற்கு அவரிடம் மூலதனமாக அனைத்திந்தியாவிலும் கேவலம் (திலகர் சுயராஜ்ய நிதியில் மிஞ்சிய) இருபத்தைந்து லட்சம் ரூபாய்கள்தான் இருந்தது என்பதையும் தங்களது அத்யாவஸ்ய தேவைக்கு மட்டும் மாதம் பத்தோ பதினைந்தோ கொடுத்தால் போதும் என்ற மனதும், சேவா உணர்ச்சியுமுள்ள சில ஆயிரம் தொண்டர்கள் அவரைச் சார்ந்தனர் என்பதையும், நம்மை அடிமைகளாக்கியிருந்த அந்நிய ஆட்சியின் மீதும், நம் பொருளாதாரத்தையும், தொழிலையும், வாணிபத்தையும் நசுக்கிவந்த அந்நிய ஆலைத்துணியின் மீதும் நம்முடைய எதிர்ப்பையும், மனத்துணிவுடன் கூடிய செய்திறனையும் கட்டுப்பாடான உணர்ச்சியையும் ஐயந்திரிபற எடுத்துக்காட்டுவதற்குக் கதரியக்கம் எவ்வளவு துணை புரிந்து நாடெங்கும் எத்தகைய எழுச்சியை உண்டாக்கியது என்பதையும், பெருத்த சேனையும் பெரும் பராக்கிரமும் படைத்திருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே அச்சிறு கைராட்டினத்தால் அசைக்க முடிந்தது என்பதையும் நீங்கள் சற்றே சிந்தித்துப் பெருமிதம் கொள்வீர்களாக. காந்தியாரின் காலத்திலே நாடெங்கும் கைராட்டினங்கள் சுழன்றன. சின்னஞ்சிறு பள்ளிப் பிள்ளைகளும் தெருக்களிலே தக்ளியிலே நூல் நூற்றுக் கொண்டு ஊர்வலமாகச் சென்றனர். தேசத் தொண்டர்கள் பல்லாயிரமவர் நூல் நூற்றுக் கதருடுத்தினர். எங்கும் சுதந்திரமென்ற பேச்சு. எல்லோரும் சமம் என்பதுறுதியாச்சு என்று பாடி முழக்கினர். அந்தச்

சமத்துவச் சமதர்மத்துக்கு அக்காலத்தில் கைராட்டினந் தான் ஒரு சின்னமாக விளங்கிற்று.

## இன்றைய கதருக்கும் கைராட்டைக்கும் அர்த்தமே இல்லை

ஆனல் இன்று? கைராட்டினத்தை நம்பக்கூடாதென்று எழுதிய தங்கள் கரங்களிலே பத்தரைமாத்து பசும்பொன் (கிடைக்குமா?) சங்கிலி போடவேண்டும். கைராட்டையும் (கம்பங்கூழையும்) நம்பி வாழக்கூடாதென்று சொல்லிய தங்கள் வாயிலே சீனிச் சர்க்கரை (கிடைக்குமா?) போட வேண்டும்.

ஆளுங் கட்சியார் ஐந்தாண்டுத்திட்டங்கள் போட்டுப் பெரிய பெரிய ஆலைகளும், அணைகளும் கட்டத்துணிந்தவுடன் "சர்வோதய காந்தி பக்தர்கள்" "ஆஹா, ஊஹு", அப்படியா! கதரையும் இதர குடிசைத் தொழில்களையும் மறப்பதா" என்று கர்ஜனை செய்தார்கள்!

நத்தை வேகத்தில் கைராட்டை சுழன்றுகொண்டே இருக்க வேண்டும். குயவன் சக்கரமும் மண் பானை வனைந்து கொண்டே இருக்க வேண்டும். எருதுகளைக் கட்டியோட்டிக் கருப்பஞ்சாற்றைப் பிழிந்து வெல்லம் செய்ய வேண்டும். செக்கில்தான், மரச்செக்கில்தான் எண்ணெய் ஆட்ட வேண்டும், கைக்குத்தல் அரிசியைத்தான் சாப்பிட வேண்டுமென்றும் சர்வோதயக் கோமாளிகள் கூப்பாடு போட்டார்கள்.

இவர்களையெல்லாம் நமது பாரதப் பிரதமர் (ஜவஹர் லால் நேரு) அழைத்து, சரி நீங்கள் சொல்கிறபடியே அனைத்தும் செய்யுங்கள். எவ்வளவு பணம் வேண்டும் கேளுங்கள் தருகிறேன். காரியத்தில் செய்து காட்டுங்கள். வீண் கூச்சல் போடாதீர்கள் என்று கூறி அகில இந்திய கதர் கிராமத் தொழில் கமிஷன் என்ற ஸ்தாபனத்தை நிறுவி

அதன் கையில் கடந்த மூன்று திட்டக் காலத்திலும் மொத்தம் 150 கோடிக்குப் பக்கமாக வழங்கியிருக்கிறார்கள். இதோ அம்பர் சர்க்கா செய்துவிட்டோம், அதோ நூல் நூற்றுவிட்டோம். மேற்கொண்டு பஞ்சாலைகளுக்கும் நூற் பாலைகளுக்கும் விஸ்தரிப்பு லைசென்சுகள் வழங்க வேண்டா மென்று கோமாளிகள் கூப்பாடு போட்டார்கள். அம்பர் ராட்டை இன்றும் பம்பிச் கொண்டிருக்கிறதேயொழிய துணிந்து பாயவில்லை. அவர்களிடம் ஒப்புவித்த பணத்துக் குச் சரியான கணக்கு வழக்கு இல்லை. பல இடங்களில் பல விதமான மோசடிகள். மில் நூலைக் கலந்தும் கதர் நெசவு செய்யப்படுகின்றது. மகாத்மாவின் தலைமையின் கீழ் என்னோடு மாதம் அறுபது ரூபாய் பெற்று வேலை செய்தவர் கள் சிலர் காதி கமிஷனில் மாதம் இரண்டாயிரம் ரூபாய் வாங்குகிறார்கள். மாதம் முப்பது ரூபாய்க்குத் தாளம் போட்டுக் கொண்டிருந்த ஒருவன் மாதம் ஆயிரத்து முந்நூறு ரூபாய் சம்பளம் பெற்றுக் கொண்டு ஆகாய விமானத்தில் பறக்கிறான். காதி கமிஷன்களிலும் காதி போர்டுகளிலும் வேலை செய்பவர்களின் வாழ்க்கைத்தரம் எப்படியுள்ளது? தூய்மையும், வாய்மையும், சிக்கனமும் நிறைந்த ஆட்சி வேண்டுமென்று மகாத்மா கூறிவந்தார். ஆனால் இன்றைய ஆட்சியின் செலவினங்களும், ஊதாரித் தனங்களும், படாடோபங்களும் கட்டுக்கு அடங்காதனவாக இருக்கின்றனவே. அரசாங்கத்திலும் பொது மக்களிடையே யும் ஊழல்கள் மலிந்து நடம் புரிகின்றன. தேர்தல்களிலே ஏராளமான தொகை செலவிடப்படுகின்றது.

ஆனால் உண்மையான தேர்தல் கணக்குகளைக் காந்தி பக்தர்களாகட்டும், பிறபக்தர்களாகட்டும் சமர்ப்பிப்பதில்லை. இப்பித்தலாட்டமே சர்வ பித்தலாட்டங்களுக்கும் அடிப் படையாக அமைகின்றது. சட்டசபைகளுக்கும் பஞ்சாயத்து களுக்கும் நடைபெறும் தேர்தலில் அக்கிரமச் செலவுகள் போதாதென்று, ஆளுங்கட்சியினர் அடிக்கடி நடத்தும் காங்கிரஸ் கமிட்டித் தேர்தல்களிலும் செலவிடப்படும்

தொகை இந்தியா போன்ற ஏழை நாட்டுக்கு உகந்த தல்லவே.

அடிக்கடி நடைபெறும் மாகாணக் கமிட்டிக் கூட்டங் களுக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டங்களுக்கும் செலவிடப்படும் தொகைகள் சாமான்யமல்லவே. ஆண்டு தோறும் அதிவிமர்சையாக கொண்டாடப்படும் அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டின் ஆடம்பரச் செலவுகளை எத்தனை கோடி யானைகளின் "கவளங்களுக்கு" ஒப்பாகச் சொல்லலாம். அவை மிச்சமானால் எத்தனை ஏழைக் குடும்பங் களை உய்விக்கலாம்!

மகாத்மாவின் பிறந்ததினவிழா நாடெங்கும் மிக அமைதியாகக் கொண்டாடப்படுகிறது. ஆனால் அவர் பெயரைச் சொல்லி வாழும் மற்றவர்கள் தங்கள் பிறந்த தினங்களை எவ்வளவு விமரிசையோடு கொண்டாடி எவ்வளவு பெருந் தொகையை வீணாக்குகிறார்கள் என்று நான் சொல்ல வெட்கப்படுகிறேன்.

எல்லோரும், அவரவர் இச்சைக்கும், திறனுக்கும் ஊக்கத்திற்குமேற்ப உழைத்து, அதனால் பெறும் ஆதாயத் தைப் பிறர் நலன் கருதிப் பேணிக் காக்க வேண்டுமென்ற மகாத்மாவின் போதனையை மறந்து இவ்வாறு பணத்தைப் பாழாக்குவது அதர்ம கர்த்தாக்களின் செயலல்லவா?

ஒவ்வொரு மனிதனும் அவனது மனப்பழக்கத்தின்படியே வாழ்க்கை நடத்துகிறான் என்பதைத் தாம் (மகாத்மா) ஒப்புக் கொண்ட போதிலும், அவனவன் தனது சுதந்திரமான எண்ணப்படியே வாழ்க்கை நடத்த அனுமதிப்பதுதான் நல்ல தென அவர் கருதினார். ஒரு மனிதன் பிற மனிதனைச் சுரண்டு வதையும், ஒரு மனிதன் நோகப் பிற மனிதன் வாழ்வதையும் எவ்வளவு தூரம் குறைத்தும் தவிர்த்தும் வாழ்க்கை நடத்த முடியும் என்ற பேராற்றலும் பண்பாடும் சிந்தனாசக்தியும், நல்லெண்ணமும் வாய்க்கப்பெற்றவன் மனிதன் என்று மகாத்மா கருதினார். இவ்வருங்குணம் மனிதனிடம் நிறைந்து

குடிகொண்டிருப்பதாலேயே அவன் மிருகங்களினின்று வேருகக் கருதப்படுகிருன்.

ஆனல் அரசாங்கம் அதிக பட்சமான அதிகாரத்தை எடுத்துக்கொள்வதை அவர் வெறுத்தார். அந்நிலை கண்டு அஞ்சினர். மக்களை மக்கள் சுரண்டி வாழும் தீய பழக்கத்தைச் சட்டங்கள் மூலம் அரசாங்கத்தால் ஓரளவு குறைக்க முடியுமென்பது உண்மையாயினும், மக்கள் சமுதாயத்தின் சகலவிதமான முன்னேற்றத்திற்கும், உயர்ந்த பண்பாட்டிற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்துள்ள மனிதனின் தனித்தன்மையை, ஒரு மனிதனைப் பிற மனிதர்களினின்று பிரித்துக் காட்டும் அற்புத சக்தியை, தனி மனித சுதந்திரத்தை, அரசாங்கம் அழித்துவிடுமென அவர் பெரிதும் அஞ்சினர்.

உலகிலே, கோடானுகோடி மக்கள் பிறர் நலங்கருதித் தங்களனைத்தையும் அர்ப்பணித்திருக்கிருர்கள். ஆனல் ஏழைகளின் நலனுக்காகவே ஆட்சி நடத்திய அரசாங்கம் ஒன்றேனுமில்லையென்பதே மகாத்மாவின் தீர்ப்பு.

காந்தியடிகளின் இவ்வுயரிய கருத்துக்களனைத்தையும் புறக்கணித்துவிட்டு, இன்று நம்மை ஆளுங்கட்சியார் மனிதப் பண்ணைகள் அமைத்து நடத்தும் சோசலிசப் பாதையில் சென்றுகொண்டிருக்கிருர்கள்.

கோழிப்பண்ணைகள், கால்நடைப்பண்ணைகள் போன்றே மானிடப் பண்ணைகள் நடத்த இம்மானிடப் பூண்டுகள் திட்டமிட்டு வருகின்றன.

முடிவாகத் தாங்கள் எழுதியவாறு மகாத்மா நம்மிடையே வாழ்ந்து காட்டிய புரைதீர்ந்த மனித வழியைப் பின்பற்றி நமது தனி வாழ்விலும் குடும்ப வாழ்விலும் சமுதாய வாழ்விலும் நீதி நேர்மை சத்தியம் சிக்கனமாகிய நற்பண்புகள் சிதருமல் சுதந்திரத்தோடு வாழ எண்ணுவதே நாம் மகாத்மாவுக்குச் செலுத்தும் அஞ்சலியாகுமெனக் கூறி இந்நீண்ட கடிதத்தை முடிக்கிறேன்.

வாழ்க மகாத்மா

# 10

# நமது கிராமங்கள்

சென்னையிலுள்ள சித்திரக்காரனை ஒரு கிராமப் படம் வரையச் சொன்னால் அவன் உடனே ஒரு மரமும், ஒரு குடிலும், ஒரு கிழவியும் தோன்றச் செய்து விடுவான். அல்லது ஒரு கழனியும், ஒரு ஏரும், இரண்டு எருதும், ஒரு மனிதனும் காட்சி தரச் செய்வான். கேரளத்திலுள்ள சித்திரக்காரனை ஒரு படம் வரையச் சொன்னால், அவன் ஒரு மலையும், ஒரு மடுவும், ஒரு படகும், ஒரு வளையும், தலை பாரம் தாங்க வொண்ணாது வளைந்ததோ என்று கருதும்படியான ஒரு தெங்கும் அங்கு தொங்குமாறு சித்தரித்து விடுவான். இக் காட்சிகள் அவர்கள் மனதிலே பதிந்து நெஞ்சிலே ஊறிப் போனவைகளாம். இதே சித்திரக்காரர்களை ஒரு நவநாகரீகப் பட்டினத்தை வரையச் சொன்னால், பெரிய பெரிய தொழிற் சாலைகள், மச்சு மாளிகைகள், அகன்ற பாதைகள் மோட்டார் வாகனங்கள் நிறைந்த சித்திரத்தைச் சிருஷ்டித்து விடுவார்கள்.

பட்டியக் காடுகள் என்று பகரப்படும் ஊர்கள் பசுமை நிறைந்த எழிலோவியமாய், எளிமையும் தூய்மையும் நிறைந்த வாழ்விற்கும், வாய்மைக்கும், வளமான உண்டி, உடை, உறைவுள், தொழில்கள் தான்யக் களஞ்சியங் கள், காய்கனிகள், கிழங்குகள், பசுவினங்கள் போன்ற செல் வங்கட்கும், மதுவும், மங்கையர் உறவும், கும்மியும் குரவைக் கூத்தும் போன்ற கலைகட்கும், வளங் கொழிக்கும் உறைவிடங்களாகக் கம்பன் காலத்திலே கவின்மிக்க காட்சி சாலைகளாய்த் திகழந்திருக்கலாம். அன்றொரு மாநிலத் தில் ஒரு பட்டினந்தான் இருந்திருக்கும், அப்பட்டினமும்

அக்காலத்திய மன்னன் கொலுவிருந்த தலைநகராய்த் திகழ்ந் திருக்கும். அங்கே பகட்டும், உருட்டும், மிரட்டும், புரட்டும் மிகுந்த விலைமாதர்களும், மதுபானக் கடைகளும், சூதர் இல்லங்களும் களியாட்டங்களும், கடைவீதிகளும், மாட மாளிகை கூட கோபுரங்களும், ரதங்களும், ரத வீதிகளும் இருந்திருக்கும் எனினும் அந்நாட்டையாண்ட மன்னரும், அம் மன்னருக்கு உறுதுணையாயிருந்த அமைச்சரும், வீரரும், சூரரும், அதிகாரிகள், காவலாளிகள் ஆகிய யாவரும், கிராமக் கிழாரிடம் வாஞ்சையும், அன்பும், மரியாதையும் கொண் டிருந்தார்களென்பதும், கிராமக் குடிமக்கள் செலுத்திய பொருளைக் கொண்டே நாட்டின் நிர்வாகமும், பிறவும் நடைபெற்றனவென்பதும் வரலாற்றுச் சான்றுகளாகும்.

அக்காலத்திய வாணிபர்கள் திரைகடலோடியும் திர வியந்தேடியதுடன் நில்லாது அவர்கள் சென்றவிடமெல்லாம் நமது நாட்டின் கலையும், பண்பும், அறமும், ஒழுக்கமும், தெய்வ வழிபாடும், இசையும், இதிகாசமும், பிறவும் நிலை நாட்டி வந்ததோடன்றி நாடெங்கும் செல்வங்கொழிக்கவும், பஞ்சம் பரவாது தடுக்கவும், தருமந்தழைக்கவும், தொழில்கள் செழிக்கவும், ஊக்கங்குன்றாது பேராற்றலுடன் கடனாற்றி வந்தனரென்பதற்கும் சரித்திரம் சான்று தரும்.

ஆனால் இன்று, காங்கிரஸ் ஆட்சியாளர்களால் வியா பாரிகள் விரும்பத் தகாதவர்களென்று தீர்மானிக்கப்பட்டு, அவர்களைக் குற்ற பரம்பரையினரைப் போல் நடத்தவும், நாளாவட்டத்தில் அவ்வர்க்கத்தையே ஒழித்துக்கட்டவும் சட்டதிட்டங்கள் வகுக்கப்படுகின்றன. சித்திரக்காரன் சிந் தையிலும், அரசினர் அகந்தையிலும் கிராமமும், கிராம மக்களும் குங்குமஞ் சுமக்கும் கழுதைகள் போன்றும், பட் டினங்களும், பட்டினவாசிகளும் மணக்கவும் சிறக்கவும், கொழுக்கவும் பாடு படும் மாக்களாகவே கணிக்கப்படு கின்றனர்.

ஆயிரம் பேர்களுக்கும் வேலை போதாத ஒரு அரசாங்கத் தொழில் ஸ்தாபனத்திலே ஆறாயிரம் பேர்களைக் குவித்து

வைத்து மக்களின் வரிப்பணத்தை விரயம் செய்கின்றனர் என்று பாராளுமன்றத்தின் குழுவினர் அறிக்கை விடுத்துள்ளனர். அந்த ஆறுயிரம் பேர்களுக்கும் மாதா மாதம் குறைந்த பட்சம் 30 லட்சம் ரூபாய் சம்பளமாக இருக்கும். சம்பளம் மட்டும்தானா? அவர்கள் குடியிருக்க வசதியான வீடுகள், அவர்கள் சிற்றுண்டியருந்தும் கூடங்கள் அவர்கள் பிள்ளைகளுக்கு கல்வி வசதிகள், அவர்கள் குடும்பத்தாருக்கு இலவச வைத்திய விடுதிகள், ஆதாயத்திலே அவர்கட்கு வருடாந்திர போனசுகள், க்ஷேமநிதி பண்டுகள், இன்சூரன்ஸ் பாதுகாப்புகள், கிராக்கிப் படிகள், பண்டகசாலைகள், சுகாதார நிலையங்கள், பிரசவ விடுதிகள், பார்க்குகள், விளையாட்டு மைதானங்கள், நடன நாட்டிய நாடக மேடைகள், திரைப் படக் காட்சிகள் இத்யாதி இத்யாதி அவர்களுக்குண்டு.

இத்தொழிற்சாலையிலே நஷ்டத்தைத்தவிர்த்து லாபத்தை எதிர்பார்க்க முடியாது. இந்த நஷ்டத்தை ஈடேற்ற தனிப் பட்டவர்கள் நடத்தும் தொழிலில் தேறும் ஆதாயத்தில் நூற்றுக்கு எண்பத்தைந்து சதம் வரி செலுத்தவேண்டும். அதற்கு அமிதலாப வரி என்று பெயர். சர்க்காரின் அமித நஷ்டத்தை ஈடுசெய்ய குடிமக்கள் தங்கள் வாயில் போட்டுக்கொள்ளும் கொட்டைப் பாக்கிற்கு நூற்றுக்கு முப்பத்தைந்து சதம் வரி செலுத்தவேண்டும். வாய்ப்புகையிலைக்கு பாரத்துக்கு நூற்றைம்பது ரூபாய் (இப்போது எவ்வளவோ) செலுத்த வேண்டும். இவ்வாருக மக்கள் அன்ருடம் உபயோகிக்கும் அறுபது சாமான்கள்மீது மறைமுக வரி வசூலிக்கப்படுகிறது. இவை தவிர நேர்முகவரி எண்ணற்றவை. பணம் தேடினுல் சொத்துவரி, பணத்தைத் தானமாக வழங்கினுல் தானவரி, பணக்காரன் செத்துப்போனுல் எஸ்டேட் என்னும் மரணவரி, என்றிவ்விதமாகப் பற்பல வரிகளை மக்கள் முன்னேற்றத்திற்காக அல்ல, சர்க்காரின் ஊதாரித்தனங்களுக்காக, அறிவற்ற செயலின் விளைவுகளுக்காக அவர்கள் கனவு காணும் அயோக்கியத்தனமான சித்தாந்தத்திற்காக மக்கள் முணு முணுக்காது செலுத்திக்கொண்டே இருக்கவேண்டும்.

கிராமக் குடியானவன் அரும்பாடுபட்டு, அல்லும் பகலும் கண் விழித்துக் காத்து, களை பறித்து தண்ணீரும் கண்ணீரும் விட்டு, நோய்க்கிருமிகளைக் கொன்று, பரிசுத்தமாகத் தேர்ந் தெடுத்த பருத்தியை பத்து ரூபாயுக்கு விற்றால், அப் பருத்தியைப் பஞ்சறைக்கும் ஆலைக்குச் சுமந்து செல்லும் தரகனும் கொட்டை நீக்கிப் பஞ்சாக விற்கும் வியாபாரியும் பதினைந்துக்கு விற்றுவிடுவார்கள். அப்பஞ்சை இழைத்துத் துணியாக நெய்த ஆலை முதலாளி நூற்றைம்பதுக்கு விற்றால், அத்துணியின்மீது அரசாங்கம் முப்பது ரூபாய் வரிவிதித்து வாங்கிவிடும், இந்நிலையில் பருத்தியை உற்பத்தி செய்த குடியானவனைக் குங்குமம் சுமந்த கழுதையென்று சொல் லாமல் வேறென்னவாகக் கூறத்தகும் என்று யோசியுங்கள்.

ஐந்து பேர்கள் கொண்ட கிராமக் குடியானவன் குடும் பத்துக்கு காருண்ய காங்கிரஸ் அரசாங்கம் தயாளசிந்தை யுடன் கணக்கிட்டு அநுமதித்துள்ள உச்சவரம்பு ஆதாயம் ஆண்டொன்றுக்கு மூவாயிரத்து அறுநூறு ரூபாய் மழைமாரி பொய்க்காமல் சீராக விளைந்து நேராக விற்றால் அந்த வரு மானம், அது மாதத்துக்கு 5 பேர்களுக்கு முந்நூறு ரூபாய் ஆளொன்றுக்கு நாளொன்றுக்கு இரவும் பகலுமாக கண் விழித்து காத்து உழைத்ததற்கு வெகுமதியாக இரண்டே இரண்டு ரூபாய்! இன்றுள்ள விலைவாசிக்கேற்ப ஒருவேளை கூடக் குறைவறச் சாப்பிட முடியாது.

குடியானவன் விளைவித்தெடுக்கும் நெல்லுக்கு வியாபாரி கொடுப்பது மூட்டை இருபது ரூபாய். அவ்வியாபாரியிட மிருந்து அரசாங்கம் கட்டாயக் கொள்முதல் செய்யும் விலை மூட்டையொன்றுக்கு பதினைந்து ரூபாய் பாக்கி ஐந்து ரூபாயை ஈடுசெய்ய வியாபாரி ஒரு மூட்டை உமியை மூன்று ரூபாய்க் கும் அந்த பொடித் தவிட்டை ஐந்து ரூபாய்க்கும் விற்று சரி கட்டுகிறான். அல்லது அரிசியின் தலையில் ஏற்றுகிறான். மழைக் காலத்தில் தவளைகள் கத்துகின்ற மாதிரி, பட்ஜெட் காலங் களில் சட்டசபைகளில் அரிசிவிலை ஏறிவிட்டதென்று கூச்சல்

கிளம்பும். கண்ட்ரோல், கட்டாயக் கொள்முதல், விலை வரம்பு, ரேஷன் லைசென்ஸ் என்ற நான்சென்சுகள் வெடிக்கும்.

சேற்றைக் கலக்கி, நாற்றை நட்டு, களைபிடுங்கி, காவல் காத்து, தண்ணீர்விட்டு, அறுத்து, அடித்து உலர்த்தித் தூற்றி, அளந்து கொடுத்த குடியானவனுக்கும் அவனுக்குத் துணை நின்ற பட்டாளத்துக்கும் நபரொன்றுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டே ரூபாய்—உச்சவரம்பு வருமானம். குறைந்தபட்ச மல்ல என்பது கவனத்தில் இருக்கட்டும்.

இந்த இரண்டு ரூபாய் ஆதாயத்துடன் குடியானவனும், அவனுடைய குடும்பத்தார்களும், அவனைச் சார்ந்து வாழும் பண்ணையாட்களும், இடிந்த குடிசைகளில், கிழிந்த கந்தை யுடன் பழங்கஞ்சியைக் குடித்துப் பாழாகவேண்டும்.

இன்று கொல்லன், தச்சன், கொத்தன், கம்மாளன் போன்ற தொழிலாளர்களெல்லாம் நாள் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் கூலிபெறுகின்றனர். அமைச்சர்கள் மாதம் மூவாயிரம் பெறுகிறார்கள். அதிகாரிகளும், முதலாளிகளும், பட்டினத் தொழிலாளிகளும், சட்டசபைப் பிரதிநிதிகளும் ஏனைய பிறரும் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் ஆதாயமடை கிறார்கள். ஆனால் குடியானவனும் அவனது பண்ணையாட் களும் பெறுவது இரண்டே ரூபாய். அவர்கள் உற்பத்தி நெல் விலை ஏறக்கூடாது. ஆனால் அக்குடியானவர்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும் எக்கச்சக்கமான விலை கொடுத்தாக வேண்டும். அப்படிக் கொடுத்தாலும் திறந்த சந்தையில் கிடைக்காது. சர்க்கரை முதற்கொண்டு கற்பூரம் வரை, சிமெண்டு முதற்கொண்டு சீமையெண்ணை வரை இரும்பு, பட்டா, தகடு சகலத்துக்கும் கருஞ்சந்தைதான் புகலிடம்.

இரண்டு ரூபாயுக்கு ஒரு தகட்டை வாங்கி ஒரு கொல்ல னிடம் கொடுத்தால், இரண்டு மணி நேரத்தில் ஒரு மண் வெட்டியை செய்துகொடுத்து ஐந்து ரூபாய் கேட்கிறான்.

இரண்டு கிலோ எடையுள்ள இரும்புக் கொழுவிற்கு அவன் மூன்று ரூபாய் கேட்கிறான். லாடக்காரன் ஜோடிக்கு இன்று நான்கு ரூபாய் கேட்கிறான். அவனுவது போகட்டும். ஒரு லாடத்தின் அளவும், எடையுமுள்ள இயந்திர சாமானுக்குப் பட்டினத் தொழிற்சாலையில் பத்து ரூபாயுக்கும் குறைவாகக் கிடைக்குமா சிந்தியுங்கள்.

ஆனால் இத்தனை பேர்களும் வயிருர உண்டு வாழக் குடியானவன் இரவுபகல் ஓயாது உழைத்தாலும் அவன் நாளொன்றுக்கு இரண்டு ரூபாயுக்குமேல் ஆதாயம் பெறக் கூடாதென்பது ஜனநாயக சோசலிசக் காங்கிரஸ் அரசாங் கத்தின் சட்டம்!

இச்சட்டத்தை உடைத்தெறிய வேண்டாமா?

குடிமக்கள் தனித்தனியாகவோ கூட்டாகவோ, சேர்ந்தோ நடத்த முடியாத—திறம்பட நடத்த முடியாத— பெரிய பெரிய தொழில் முயற்சிகளைத்தான் சர்க்கார் மேற் கொள்ளவேண்டும். அத்தகைய தொழில் நிறுவனங்களுக்கு தேவையுள்ள அளவிற்குமட்டும் சர்க்கார் ஏற்றுமதி இறக்கு மதிகளைக் கையாளவேண்டும். பொதுமக்கள் செய்யக்கூடிய தொழில் முயற்சிகளைப் பொதுமக்களுக்கே விட்டுவிட வேண்டும். அவற்றிலே அரசாங்கம் அனுவசியமாகக் குறுக் கிட்டுக் குழப்பங்கள் செய்யாதிருக்கவேண்டும். திட்ட மிட்டுச் செலவிடப்படும் தொகையிலே ஐந்தில் மூன்று பங்கு கிராமப் பகுதிகட்கும், ஒருபங்கு நகரப்புறங்கட்கும் ஒருபங்கு அரசாங்கத்தின் பொதுத்துறைக்கென்றும் ஒதுக்கப்பட வேண்டும். கிராமப் பகுதிகளிலே வசூலிக்கப்படும் வரிப்பணம் முழுவதையும் கிராமப் பஞ்சாயத்துகளிடத்திலே ஒப்படைக் கப்படவேண்டும்.

எல்லாவற்றிற்கும் முதற்படியாக விவசாயத்திற்குச் சம்பந்தப்பட்ட தொழிற்கருவிகள், மோட்டார் பம்பு செட்டுக்கள், டிராக்டர்கள் போன்ற யாவும் கிராமப்பகுதி

களில்தான் செய்யப்படவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட வேண்டும். விவசாயத்துக்கு வேண்டிய உரங்களையெல்லாம் ஒவ்வொரு மாவட்டந்தோறும் உற்பத்தி செய்யப்பட வேண்டும். சிறிய அளவிலே தொழிற்சாலைகள் அமைக்கப் படுவது இலாபகரமாக இராதென்று பொருளாதார நிபுணர் கள் கூறுவார்கள். பெரும்பான்மையான மக்கள் வசிக்கும் கிராமப் பகுதிகள் முன்னேறச் செய்வதற்கேற்ற வகையில் தொழிற்சாலைகள் பரவலாக அமைக்கப்படுவதுதான் நமது நாட்டு நிலைமைக்கு ஏற்ற பொருளாதாரமாகும். இதன் பொருட்டு பழங்காலத்து ராட்டினத்தையும், செக்கையும், சக்கரத்தையும், உரலையும் இன்றும் கட்டியழவேண்டுமென்று சொல்வதும் செய்வதும் வடிகட்டின முட்டாள்தனமாகும். அதனுல் நாடும் மக்களும் பிற்போக்கு நிலையில் தங்கி நாறிப் புழுத்து, அழுகி கெட்டுப் போவார்களேயன்றி முன்னேற்ற மடைய மாட்டார்கள். அத்தகைய பத்தாம்பசலி முயற்சி களை மேற்கொள்வதால், பணமும், காலமும், திறனும் விரைய மாவதன்றிப் பெரும்பாலோர் என்றென்றும் புழுக்கை வேலை களையே செய்து கீழ்மட்டத்தில் சுழன்று கிடக்கவும் சிறுபான் மையினர் பணம், பதவி, அதிகாரங்களுடன் தோரணையாக வாழ்வதற்குத்தான் வழி பிறக்கும்.

கிராமங்களை அணுகுவதற்கு நல்ல அகலமான செப்ப னிட்ட தார்ரோடுகள் அமைக்கப்பட வேண்டும். இடையே உள்ள ஓடைகளுக்கும், ஆறுகளுக்கும் உறுதியான பாலங் களும் கல்வர்ட்டுகளும் அமைக்கப்படவேண்டும். பண்டைக் காலத்தில் ஒரு பெண்ணைக் கொடுப்பதானுலும், ஒரு பெண்ணை எடுப்பதானுலும் முதலில் தடம்வழி பார்ப்பது என்ற சீர் உண்டு. தடம் வழி ஒழுங்கானதாகவும், பத்திர மானதாகவும், விரைவில் போய்வரக்கூடியதாகவும் இருந் தால்தான் கல்யாணகாரியத்தில் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்துவார்கள். அவ்வாறே இக்காலத்தில் பொன்னைத் தேடி வரும் தொழிற் விற்பன்னர்கள், லாரிகளும் பஸ்களும் ஓடும்படியான மெயின்ரோடுகளையே தேடுகிருர்கள்.

அதுவும் பட்டினங்களை அடுத்துள்ள இடங்களையே நாடு கிறார்கள். அரசாங்கமும் இத்தகைய சூழ்நிலையில்தான் தொழிற்பேட்டைகளை அமைத்து வருகிறார்கள். இதனால் அப்பிராந்தியங்களிலுள்ள பூமிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்து, அதன் சொந்தக்காரர்களே அளவுக்கு மிஞ்சிய பணக்காரர்கள் ஆகிவிடுவார்கள். அவர்கள் அவ்வாறு ஆக விடாமல் தடுப்பதற்குக் குறுக்கு வழியாகத்தான் அரசாங்கம் பதினேழாவது திருத்தத்தைக் கொண்டுவந்தது. இது எலிக்குப் பயந்து வீட்டையே கொளுத்தும் முட்டாள்தனத் திற்கு ஒப்பானது.

இத்தகைய அநியாய வீக்கத்தைத் தடுப்பதற்குப் பதினேழாவது திருத்தம் பரிகாரமாகாது. எனது நண்பர் ஜி. கே. சுந்தரம் அவர்கள் ஒரு அற்புதமான யோசனையைச் சொன்னார். இப்போதுள்ள மெயின்ரோடுகளைக் குறுக்கிலும் மறுக்கிலும் ஆங்காங்கு இணைக்கும்படியான பல ரோடுகளைப் போட்டுவிட்டால் மாநிலமெங்கும் தொழிற்சாலைகள் பரவலாக அமைக்கப்படுமென்றும், அதன் காரணமாக ஏற்படும் அபிவிருத்திகளெல்லாவற்றையும் மக்கள் பகிர்ந்து அநுபவிக்க வாய்ப்புக்கள் கிடைக்குமென்றும் அவர் தெரிவித்தார். திரு. சுந்தரம் அவர்கள் யோசனைப்படி நெடும்பாதைகளை இணைப்பதுடன் கிராமப்பாதைகளையும் விரிவுபடுத்திய பிறகு, போக்குவரத்துச் சாதனங்களில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

இப்போது பஸ் ஸ்டேண்டுகளும் லாரி ஷெட்டுகளும் பட்டினப்புறங்களில்தான் அடைந்து கிடக்கின்றன. இவை மாற்றப்படவேண்டும். பட்டினங்களில் அடைபட்டிருப்பதைத் தடுத்து அவை கிராமங்களில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். சென்ட்ரல் வொர்க் ஷாப்புகளும் சென்ட்ரல் ஷெட்டுகளுமிருந்தால் முதலீடு செய்தவர்களுக்கு அநுகூலமாயிருக்குமென்று வாதாடுவார்கள். பணம், பதவி, அதிகாரம், தொழில் எதுவும் குவியல் முறையில் நமது நாட்டுக்கு ஏற்றதல்ல. அம்முறை சர்வாதிகாரத்துக்கும் கம்யூனிசத்துக்கும் கூட்டிச் செல்லும்.

பண்டைய முதலாளித்துவ முறையின்கீழ் ஒரு சிலர் செல்வந்தர்களாகவும், பெரும்பாலோர் ஏழைகளாக இருக்க வாய்ப்பிருந்தது. நவீன சோசலிசமெனும் குவியல்முறை கொண்ட அரசினர் ஆதீனத்தின்கீழ் நாடே பாழாகிறது. உற்பத்தி குறைகிறது; செல்வம் குன்றுகிறது. மக்களின் தன்மதிப்புத் தாழ்ந்து ஜனநாயகம் வேரறுக்கப்படுகிறது.

எனவே இவ்விரண்டு முறைகட்கும் நடுநாயகமாக விளங்கும் "Golden Means" மகாத்மா காந்தி நமக்குப் போதித்துள்ள பரவல்முறைதான் ஏற்றதாகும். அதுதான், மக்களிடையேயும், ஊர்களிடையேயும், நாடுகளிடையேயும் சமத்துவத்தையும் சமவாய்ப்புகளேயும் அளிக்கவல்ல சிறந்த சஞ்சீவியாகும்.

எனவே நகரங்களுக்குள், ஓடும் பஸ்ஸுகளேயும், லாரிகளேயும் தவிர மற்றவையனேத்தும் கிராமங்களில்தான் தங்க வேண்டும் என்ற விதி ஏற்படவேண்டும். உதாரணமாக கோவைக்கும் ஒத்தக்கால் மண்டபத்துக்கும் பஸ்கள் ஒடுகின்றன. ஆனல் இவை கோவையில்தான் நிறுத்தப்படுகின்றன. அங்குதான் பழுதுபார்க்கப்படுகின்றன. ஆனல் இப்பஸ்ஸுகள் ஒத்தக்கால் மண்டபத்தில்தான் நிறுத்தப்பட வேண்டுமென்று விதித்துவிட்டால் அவற்றைப் பழுது பார்க்கும் பட்டறையும் ஒத்தக்கால் மண்டபத்துக்கே மாற்றப்படும். அதில் வேலே பார்க்கும் ஆட்களும் அவர்களுடைய குடும்பங்களும் ஒத்தக்கால் மண்டப்த்திற்கே குடியேறுவார்கள்.

இதனல் ஒத்தக்கால் மண்டபம் விருத்தியடையும். அச் சிறிய ஊரிலுள்ள வாலிபர்கள் அப்பட்டரையில் வேலே பழகவும் செய்யவும் வாய்ப்புகள் ஏற்படும். கோவை மாநகரில் ஜனநெருக்கடியும், அதனல் வீட்டு வாடகை உயர்வும், தண்ணீர் தட்டுப்பாடும் நிலங்களும் பண்டங்களும் விஷம் போல் ஏறிவரும் விலேயும் முனிசிபல் நிர்வாகத்தின் சுமையும் குறைய வழி பிறக்குமல்லவா? ஒருசில பஸ்களே கிராமங்

களில் தங்கச் செய்வதினுலேயே இத்தகைய தீமைகள் ஒழிந்து, நன்மை பயக்குமென்ருல், பற்பல தொழில்களையும் கிராமங் களில் நிறுவும் முயற்சி கைகூடிவிட்டால் கிராமங்களின் நிலை எவ்வளவு தூரம் உயர்ந்துவிடுமென்று சிந்தியுங்கள்.

நல்ல ரோடுகள் அமைக்கப்பட்டுப் போக்குவரவு சாதனங் களும் ஏற்பட்ட பின்னர், அதைத் தொடர்ந்து மழைக்குப் பின் பயிர்கள் தழைப்பதைப்போன்று கிராமங்கள் தோறும் சிறிய அளவிலும் நடுத்தர அளவிலும் ஏன் வாய்ப்புள்ள இடங்களில் பெரிய அளவிலும்கூட பற்பல தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கு மக்கள் முயற்சியும், அரசாங்கத்தின் ஊக்கமும் பெருமளவில் கிடைக்கச் செய்யவேண்டும். தொழிற் பேட்டைகள் அனைத்தும் கிராமங்களில்தான் நிறுவப்பட வேண்டும் என்ற விதி பிறக்கவேண்டும். ஒரு பத்தாண்டுத் திட்டம் வகுத்து, பக்திசிரத்தையுள்ள மக்களின் கூட்டுற வோடு அரசாங்கம் முயற்சித்தால் கிராமங்களெல்லாம் மெய் யாகவே ராம ராஜ்யங்களாகத் திகழும்.

பலகோடி ரூபாய்களைப் பாழாக்கிப் பெரிய படாடோ பத்தோடும் ஆரவாரத்தோடும் அரசாங்கம் நிறுவிய பஞ்சாயத்துக்களால் கிராமத்தின் முகம் மறையவில்லை; கிராமத்தின் தோற்றம் மாறவில்லை. கிராமத்தின் தொழில் கள் வளரவில்லை. கிராமத்தின் செல்வம் உயரவில்லை. பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள சூபர்வைசர்களும், என்ஜினி யர்களும் ரோடுகள் போடுவதையும், கட்டிடங்கள் கட்டு வதையும் பஞ்சாயத்து தலைவர்களுடனும் கூட்டு சேர்ந்து ஒரு 'பிசினசாக'ச் செய்து வருகிருர்கள். கிராம சேவக்குகள் ஆங்காங்கு அரட்டையடித்துக்கொண்டு கிராமங்களில் ஏற்கனவேயுள்ள பூசல்களை வளர்த்து வருகிருர்கள். தொழில் விஸ்தரிப்பாளர் எத்தொழிலையும் விஸ்தரிக்கவில்லை. விவசாய விஸ்தரிப்பு அதிகாரியும் அவரது சிப்பந்திகளும் மருந்து கடை யும் விதைதானிய கடையும் வைத்துக் கொண்டிருக்கிருர்கள். சமூக ஊழியன் சுகமாக சாப்பிட்டுவிட்டு உறங்குகிருன்.

சமூக கல்வி அமைப்பாளர் பொய்க்கணக்குகள் தயாரிப்பதில் வல்லவராய் இருக்கிறுர். பஞ்சாயத்து அதிகாரி கணக்கு களைத் தணிக்கை செய்து வருகிறுர்.

கால்நடை வைத்தியர் ஒருவரைத் தவிர வேறு எவரும் உருப்படியாக எதுவும் செய்வதாகத் தெரியவில்லை. பஞ்சாயத்து சட்டம் முதல்தரமானது. பஞ்சாயத்து அமைப்பு சிரேஷ்டமானது. பஞ்சாயத்தின் உத்தேசம் மேன்மையானது. அதை யாரும் குறை சொல்ல முடியாது. ஆனுல் அவையனைத்தும் விழலுக்கிறைத்த நீராய் போயினவே! மக்களில் ஆயிரத்திலொருவர், ஐயாயிரத்திலொருவர் பொதுநல நோக்குடன் சேவை செய்கிறுர். மற்றவரெல்லாம் சொந்த ஆதாயம் ஒன்றைத்தான் தேடுகிறுர்கள். எதிலும் சுரண்டுவதற்கு இடமுண்டா என்றுதான் பார்க்கிறுர்கள். இதற்கு என்ன நிவர்த்தி என்று கேட்கிறீர்கள்? சர்க்கார் செய்ய வேண்டிய காரியங்களை சர்க்கார் செய்யவேண்டும். அதில் மக்கள் தலையிடக்கூடாது. அவ்வாறே மக்கள் செய்ய வேண்டிய காரியத்தை மக்களே செய்யவேண்டும். அதில் சர்க்கார் தலையீடு கூடாது. இந்த அடிப்படை நியாயத்தை ஆள்வோரும் ஆளப்படுவோரும் புரிந்து செயலாற்றினுல் எல்லாம் ஒழுங்காக நடைபெறும். சுருங்கக் கூறுமிடத்து மக்களின் வாழ்வில் சர்க்காரின் தலையீடு மிகக் குறைவாகவும், சர்க்காரின் நிர்வாகத்தில் மக்களின் தலையீடு சிறிதும் இல்லாமலும் இருக்கவேண்டும். இதை விரித்தெழுத கட்டுரை இடந்தராததால் இத்துடன் நிறுத்துகிறேன்.

சங்கிலி தொடர்போன்று நாடெங்கும், கிராமங்கள் பட்டினங்கள் என்ற பாகுபாடின்றித் தொழில்வளம் பெருகினுல், பட்டிதொட்டிகளெல்லாம் பயனுற முன்னேறி பட்டினங்கள் போன்றே காட்சியளிக்கும். பிழைப்புக்காக பட்டினங்களை நாடி குடியேற மாட்டார்கள், கிராமமக்கள். செல்வமும், தொழிலும், கல்வியும், சிறப்பும், வேளாண்மையும் தாளாண்மையும் எங்கும் மிகுந்து ஒரே சீராய் ஏற்றத்

தாழ்வின்றி விளங்குமாதலால் எல்லோரும் இன்புற்று வாழ்வார்கள். அஃதின்றி இப்போதுள்ள நிலைமையே நீடிக்குமானால் கிராமங்கள் கீழ்நிலையிலும், பட்டினங்கள் மேல்நிலையிலும் இருக்கும். கிராமமக்கள் தொண்டு செய்யும் அடிமைகளாகவும், நகர மக்கள் அடிமை கொள்ளும் அதிகாரிகளாகவும் திகழ்வார்கள்.

எனவே இந்நிலை மாறத்தான் வேண்டும். சுதந்திரத்திலும், சமத்துவத்திலும், சமதர்மத்திலும், அபேத வாதத்திலும் ஆர்வமுள்ள மக்கள் இந்நிலையை மாற்றத்தான் வேண்டும்.

வாழ்க காந்தீயம்!

# 11

# இன்பமும் - துன்பமும்

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. —குறள்

## இன்ப துன்பத்தின் இலக்கணம் சொல்லமுடியுமா?

"எல்லாரும் இன்புற்றிருப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" என்று தாயுமானுர் பாடினுர். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் என் மனம் வாடினேன்" என்று பாடினுர் இராமலிங்க அடிகள். ஆனுல் அந்தோ! பிறர் இன்புறுவதைக் காண பொறுமல் துன்புறு கின்றவர்களும், பிறர் வாடி துன்புறுதலைக் கண்டு இன்புறு கின்றவர்களும், இவ்வுலகில் (மற்றவுலகில் எப்படியோ) இருக்கத்தானே செய்கிறுர்கள்!

இரந்தோ, வஞ்சித்தோ, இச்சகம் பேசியோ, கள்ளக் கணக்குகள் எழுதியோ, பிறர் பொருளைக் கவர்ந்து இன்பங் காண்பவர்கள் இவ்வுலகில் எத்தனை பேர்! "அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி அரும்பசி யெவர்க்குமாற்றி......" என்று வாயால் பாடுவார்கள், ஆனுல் கசாப்புக் கத்தியைக் கக்கத் தில் வைத்துக்கொண்டுமிருப்பார்கள்!

மக்களுக்கு வாரி வாரி வரையின்றிக் கொடுத்து அம்மக் களின் இன்முகம்கண்டு இன்புறுதல் ஒன்றையே தம் வாழ்க் கையின் பயனுகக் கருதுகின்றவர்களுமுண்டு. பிறரிடமுள்ள

நல்ல பொருட்களை எப்படியாவது கவர்ந்து செல்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து இன்புறுகிறவர்களும் உண்டு.

வறுமையில் வாடி நலிந்திருப்போரின் வாயிலுள் இன்பம் நுழைவதில்லையா? வளமிக்க செல்வத்தில் திளைத்திருப்போரின் உள்ளத்தில் துன்பம் நுழையாமல் இன்பமே என்றென்றும் மண்டிக்கிடக்கின்றதா? சாலை மரத்தடியில் சஞ்சலமின்றிக் காலை நீட்டிப் படுத்துறங்கும் ஏழை மனிதனைக் கண்டு அச்சாலை வழியே மோட்டார் வாகனத்தில் பறக்கும் மனிதன் பொறுமை கொள்வதில்லையா?

எனவே இவ்வுலகிலே எல்லாவற்றிற்கும் இலக்கணங் கூறிவிடலாம். இன்னதுதான் இதுவென வறையறுத்துக் கூறிவிடலாம். ஆனால் இந்த இன்ப துன்பங்கள் இருக்கின்றனவே அவை எந்த எல்லைக் கோட்டுக்குள்ளும் அடங்காமல் நீண்டும் விரிந்து கொண்டே செல்கின்றன.

இன்று நமக்கு இன்பந்தருபவை நாளை நமக்குத் துன்பம் பயப்பதாக மாறிவிடுவதும் உண்டு. ஓரோர் பருவத்தில் ஐம்புலன்களும் ஓரோர் பொருளின் மீது விருப்புற்று இன்பம் காணத் துடிக்கின்றன. ஆனால் ஆசை அறுபதுநாள் மோகம் முப்பதுநாள் என்பார்களே அந்நியதிப்படி மோக தாகங் களெல்லாம் காற்றாய்ப் பறக்கும் காலமும் வருவது உண்டல்லவா?

போதும் என்ற மனோநிலை பொன்பெறும் என்பார்கள். அம்மனத்தில் இன்பம் நீங்காது நிலைத்துவிடுமாம். அது இலேசில் ஆகுங் காரியமா? முற்றுந் துறந்தவன் வாழும் எல்லைக்குள் இன்ப துன்பங்கள் தலைகாட்டாவாம்! அக்கூற்றை ஒப்புக்கொள்ள முடியுமா? முற்றுந்துறந்தவர்களை இவ்வுலகம் இன்னும் கண்டதில்லையே!

இன்பமும் துன்பமும் பகலும் இரவும் போன்றவை. வித்தும் முளையும் போன்றவை. சேற்றிலிருந்து செந்தாமரை முளைப்பதைப் போன்று, துன்பத்தினின்றும் இன்பம் விளையும்.

## பசி இன்பமா-துன்பமா?

மனிதனுக்கேற்படும்—ஏன் எல்லா ஜீவராசிகளுக்கும் இது பொருந்தும்—பல நோய்களில் பசியும் ஒரு நோயெனப் புத்தபகவான் அருளியிருக்கிறார்.

பசி என்னும் நோய்,

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாததும், இரு நாளைக் கேல் என்றால் ஏலாததும், ஒரு நாளும் ஒளவைப் பிராட்டியின் நோயை அறியாததுமான இடும்பைகூர் வயிற்றின்—

பசியென்னும் நீங்கா நோய் இல்லாதிருந்தால் மனிதனுக்கு வாழ்வேது, வளமேது, வளர்ச்சிதானேது? எல்லாம் அந்த வயிற்றிற்காகத்தானே, சேவிப்பதும், பாவிப்பதும், செயல் புரிவதும்! அரசியலுக்கும், அறிவாராய்ச்சிக்கும், ஆத்மஞான போதத்துக்கும், விஞ்ஞான வளர்ச்சிக்கும், ஏன் உலகில் சகலத்துக்கும் இந்த வயிற்றுப்பசி ஒன்றைத்தானே அடிப்படையாக வைத்து, அதன்மீது கட்டிடம் கட்டியிருக்கிறார்கள்! பத்தும் பசி வந்திடப் பறந்துபோம் என்றல்லவா முடிவு கட்டப்பட்டுள்ளது!

பசியாத வரம் பெற்றிருந்தால் எவ்வளவு மேன்மையாய் இருந்திருக்கும் என்றும் சொல்லும் அதே மனிதனுக்கு ஒரு வேளை பசி எடுக்காவிட்டால், அடடா அவன் படுகிற பாடென்ன? ஆடுகிற ஆட்டமென்ன? மருத்துவமனை நாடி ஓடுகிற ஓட்டமென்ன? சொல்லுந்தரமா?

பசி, ருசிகூட அறிவதில்லையே! இப்பாழான கும்பிக்குப் பசித்த மாத்திரத்தில் புசிப்பதற்கு ஏற்ற உணவு கிடைத்து விட்டால் எவ்வளவு இன்பம்! கிடையாது போனாலோ எவ்வளவு துன்பம்! கொஞ்ச நேரம் பொறுங்கள் ஒரு அப்பளம் பொரித்ததும் இலை போடுகிறேன் என்று அருமை மனைவி சொன்னால் அது கேட்கிறதா? எனவே பசி என்பது

துன்பமே ஆயினும், அத்துன்பம் இல்லையேல் மனிதன் இவ்வுலகில் இன்பத்தைக் காண இயலாதென்பது இதனுல் அறியப்படும்.

இன்பம் நுகர்வதற்கு இவ்வுலகில் எண்ணற்ற வழிகள் இருக்கின்றன. ஆனுல் அறத்தான் வருவதே இன்பம் என்று வள்ளுவர் வரையறுத்து விட்டார்.

மற்றெல்லாம் புறத்த—அறவழிக்குப் புறம்பாகப் பெறு வதனைத்தும் இன்பமாகா—என்று முத்திரை வைதிது விட்டார்.

புகழுமில—என்ற முத்தாய்ப்பும் வைத்துவிட்டார். (இன்று காண்ட்ராக்ட் எடுத்தும், பெர்மிட் விற்றும், கோட் டாக்கள் கைமாறியும், லைசென்ஸ் கொடுத்தும் காங்கிரஸ் காரன்கள் கொள்ளையடிக்கின்ருர்களே, அல்லது கொள்ளை யடிக்கும் தொழிலுக்கு Monopoly என்னும் ஏகபோக உரிமை தருகின்ருர்களே—அவை புகழுமில என்று ஐயந்திரி பற முத்தாய்ப்பும் வைத்துவிட்டார்.) அதற்கு மேல் எந்தக் கோர்ட்டிலுமே அப்பீலே கிடையாதென்று முடிவும் கட்டி விட்டார். ஆனுல் காங்கிரஸ்காரன் அச்சட்டத்தையும் திருத்தி விட்டான்!

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதே தமிழரின் குறிக்கோள். தாம் இன்புறுவதற்கு (ஏதுவாக) உலகத்தார் இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார் என்றல்லவா பொய்யா மொழிப் புலவரும் புகல்கின்ருர். (ஆனுல் காங்கிரஸ்காரன் தமிழன் வாயிலே இந்தியைத் திணித்து அவன் திணறுவதைக் கண்டு இன்புறுகிருன். இந்தி பயில மாட்டாதவன் டெல்லிக்குச் சென்று உத்தி யோகம் பார்க்கத் தேவையில்லையென்று—அதன் பின் விளைவு களையறியாத பேதை போன்று தமிழர்களின் முதன் மந்திரி யாகிய பக்தவத்சலனும் அதிகார போதையில் மதியிழந்து கூறிவிட்டார்!)

பலன் கருதிக் கருமங்களைச் செய்யுங்கால் பலன் கண்ட விடத்து இன்பமும் காணாவிடத்து துன்பமும் விளைவதால் பலன் கருதாமல் கருமத்தைச் செய்யும் மனப் பழக்கத்தைக் கொள்ளுமாறு கீதை உபதேசிக்கிறது.

மகாத்மா காந்தியும் அக்கருத்தை அழகுபட விவரித்துள்ளார். "உன் உடல், உயிர், அறிவுத் திறன், பொருள், வித்தை, உன் வாழ்வு அனைத்தும் பிறர்நலனுக்கு உழைப்பதற்காகவே பகவானால் அருளப் பெற்றவை என்று உன் மனதில் கருதி அவ்வாறே ஒழுகுவாயாக" என்பதே மகாத்மா காந்தியின் நற்போதனையாம். இப்போதனையை குடியிருத்தி வாழும் உள்ளத்திலே அவா, அச்சம், காமம், குரோதம், லோபம், மதமாச்சரியம் போன்ற அற்பக் குணங்கள் தலை காட்ட மாட்டாதல்லவா?

மனம் வெளுக்கச் சாயமில்லை யென்றோர் சித்தன் பாடினான். அவன் காந்தியின் போதனையைக் கற்றிருந்தால், அவன் மனம் வெளுமை பெற்றிருக்கும்.

இன்பந்துய்த்தலைப்பற்றி ஜர்மன் தேசத்து தத்துவ ஞானியாகிய இம்மானுவேல் காந்தன் கூறியதைக் கேட்போம்.

"இன்பந்தருவது யாதென மனிதன் அறியமாட்டான். அதைப் பற்றிய மனத்தெளிவு அவனிடம் இல்லை. வாழ்வில் ஏற்படும் அநுபவத்தைக் கொண்டுதான் அதனை அறிய முடியும். இன்பஞ் சூழ்ந்த நிலை எப்போதும் மாறாதிருக்கு மென எவனாலும் சொல்ல முடியாது. அவனதை அறிந்து சொல்லும்படியான சர்வசக்தனல்லவே!"

"இன்பந்தரவல்லது செல்வமென்றா சொல்லுகிறான்? செல்வம் சேர்ந்தகாலை, அத்துடன் எத்தனை மனக்கவலை, எத்தனை குரோதம், எத்தனை அழுக்காறு சேர்ந்து வரும்!"

"ஞானமும், பகுத்தறிவும் அவன் விரும்புகிறானா? அவனில் மறைந்து, ஒளிந்து, இதுகாறும் அவன் மனதுக்குப்

புலனுகாதிருந்த எத்தனை துன்பங்களை அந்த ஞானக்கண்ணுல் அவன் காணப்போகிருனே? எத்தனை ஆவல் கொள்வானே? எத்தனை கவலை அவனைக் குடிகொள்ளுமோ? யார் கண்டார்?"

"நீண்ட ஆயுளையா அவன் விரும்புவது? ஐயையோ! அது நீண்ட பெருந்துன்பமாயிராதெ என அவனுக்கு உறுதி யளிப்பவர் யார்? உடல்வலி குன்றியிருந்தால் மனிதன் அதிக மாக ஒன்றுஞ் செய்யமாட்டான். திடகாத்திரமாயிருந்தால் எதிலுந்தயக்கமின்றித் தாவிக் குதிப்பானே!"

"சுருக்கமாகச் சொல்லுமிடத்து எதனுல், எப்படி, எத்தனை நாள், எவ்வளவு இன்பம் மனிதனுல் துய்க்கமுடியு மென்று உறுதியுடன் சொல்ல அவன் சக்தியற்றவனுகவே இருக்கின்முன்."

காந்தனின் கூற்று இவ்வாறிருக்க கிரேக்க நாட்டின் சட்ட நிபுணனும் முனிபுங்கவனுமான (Solon) சோலோன் என்பான், கதிரவன் ஒளிவீசும் எவ்விடத்திலும் இன்பத்தோடு வாழும் மனிதன் ஒருவனைக்கூடக் காணக்கிடையாதென்று முடிவு கட்டி விட்டான்!

## இயேசு சொன்னதையுங் கேளுங்கள்

நாசரத் என்னும் பாலஸ்தீன நகரிலே கன்னிப் பெண் ணுன மரியாளுக்கு மகனுகப் பிறந்து முப்பத்தி மூன்றும் வயதில் சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்த இயேசு பிரான் இவ்வுலகிலே எவரும் செல்வத்தைத் தேடவேண்டா மெனக் கூறிவிட்டார்.

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்தேயு)

இயேசுவின் இந்தப் போதனைக்கிணங்கியே சோஷலிச நாடுகள் எனப்படும் கம்யூனிச ஏதேச்சாதிகாரிகள் மக்களின் பொக்கிஷங்களை யெல்லாம் பறித்து அரசாங்கத்தின் சர்வாதீனத்துக்குள் சேர்த்துவிட்டார்கள். அப்படி செய்ததின் மூலம் அவர்கள் மக்களின் இருதயங்களையும் அரசாங்கத்தின்பால் இழுத்துக் கொண்டார்கள். அதைத்தான் இந்நாட்டிலும் நிறைவேற்றக் காங்கிரஸ் ஏதேச்சாதிகாரிகள் பதினேழாந் திருத்தத்தை பண்டித நேருவின் பிணஞ் சுட்ட மணங்கூட மாறுவதற்குமுன் பார்லிமெண்டிலே புகுத்தி நிறைவேற்றிவிட்டார்கள்!

## சூபனேர் என்ற ஜெர்மன் தேசத் தத்துவ போதகர் சொல்வதாவது :

இவர், வாழ்வில் துன்பமிராது போனால், வாழ்வே பயனற்றும் ருசியற்றும் போகும் என்கிறார். துன்பமிருந்தால்தானே அதனோடு போராடிக் கொண்டிருக்க முடியும். எல்லாம் எங்கும் நிறைந்து இன்பமயமாக இருந்தால், வாழ்க்கை புளித்துப் போய் விடுமென்பது சூபனேரின் முடிவாகும்.

பசித்துன்பம் தலை காட்டியவுடன் சாப்பிடுகிறோம். இன்பம் சுரக்கிறது. ஆனால் அடுத்து துன்பமும் காத்து நிற்கிறது. அதுதான் உண்ட களைப்பு. அது தொண்டருக்கும் உண்டல்லவா? சிறிது படுத்தோ உட்கார்ந்தோ இளைப்பாறியவுடன் அது நீங்கும். அடுத்தது மற்றொன்று காத்து நிற்கும். தலை பாரம். அது நீங்க சூடான ஒரு கப் ஏதாவதொன்று வேண்டும். பிறகு வெற்றிலை, பீடி சிகரெட், சுருட்டு இப்படிப் பலவாம். அதற்கப்புறம் மனப் போக்கு, வயது, உடல்நிலை, இடம், காலம், நேரம் ஆகியவற்றைப் பொறுத்து வேறு ஏதோ வேண்டும். இவ்வாறு அடுக்கடுக்காய் ஒன்றன் பின் ஒன்றாகப் பல தேவைத் துன்பங்கள் தோன்றுவதும், அவற்றைப் பூர்த்தி செய்து போக்குவதும்

109139

நீண்ட வாழ்க்கைப் போராட்டங்கள் என்பதாம். அத்தகைய போராட்டங்கள் இல்லையேல் வாழ்க்கை சப்பிட்டுப் போகும் என்பதே சூபனேரின் கருத்தாம்.

## சோக்ரதரும் பிளேட்டோவும் என்ன சொல்கிறார்கள்?

சிலர் சும்மாவிருப்பதே சுகம் என்பர்கள். ஆனால் கூர்ந்து கவனித்தால் அவர்கள் தம்முடலை சொரிந்து கொண்டாவதிருப்பார்கள். உடலிலே ஒரு தினவு ஏற்படும். அப்போது நாம் நகங்களால் சொரிந்து விடுகிறோம். அப்படித் தான் பசி, காமம் போன்ற தினவுகளும் ஏற்படுகின்றன என்று கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர்களான சோக்ரதரும், பிளேட்டோவும் கருதினார்கள். இத்தகைய 'துன்பங்களை' ப் போக்கிய நிலையில் காணப்படுவது உடலின்பமாம்.

இன்பத்தை உடலின்பமென்றும், ஆன்மவின்பமென்றும் ஞானிகள் இருகூறாகப் பிரித்துக் கூறுவார்கள். மேலே கூறிய உடலின்பம் தோன்றுவதற்கு ஒரு காரணத்தைக் கண்டோம். ஆனால், ஆன்மவின்பம் யாதொரு காரணம் கருதியும் வருவதல்ல. அது தனித்தியங்குவது என்கிறார் பிளேட்டோ.

இயேசுகிறிஸ்துவுக்குத் தாகம் ஏற்பட்டது. கிணற்றருகே ஒரு சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்டருந்தி தமது தாக விடாய் தீர்த்துக் கொண்டபின்?

'இத்தண்ணீர் குடிப்பவனுக்கு மீண்டும் தாகம் ஏற்படும். ஆனால் நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிப்பவனுக்குத் தாகமே ஏற்படாது' என்றவர் கூறியதாக யோவான் எழுதியிருக்கிறார். இங்கு யேசுவால் பேசப்பட்டது ஆன்ம தாகத்தைப் போக்கும் நீர் என்பார்கள்.

## இறத்தல் ஒன்றுதான் மனிதனுக்கு வாய்க்கும் மிகையான துன்பம்

வாழ்விலே இன்பம் திடீரென்று தோன்றுவதன்று. அது உடலோடும், மனத்தோடும் இணைந்து, கலந்து, வளர்வ

தோன்றும். வாழ்வில் தோன்றும் சிறு சிறு ஏற்றத் தாழ்வுகளால் வாழ்க்கைத் தராசு சாய்ந்து விடுவதில்லை. வெற்றிக்கு மேல் வெற்றி காணும்போது மனிதன் பேருவகை அடைகிறான். பிறிதெல்லாம் வாழ்க்கையில் சர்வ சாதாரணமாகக் கருதப்படுகின்றன. துன்பமும் அத்தகையதாம்.

சிறிது சிறிதாகச் சேமித்துப் பாங்கில் டிபாசிட் செய்த பணம்போல மனிதன் தன் வாழ்விலும் சிறிது சிறிதாக இன்பத்தைத் தேக்கி வைக்கிறான். சிறு வெள்ளங்களால் பாதிக்கப் படாத அணைபோன்று மனித உள்ளமும் சிறிய துன்பங்களால் பாதிக்கப்படுவதில்லை. தொடர்ந்து ஒன்றன் பின்னாக வரும் பெருந் துன்பங்களும், கிஞ்சிற்றும் எதிர் பாராது வரும் விபத்துக்களும், ஏமாற்றங்களும் மனித வாழ்வைச் சீர்குலையச் செய்கின்றன.

இறத்தல் ஒன்றுதான் மனிதனுக்கு வாய்க்கும் மிகையான துன்பம். இறப்பெய்தியவனைத் துன்பம் பாதித்தாலும், பாதியாதிருந்தாலும், நாமறியோம். ஆனால் இறந்தவனைச் சூழ்ந்து வாழ்ந்து, அவனால் நற்பயனெய்தியவர்களும் அவனை நேசித்தவர்களும் துன்புறுதல் கண்கூடாம்.

உறங்குவதுபோன்று இறப்பென்பதென்றும், விழிப்பது போன்று பிறப்பென்பதென்றும் பெரியவர்கள் சொல்கிறார்கள். கிழிந்த சட்டையைக் கழற்றிவிட்டுப் புதுச் சட்டையைப் போட்டுக் கொள்வது போன்று ஆன்மா உடல் மாறி உடல் புகுவதுதான் பிறப்பென்றும் அவர்கள் சொல்கிறார்கள். இக்காரண காரியங்களெதுவும் மனிதனுடைய அறிவுக்குப் புலனாகாத பெரும் புதிராய் இருந்துகொண்டே இருக்கிறது.

அவன் செயலன்றி ஆவதொன்றில்லை என்பார்கள். அவனன்றி ஓரணுவும் அசையாதெனுமரிய ஆப்தர் மொழியொன்று கண்டால் அறிவாவதேது என்று அறிவைத் தாழ்த்தியும் அறிவுக்கோர் எல்லையிட்டும் பேசியுள்ளார்கள்.

மனதிற்குத் தோன்றும் காரணங்கள் அறிவுக்குத் தோன்ருதென்று பாஸ்கல் (Pascal) என்ற பிரஞ்சு நாட்டுப் பேராசிரியன் பறைசாற்றியிருக்கிருன்.

இத்தகைய நம்பிக்கைக்கு இடமளிக்கும் பொருட்டு தன்னுடைய அறிவுக்கு ஒரு எல்லே கட்டிக் கொண்டதாகக் காந்தன் கருதியிருக்கிருன்.

"உலகிலுள்ள சர்வ மதங்களும் மத சித்தாந்தங்களும் நம்பிக்கையொன்றையே ஆதாரமாகக் கொண்டவை. அறிவின் துணைகொண்டு எந்த மதத்தையும் உலகில் நிலை நாட்டுதல் இயலுங் காரியமன்று.

நம்பிக்கையில் தோய்ந்தவர்களின் கண்களுக்கு அறிவெனப்படுவது, சூரிய வெளிச்சத்தில் கொளுத்தப்படும் கார்த்திகை விளக்கைப் போன்றே தோன்றுமாம். நம்பினேர் கெட்டதில்லை. நான்கு மறைத் தீர்ப்பு என்று நாம் சொல்லுகிருேம். விஸ்வாசித்தவர்கள் ரட்சிக்கப்படுவார்கள் என்று கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர்.

## மீண்டும் பிறக்கின்ருேமா—இல்லையா?

மீண்டும் பிறக்கிருேம் என்ற நம்பிக்கை மனிதனுக்கு நலம் தருமா தராதா என்பதை மட்டும் நாம் இங்கு கவனித்தால் போதுமானது. மறு பிறவி உண்டோ இல்லையோ அது எப்படியாயினுஞ்சரி, இப்பிறவியில் நன்மையான காரியங்கள் செய்தால் மறுபிறவியில் நற்கதியடைவோமென்ற எண்ணம் ஒன்றே நமக்குப் போதுமானது.

இப்பிறவியில் தீங்கான காரியங்களைச் செய்யாதிருக்க மனித குலத்துக்கு உதவும் எந்த எண்ணமும் கொள்கையும் கொள்ளத்தக்கவையே அன்றித் தள்ளத்தக்கவையாகா.

## மனிதனது அடிப்படைத் தேவைகள் என்ன?

உண்டி, உடை, உறைவிடமாகிய முப்பெருஞ் சாதனங்களும் மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் என்று சொல்பவர்கள் உண்மையுணராதவர்கள். இம்மூன்றுல் மட்டும் மனிதன் நிலையான இன்பத்தைப் பெற்று வாழ முடியாது. இவற்றைக் காட்டிலும் மேலான இன்பத்தைக் கொடுக்க வல்லவை யாவை எனக் கூறி இக்கட்டுரையை முடிப்போம்.

உள்ளத்தில் அதிருப்தியும், இல்லாததில் விருப்பமும் கொள்வது மனித சாதிக்குச் சகஜமாய்ப் போன காரணத்தினுல்தான் இன்பத்தோடு வாழும் மனிதன் ஒருவன் கூட இல்லையென்று சோலோன் கூறியது. சில சமயம் இல்லாதது என்னவென்று கூடத் தெரியாமலே மனிதன் ஏக்கமடைவது சகஜமாகிவிட்டது.

ஆதலால் மனிதன், தன்னிச்சையாகத் துணிந்து, முயன்று, தாஞகவே ஏதாவதொன்றைச் செய்து, அதில் வெற்றி தோல்வி கண்டு கொண்டிருக்க வாய்ப்புகள் இருந்து கொண்டே இருக்க வேண்டும். அத்தகைய முயற்சிகள் எதுவும் அவன் மேற்கொள்ளாவிடினும், அவன் பற்பல இடங்களுக்குச் சென்று பல காட்சிகளைக் கண்ணுறவாவது அவனுக்கு வாய்ப்புகளிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் மனம் எழுச்சியும் கிளர்ச்சியும், மகிழ்ச்சியும் பெற ஏதுவாகும்.

## போதுமா அல்லது போதாதா என்ற வாதப் பிரதிவாதங்கள்

போதும் என்ற நிலை மனிதனுக்கு ஏற்பட்டுவிட்டால் அவன் வாழ்க்கை புளித்துப் போய்விடுமென்றும் போதாது என்ற ஆவல் உதித்துக் கொண்டிருந்தால்தான் மனிதன் மேலும் மேலும் முயல உற்சாகம் பிறக்கும் என்று பொதுவாக எல்லோரும் சொல்லுவார்கள்,

பொதுவாக உடலுக்கும் மனதுக்கும் ஏதாவது வேலை தொடர்ந்திருந்துகொண்டே இருக்கவேண்டும். சிந்திக்க ஒய்வும் சிந்தனையைச் செயலாக்க வாய்ப்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் வேண்டும். ஒருவன் சந்தோஷத்தோடு இருக்க அடிப்படைத் தேவைகள் இவைதாமென்பது யாராலும் வரையறுத்துக் கூற முடியாது.

உணவும், உடையும், உறைவிடமும், தொழிலும் இருந்தால் இன்பம் வாய்த்து விடுவது மெய்யானல், இன்று உலகிலுள்ள சிறைச்சாலைகளில் வாழும் மனிதரெல்லோரும் இன்பந்துய்த்திருப்பதாகக் கொள்ளத் தகுமல்லவா?

எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு மனிதனுக்குப் பிறர் மதிப்பும், பாராட்டுதலும் மிகமிகத் தேவைப் படுகிறது. அப்பாராட்டுரைகளைக் கேட்கும் பொழுதுதான் மனிதன் பூரிப்படைகிறுன்.

எனினும் பிறரால் பாராட்டப்படுவது மட்டும் மனித வாழ்வை முழுதாக்கப் போதுமானவையன்று. இதனினும் மேலான மற்ருென்றும் தேவைப்படுகிறது.

## அன்புதான் உலகத்தை யாள்வது

ஒவ்வொரு மனிதனுக்கும் அவன்மீது அன்பு செலுத்தும் பிற மனிதர்களிருந்தாக வேண்டும். அஃதேபோன்று ஒவ்வொரு மனிதனுக்கும் அவனன்பை பிறர்மீது செலுத்த அவனுக்கு வாய்ப்புகள் இருந்தாக வேண்டும்.

இன்ப துன்பங்களையும் குறைவு நிறைவுகளையும், பரஸ்பரம் அறிந்துணர்ந்து பரிமாறத்தக்க, ஆத்மார்த்த நட்புடையவர்கள் வேண்டும்.

ஆணும் பெண்ணும் இருவரும் மனமொத்த காதலர்களாக மிளிரவேண்டும். பொற்கரத்தை நீட்டிப் புன்முறுவல் காட்டச் சிசு வேண்டும்.

எழில்மிக்க ஓவியம், இன்னிசைக் கானம், நறுமணப் பூங்கா, நதிகள், மலைகள், அடர்ந்த அடவிகள், சோலைகள், நீர்வீழ்ச்சிகள், கருத்தாழ்ந்த பேச்சுக்கள், கட்டுரைகள், சுவைதருங் கதைகள், காவியங்கள், கேளிக்கை விளையாட்டு கள், கண்கவருங் காட்சிகள், கூத்துகள், திருவிழாக்கள், திருமண வைபவங்கள், கிண்ணம் நிறைந்த மது, கன்னஞ் சிவக்க ஒரு முத்தம், ஒரு கனிந்த பார்வை, முகமலர்ந்த வரவேற்பு, இப்படி எத்தனை எத்தனையோ, மனிதவுளம் மலர்ந்து இன்புறத் தேவைப்படுகின்றன.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று பெரி யோர்கள் தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள். நோய் என்பது உடலைமட்டும் பற்றுவதன்று. உடல் நோயைக் காட்டிலும் உளநோய் மிகப் பயங்கரமானதாகும்.

எனவே உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் அற்பர்கள் உறவும், உள்ளன்பிலார் கூட்டுறவும், இல்லாதிருந் தால் இன்பந்தழைக்க பின் எது வேண்டும்?

பிறர் துன்பந்துடைப்பதே இன்பமெனக் கொண்டும் கண்டும் வாழ்ந்தால், இப்பிறவியிலும் மேலான பிறவி எது?

எல்லாரும் இன்புற்றிருப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே என்று எங்கே பாடுங்கள் கேட்போம். வாழ்க சுதந்திரம் வாழ்க இன்பம். யாதும் ஊரே! யாவருங் கேளிர் என்று பாடிய பழந்தமிழர் மரபினில் தோன்றிய வர்கள் அல்லவா நாம்!

# 12

# சர்வோதயக் கோமாளிகள்

உலகத்திலுள்ள தீங்குகளையெல்லாம் போக்குவது தங்கள் கடனென்றெண்ணி, அட்சதையைத் தங்கள் தலையில் எடுத்துப் போட்டுக்கொள்ள ஒரு கூட்டம் இந்நாட்டில் சேர்ந்துள்ளது.

அக்கூட்டத்தின் பெயர்தான் சர்வோதய சங்கம்.

அச் சங்கத்தின் மேல் மட்டத்தில் உச்சியில் இருப்பவர் ஆச்சார்ய பூஜ்ய வினோபா பாவே அவர்கள்.

அப்புண்ணிய மூர்த்தியின் திருவுடலை எனது ஊனக்கண் களால் கண்டுகளிக்கும் பாக்யத்தை நான் இதுவரை பெற்ற தில்லை.

ஆனால் கடந்த முப்பதாண்டுகட்கு மேலாக எனது மனக் கண்களால் தரிசித்து இன்புறுகின்றேன்.

மதுரை கிராம ராஜ்ய ஏட்டிலும், தஞ்சை சர்வோதய இதழிலும் அவ்வப்போது பிரசுரமாகும் அவரது பொன் மொழிகளைப் படித்துப் படித்து இறும்பூது எய்துகிறேன்.

வினோபா அவர்களைப்பற்றி எண்ணும்போதெல்லாம் Don Quixote என்னும் ஸ்பெயின் தேசப் பதினாறும் நூற் றாண்டு நாவல் என் நினைவுக்கு வருகிறது.

அந்த நாவலில் தோன்றும் Don Quixote Dela Mancha எனும் கதாநாயகரின் கருத்துகளை ஒத்தவராக விநோபா அடிகள் அவதரித்துள்ளார்.

மஞ்சா எனும் அக்கதாநாயகன் குதிரை மீதேறி யாத்திரை செய்தார்—விநோபா பாத யாத்திரை செய்தார். அவன் குண்டுத் தடியனாய் இருந்திருக்கலாம். விநோபா குச்சி வீரராய்ப் படங்களில் காட்சி தருகிறார். இருவருக்குமுள்ள பேதம் அவ்வளவுதான்.

ஆனால் கொள்கையில் இருவரும் ஒரே அச்சில் வார்க்கப் பட்டவர் போலிருக்கின்றனர்.

ஸ்பானி வீரர்—Lofty But Unpractical Ideas—மகோன்னதமான, ஆனால் செயல்பட முடியாத கருத்துகள் கொண்டிருந்தார். நமது பாரத வீரரும் அத்தகையவரே ஆவார்.

மதுரையினின்று பிரசுரமாகும் "கிராம ராஜ்யம்" பத்திரிகையில் இந்த வாரம்தான் படித்தேன். விநோபா சொல்கிறார்:

"பெண்கள் தங்கள் தற்காப்புக்காக ஒவ்வொரும் ஒரு கைத்துப்பாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். யாராவது ஆண்கள் பலாத்காரம் செய்ய முனைந்தால் அவர்களைப் பெண்கள் சுட்டுத் தள்ளவேண்டும்."

எவ்வளவு அருமையான யோசனை!

விநோபாபாவே மேற்கொண்ட பாத யாத்திரையும் பூதான இயக்கமும் நாட்டையே ஒரு கலக்கு கலக்கின. மேலை நாடுகளிலிருந்து பலர் அந்த அதிசயத்தைக் காண ஓடோடியும் வந்தார்கள்.

தனிப்பட்ட மனிதனுக்கெனப் பிறந்த பூதானம், கிராம தானமாக விரிந்து, வட்டார தானமாக வளர்ந்து, ஜில்லா தானமாகக் கிளர்ந்து, மாநில தானமாக மலர்ந்தது.

ஆனால் நாளதுவரை ஒரு பூதானக் கிராமமாவது சீராகச் செயல்படுவதாகக் காணோம்.

திருமணம் நடத்திவைக்கும் புரோகிதன் குடும்ப பாரத்தையும் ஏற்று நடத்திக் கொண்டிருக்க எப்படி முடியும்.

ஆதியும் பகவனும் குழந்தைகளைப் பெற்று அங்கங்கே விட்டுவிட்டுப் போனார்கள் என்ற கதைபோல் வினோபா அவர்களும் தானங்கள் பெற்றுப்பெற்று ஆங்காங்கே போட்டு விட்டுப் போய்விட்டார்.

சில வருடங்களுக்கு முன் வினோபா அடிகள் தாம் வசிக்கும் பானார் ஆசிரமத்தில் ஒரு கிணறு வெட்டினாராம்.

அக்கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்துக் கீழே கொட்டினாராம்!

திரௌபதையின் துகிலுரித்த துச்சாதனன் களைத்துக் கீழே விழுந்தமாதிரி, வினோபாவும் தண்ணீர் இறைத்திறைத்துக் களைத்துப் போனாராம்!

ஆனால் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட போகவேண்டிய இடத்தைப் போய்ச் சேரவில்லையாம்!

காரணம், விவசாயபூமி மேட்டில் இருந்ததாம். அவர் இறைத்த தண்ணீர் குழியில் தேங்கி நின்றதாம்.

இறைத்துக் களைத்த பிறகுதான் அவருக்கு இந்த உண்மை தெரியவந்ததாம்!

இது அவரே சொன்னது. நான் சொல்வதல்ல.

அரசாங்கத்தின் சமூக நலத்திட்டங்கள் ஏழைகளின் குடிசைகளை எட்டுவதில்லையென்றும், செல்வந்தரின் மாளிகைகளிலே தேங்கிவிடுகிறதென்றும் எடுத்துக்காட்டவே இதை ஒரு உதாரணமாக அவர் சொன்னார்.

பூதானத் தொண்டர் ஒருவர் வந்தார். உங்களுக்கு என்ன கொடுக்கிறார்கள் என்று கேட்டேன், பொதுமக்களிட மிருந்து தானம் வாங்குவதாகவும், ஓட்டலில் சாப்பிடுவதாக வும், மிச்சமுள்ளதை தன் மனைவிக்கு மணியார்டர் செய்து விடுவதாகவும் சொன்னார்.

அதற்கு கணக்கு, வழக்கு, பொறுப்பு, கேள்வி, விசாரணை...ஒன்றும் இல்லையா என்றேன்.

பிச்சைக்காரன் எவனாவது வரவு செலவு கணக்கு வைத்துக் கொள்வதுண்டா? அவனுக்கு ஒரு ஸ்தாபனந்தான் உண்டா? அப்படித்தான் எங்கள் கதியும் என்றார் அவர்.

போகும்போது என்னிடமிருந்தும் வழிச் செலவுக்குப் பத்து ரூபாய் வாங்கிக்கொண்டு சென்றார்!

பூதானக் கிராமங்களை நிர்வகிக்கும் கிராமசபைத் தலைவர், கிராம மக்களால் ஏகோபித்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், வாக்குச் சீட்டுகள் மூலம் தேர்ந்தெடுக்கப் படலாகாது என்றும் வினோபா அடிகள் சொல்லி வருவதை பாரதம் எழுதிய வியாச பகவான் கேட்டுச் சிரிக்கிறார்.

பெண்கள் தங்கள் கைகளில் ரிவால்வர் எடுத்துச் செல்ல வேண்டும் என்று சொல்லும் அதே வாயால், கிராம சபைத்தலைவர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டு மென்று சொல்வதும், எதிர்பார்ப்பதும் எவ்வளவு பெரிய கோமாளிக் கூத்து?

வினோபாவைப்போல் டான் குய்க்ஷாட் மட்டுமல்ல, மற்றும் ஏராளமான விசித்திரப் பிறவிகள் இவ்வுலகில் பிறந் திருக்கிறார்கள். இப்போது வாழ்ந்தும் வருகிறார்கள்.

காலஞ் சென்ற ஜ்யார்ஜ் பெர்னார்ட்ஷாவும் ஒரு பெரிய கோமாளி. அவர் சோசலிசம் பேசினார். எழுதினார். ஆனால் அரசாங்கத்துக்கு வருமானவரி கொடுக்க மாட்டேன் என்று வாதாடினார்!

**வாழ்க! கோமாளிகள்!**

# 13

# செல்வமும் - அதிகாரமும்

எனது மதிப்பிற்குரிய நண்பர் ஈ. வெ. ரா. பெரியார் செல்வத்திடத்தும், செல்வத்தை வைத்திருக்கும் செல்வந்தரிடத்தும் மட்டற்ற மதிப்புடையவர்.

அவரிடத்தும் செல்வம் ஓரளவு குவிந்துள்ளது. ஈரோடு நகராட்சி மன்றத்துக்கு தாம் ஆண்டுதோறும் ஐந்தாயிரமோ அதற்கு அதிகமாகவோ சொத்து வரி செலுத்தி வருவதாகப் பெருமிதத்துடன் சில ஆண்டுகட்கு முன்னர் சொன்னர்.

தாம் செல்வந்தராகையால் தம்மைப் பிறர் மதிக்கவேண்டும் மதிப்பாக நடத்த வேண்டும் என்று எப்போதும் எதிர்பார்க்கிருர்.

செல்வமற்றவர்கள் கூலி வேலை செய்து பிழைப்பதற்குத் தான் தகுதியுடையவர்கள் என்று கருதுவார்.

அவர்களை அன்னக்காவடிகள் தகர போவுனிகள் என்றும் கீழே பூமியும், மேலே ஆகாசமும் அன்றி வேறெதுவும் அற்றவர்கள் என்று பரிகாசமாகச் சொல்வார்.

"அவனுக்கு என்ன தகுதி, அவனுக்கு என்ன யோக்கியதை" யென்று பணத்தைக் கொண்டே மனிதனை எடை போட்டுப் பார்ப்பார்.

பனகால், பொப்பிலி, ராஜா சர். அண்ணுமலை, சௌந்தர பாண்டியன், ஆர். கே. சண்முகம், ஜமால் முகம்மது போன்ற செல்வந்தர்கள்தான் ஆட்சி பீடத்தமர அருகதையுடையவர்கள் என்று கருதுவார்.

யாதுமற்ற "அன்னக்காவடிகள்" அரியாசனமேறி அதிகாரம் செய்ய வாய்ப்பளிக்கும் "ஜனநாயகம்" என்ற சனியனை கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும், வாயால் சொல்வதும் பெரியாருக்குத் துளிகூடப் பிடிக்காது.

உலகில் ஒரு கடவுளைக்கூடப் பெரியார் ஏற்றுக் கொள்வாரே யொழிய அன்னக்காவடிகளை அரசர்களாக்கும் இந்தப் பெருஞ்சனியனாகிய ஜனநாயகத்தை அவர் இப்பிறவியிலும் மற்றெப் பிறவியிலும் நிச்சயமாக முடிவாக தீர்மானமாக ஏற்றுக் கொள்ளவே மாட்டார்.

ஏதோ வேண்டா வெறுப்பாக காமராஜரும், அண்ணாதுரையும், கருணாநிதியும் இதர கண்ணீர்த் துளிகளும் ஆட்சி பீடத்திருந்து அதிகாரம் செய்த காரணத்தால் அவர்களை அண்டுவதால் தமக்கு மரியாதைகளும், மலர்மாலைகளும், திறப்பு விழாக்களும் பிற சிறப்புகளும் கிடைக்கிறதென்ற காரணத்தால் அவர்களைப் பச்சைத்தமிழன் என்றும் உண்மைத் தமிழன் என்றும் கலைஞர் கருணாநிதி என்றும் தனது பரிவாரங்களென்றும் பரிந்துரைகள் வழங்கிப் பாராட்டுதல் தெரிவிக்கின்றார்.

ஆனால் அவருடைய மனதின் அடித்தளத்தைச் சோதித்துப் பார்த்தால்—

"உம், என்னிடம் மாதம் முப்பது ரூபாயுக்கு இருந்த பயல், இப்போது மந்திரியாகி விட்டான். மந்திரியாவதற்கு அவனுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது" என்று பொருமல் பெருமளவில் காணப்படும்.

தமிழ் நாட்டில் இன்று தன்னை மிஞ்சிய அறிவாளி யாரும் இல்லை என்றும் தன்னைத் தவிர்த்து மற்றெல்லோரும் முட்டாள்கள் என்றும் கற்சிலைகள் அடித்து கற்களில் பொறித்து வாழும் பெரியாரின் மனோநிலையை இதுகாறும் கணித்தோம். இவ்விஷயத்தைத் தொடர்வோம்.

மக்களை யார் யார் அடிமை கொண்டார்கள்

முதலாவது :

பராக்கிரமம் மிக்க பலசாலிகள் துஷ்டமிருகங்களைக் கொன்று வேட்டை ஆடினார்கள். அவர்கட்குக் காலாட்களாகப் பலர் தொடர்ந்தனர்.

இரண்டாவது : சின்னஞ்சிறிய கூட்டங்களிடையே மோதல்கள் ஏற்பட்டபோது வீராவேசத்துடன் பலரைக் கொன்று குவித்தவன் ஒரு குட்டித் தலைவனாக விளங்கினான். அவனுடைய எல்லைக்குள் அவனுடைய அதிகாரம் செல்லுபடியாயிற்று.

இந்த வீரர்கள் தங்கள் பராக்கிரமத்தினாலும், செல்வாக்கினாலும் காடுகளைத் திருத்தி அந்நிலத்தின் மீது நிலப்பிரபுத்துவம் வகிக்கத் தொடங்கினார்கள். நிலமில்லாத பாமரர் இவர்களுக்காக உழைத்து வந்தனர்.

இத்தகைய நிலப்பிரபுக்களில் மிகப் பிரபல்யமானவன் ஒரு சிற்றரசனாக விளங்கினான்.

மூன்றாவதாக : பல சிற்றரசுகளுக்கு மேலாக ஒரு பேரரசன் விளங்கினான்.

இவ்வாறாக வீரமும், பராக்கிரமமும், துணிவும் ஊக்கமும் உழைப்பும் மிக்கவர்கள் உலகெங்கும் மக்களின் தலைவர்களாக விளங்கி அவர்கள்மீது அதிகாரம் செலுத்தலானார்கள்.

வாணிபம் செய்து திரவியத்தைக் குவித்த செல்வந்தர் மன்னர்கட்குத் தேவையான போதெல்லாம் செல்வமளித்து, நாடெங்கும் மதிப்புற வாழ்ந்தனர்.

நான்காவது :

நீராவி, எண்ணெய், நிலக்கரி, மின்சாரம், அணுசக்தி ஆகிய விஞ்ஞானத்திறன் பெருகி உலகெங்கும் சிறிய, பெரிய இயந்திர சாலைகளும் தொழில் நிறுவனங்களும் பெருகிய பின்னர் பல்லோரிடத்தும் பணமும், பணத்தாலாகிய பலமும் செல்வாக்கும் பெருகப் பெருக மன்னராதிக்கம் சிறுகிச் சிறுகி இறுதியில் இன்று நாம் காண்கின்றபடி நாடெங்கும் பாராளு மன்றங்கள் தோன்றின.

அந்தப் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்திருந்த பெருஞ் செல்வர்களும், பட்டதாரிகளும் நாளடைவில் செல்வாக் கிழந்து பெரியாரின் சித்தாந்தப்படி "அன்னக்காவடிகள்" தங்கள் பிரசார பலத்தினால் அவ்விடங்களைப் பற்றிக் கொண்டு அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

எனினும் இன்றைய தினமும், பணபலமும் செல்வாக்கும் உடையவர்களால் இந்த ஆட்சி பலத்தைக் கவிழ்க்கவும், மாற்றவும், தேர்தல்களில் வெற்றி பெறவும் கட்சிகளை ஆக்கவும், அழிக்கவும் வாய்ப்புகள் இருக்கின்றன.

ஐந்தாவது :

ஆகையால் பாம்பின் விஷப்பற்களைப் பிடுங்குவதைப் போல் மக்களுடைய "விஷப்பற்களான" ஜீவாதார உரிமை களைப் பிடுங்கி விடுவதற்கு பிரமப்பிரயத்தனம் செய்து வரு வதை நாள்தோறும் காண்கிறோம்.

செல்வந்தரின் வருமானத்தின் மீது வரிகள் விதிக்கப்பட் டன. அவ்வரிகள் படிப்படியாக ரூபாய்க்கு தொண்ணூறு பைசாக்கள் வரை உயர்ந்திருக்கிறது.

தொழிற்சாலைகள் நடத்துவதற்கும் வாணிபம் செய்வ தற்கும் அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டுமென சட்டங்கள் செய்யப்பட்டன.

அமித லாப வரி, செல்வ வரி செலவு வரி அபிவிருத்தி வரி, ஏற்றுமதி இறக்குமதி வரி, உற்பத்தி வரி, விற்பனை வரி,; விவசாய வரியென்று எத்தனையோ வரிகள் விதித்தும் அரசாங்கத்தின் பசி அடங்கவில்லை.

கடைசியாக : வியாபாரத்தையும் பல தொழில்களையும் "தேசிய மயம்" ஆக்கினார்கள். இப்போது பாங்குகளை தேசிய மயமாக்கியுள்ளார்கள்.

என்ன செய்தாலும் அரசாங்கத்தின் பசி அடங்காது என்பது நிதர்சனம்.

முன்பு செல்வந்தர் அதிகாரம் செலுத்தினார்கள். இன்று அதிகாரிகள் செல்வந்தராகி வருகின்றனர்.

## சோஷலிச கூச்சல்

கோவைக்கு மேற்கே உள்ள மருதமலை திடீரெனத் தங்க மாகி விட்டால் யாருக்கு லாபம் என்றொரு கேள்வியை ஈ. வெ. ரா. பெரியார் அந்தக் காலத்தில் எழுப்பி அதற்கு அவரே விடையும் சொல்வார்.

தங்கத்தை வெட்டியெடுக்க தொழிலாளர் அமர்த்தப் படுவார்கள்.

அவர்களுக்கு அன்றாடக் கூலி கொடுக்கப்படுமேயன்றி வெட்டி எடுக்கப்படும் தங்கத்தில் ஒரு தூசியும் கொடுக்கப்பட மாட்டாது.

வேலை செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பும்போது அவர் கள் சோதனையிடப் படுவார்கள். வேஷ்டி, சட்டையெல் லாம் தொட்டுப் பார்ப்பார்கள்.

அவர்களுடைய வாய்களையும் ஆவெனப் பிளந்து பார்ப் பார்கள்.

தங்கத்துண்டுகளை அவர்கள் விழுங்கியிருப்பார்களோ வென்று எக்ஸ்ரேயில் பார்ப்பார்கள்.

இல்லையானால் இரண்டு அவுன்ஸ் விளக்கெண்ணெய் குடிக்கச் சொல்லி மலத்தைப் பரிசோதனை செய்து பார்ப்பார்கள் என்பார் பெரியார்.

இந்திய ரயில்வேக்கள் முன்பு தனிப்பட்ட கம்பெனிக்குச் சொந்தமாயிருந்தன. இப்போது அரசுடைமையாகி விட்டது.

அதனால் தொழிலாளருக்கு என்ன இலாபம்? இரயில்வேயில் வரும் இலாபம் அவர்களுக்குப் பங்குபோட்டு பிரித்துத் தரப்படுகிறதா? இல்லையே! அல்லது இரயில்வேக்களின் நிர்வாகத்திலாவது தொழிலாளருக்குப் பொறுப்புண்டா? அதுவும் இல்லையே?!

ஆயுள் இன்சூரன்ஸ் தேசிய மயமாக்கப்பட்டது. அங்கே கம்ப்யூட்டர்களை வைத்துச் சிப்பந்திகளை என்ன சேதி யென்று கேட்கிறார்கள்.

பக்ரா, ராஞ்சி, சித்தரஞ்சன், ரூர்கேலா போன்ற எத்தனையோ அரசாங்க ஸ்தாபனங்கள். அங்கெல்லாம் கூலிக்காகத் தானே மக்கள் உழைக்கிறார்கள். தேசவுடமைகள் எனப்படும் அவைகள் உழைப்பாளிகளின் உடமையாக மாறவில்லையே.

வேண்டுமானால் தொழிலாளர்களும் அவர்களுடைய மேலதிகாரிகளும் கூட்டு சேர்ந்து அவைகளில் திருடலாம்! கன்ட்ராக்டர்களிடம் கைக்கூலி வாங்கலாம்.

ராஞ்சி கனரக என்ஜினியரிங் தொழிற்சாலையில்,

1964-65-ல் 1.50 கோடி ரூபாய் நஷ்டம்.

1965-66-ல் 1.37 கோடி ரூபாய் நஷ்டம்.

1966-67-ல் 6.23 கோடி ரூபாய் நஷ்டம்.

1967-68-ல் 16.47 கோடி ரூபாய் நஷ்டம்.

1968-69-ல் 17.00 கோடி ரூபாய் நஷ்டம்.

ஆக அது வேலை செய்யத் தொடங்கிய ஐந்தாண்டுகளில் நமது நாட்டுக்கு மொத்த நஷ்டம் நாற்பத்திரண்டரைக் கோடி ரூபாய். ஆற்றுத் தண்ணீர் அப்பா குடி, ஐய்யா குடி என்பார்களே அப்படி பொது சொத்துக்கள் வரையரையின்றி குடிக்கப்படுகின்றன.

அரசாங்கம் டில்லியிலே சொந்தமாக ஒரு ஹோட்டல் நடத்துகிறது. அங்கு ஆள் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய் வாடகை வசூலிக்கப்படுகிறதாம். ஆனால் கோடி கோடியாய் நஷ்டமாம்!

பணம் திரட்டுவதற்கு அரசாங்கம் தலைமுடி வியாபாரம் கூட நடத்துகிறது!

எல்லா தொழில்களையும் அரசாங்கமே எடுத்து நடத்த ஆவல் கொண்டுள்ளது.

பரத்தையர் இல்லங்களைக்கூட அரசாங்கம் ஆரம்பித்தால் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை.

## தொழிலாளிக்கு என்ன இலாபம்?

எல்லா தொழிற்கூடங்களையும் அரசாங்கமே எடுத்து நடத்துவதாக வைத்துக் கொள்வோம்.

எல்லா நிலங்களையும் ஆரசாங்கம் அர்ஜிதம் செய்து கூட்டுப் பண்ணைகள் வைத்து நடத்துவதாக வைத்துக் கொள்வோம்.

இந்தியாவிலுள்ள சகல கட்டிடங்களையும் குடியிருப்பு வீடுகளையும் அரசாங்கம் உடமையாக மாறி விடுவதாகவே வைத்துக் கொள்வோம்.

அதனால் கோவையிலுள்ள சுப்பனுக்கும், குப்பனுக்கும் அவர்களுடைய பெண்டுபிள்ளைகளுக்கும் என்ன மாறுதல்கள் ஏற்படும்?

குப்புசாமி நாயக்கர் மில்லில் இன்று வேலை செய்யும் தொழிலாளியும், அவர் குடும்பமும் அன்று சர்க்காருக்குச் சொந்தமான மில்லில் வேலை செய்வதால் என்ன இலாபம் அல்லது மாறுதலடையப் போகிறார்கள்?

இன்றுள்ள நிலையில் குப்புசாமி நாயக்கரோடு சண்டை போடலாம். வேலை நிறுத்தம் செய்யலாம். உண்ணுவிரதம் இருக்கலாம். லேபர் கோர்ட்டில் வழக்கு போடலாம். இன்னும் என்னென்னவோ செய்யலாம்.

குப்புசாமி நாயக்கர் ஒழிக! குட்டிச்சுவராகுக! என்றெல்லாம் ஒலிக்கலாம்.

நாளை எல்லா உடமையும் சர்க்காருக்கு சொந்தமான பிறகு ஏதேனும் கூச்சல் போட்டால், தேசத்துரோகிகளென குற்றம் சாட்டப்பட்டுச் சுட்டுத் தள்ளப்படலாம்.

தொழிலாளர் 'வர்க்கம்' இன்றுள்ள முதலாளி வர்க்கத்தை ஒழித்து அரசாங்க வர்க்கத்திற்கு அடிமைகளாதல் குட்டையைத் தறித்துத் தொழுவில் மாட்டிக் கொண்டதற்கொப்பாகும்.

## தொழிலின் வலிமையை அறிந்துகொள்ள வேண்டும்

பூமிக்குள் தண்ணீர் இருக்கிறது. அதை வெளிக் கொணர்ந்தால் குடிக்கலாம், குளிக்கலாம், வேளாண்மை செய்யலாம்.

பூமிக்குள் இரும்புக் கனிகள் இருக்கின்றன. அவற்றை வெளிக் கொணர்ந்து பக்குவப்படுத்தினால் பல இயந்திரக் கருவிகள் செய்யலாம்.

பூமிக்குள் எண்ணெய் இருக்கின்றது. அதனைத் தோண்டி எடுத்தால் பல தொழிற்சாலைகளும், வண்டி வாகனங்களும் நடத்தலாம்.

இவையனைத்தும் நிறைவேற தொழில் வலிமை வேண்டும்; அதாவது மனித சக்தி வேண்டும். அத்தொழில் வலிமைக்கு உறுதுணையாக தொழிற்கருவிகளும் நடைமுறைச் செலவுக்கு முதலீடும், நிர்வாகத்திறனும் வேண்டும்.

தொழிற் திறமை (மக்களின் சக்தி), தொழிற் கருவிகள், முதலீட்டுத் தொகை, நிர்வாகம் ஆகிய நான்கும் தொழிலாளர்களுக்குச் சொந்தமானால்தான் அது உண்மையான சோஷலிசமாகும்; மற்றதெல்லாம் போலி. வெறும் அர்த்தமற்ற ஏமாற்று வார்த்தைகள்.

அவலை நினைத்துக்கொண்டு உரலையிடித்த கதையாகும்

டாட்டாவையும், பிர்லாவையும், குப்புசாமி நாயக்கரையும் குந்தவைத்துவிட்டு தாசில்தாரும், கலெக்டரும் நிர்வாகிகளாகிவிட்டால், சின்னப்பனுக்கும் பொன்னப்பனுக்கும் என்ன பயன்?

சின்னப்பனும் பொன்னப்பனும் தங்கள் எஜமானர்களை மாற்றிக்கொண்டதாகுமே ஒழிய அவர்கள் நிலையில் வேறு மாற்றம் என்ன என்பதை சிந்தனை செய்து பார்க்க வேண்டும்.

டாட்டாவும், பிர்லாவும் சட்டத்துக்கு உட்பட்டு நடப்பவர்கள்; ஆனால் அரசாங்கம் சட்டங்களை இயற்றுகின்ற பூதமாதலால் அதற்கு சட்டவரம்பு ஏது?

அரசாங்கத்திடம் பூரண, சம்பூரண, பரிபூரண சொத்துரிமையை வழங்குவது, காட்டுமிராண்டித்தனத்தை சட்டபூர்வமாக நடத்தும்படி அதிகாரம் கொடுத்துவிட்டதற்கு ஒப்பாகும்.

## மக்கள் உடமை பெறுவதுதான் சோஷலிசம்

அரசாங்கம் உடமைகள் பெறுவது நிரந்தர அடிமைத்தனத்துக்குச் சாசனம் எழுதிக் கொடுத்ததாகும்.

ருஷ்யாவில் புரட்சியைத் தூண்டிவிட்டார்கள்.

முதலாளிகள், நிலச்சுவான்தாரர்கள் போன்ற சின்னஞ் சிறிய பூதங்கள் எல்லாம் அப்புரட்சியில் பலியாயினர்.

சார் அரசனும் அவன் சந்ததியார்களும், நாட்டராயன் கோவிலில் ஆடுகள் பலியானதைப் போல் ஆனார்கள்.

இரத்த வெள்ளம் பெருகிற்று என்று ருஷ்ய தேசத்தின் செல்வம் அனைத்தும் பாட்டாளி மக்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டுவிட்டதா? இல்லையே!

ஒரு சாருக்குப் பதிலாக அங்கு பல சார்கள், கம்யூனிசக் கட்சியின் பூசாரிகள் அரசாளுகின்றனர் என்பதுதானே உண்மை!

அங்குள்ள கூட்டுப் பண்ணைகளில் மக்கள் கூட்டாக வேலை செய்கிறார்கள். கொடுப்பதை—அளப்பதைப் பெற்று தங்கள் வயிற்றைக் கழுவுகிறார்கள். கூட்டிக் கொடுங்கள் என்று கேட்டால் என்ன கிடைக்கும்? உதை கிடைக்கும். சவுக்கடி கிடைக்கும், சிறைச்சோறும் வேலையும் கிடைக்கும்!

அத்தகைய சோஷலிசமா நமக்கு வேண்டும்.

அரசாங்கத்திடம் சகல அதிகாரங்களையும், செல்வங்களை யும் ஒப்புவித்துவிட்டு சரணாகதியென்று வாழும்படியான சோஷலிசமா நமக்கு வேண்டும்?

## நக்ஸல்பாரிகள் என்ன செய்கிறார்கள்

செல்வமில்லாமல் பிறரை அதிகாரம் செய்பவனுக்குப் பெயர் போக்கிரி, திருடன், வழிப்பறிக் கொள்ளைக்காரன் என்பனவாம்.

சூதாட்டத்தில் பணம் சம்பாதிப்பவன், லாட்டரி சீட்டில் பணம் எதிர்பார்ப்பவன், கள்ள நோட்டுகள் அச்சடிப் பவன், கலப்படம் செய்பவன், அதிகாரிகளுக்கு லஞ்சம்

கொடுத்து காரியத்தைச் சாதிப்பவன், பொய் பேசுபவன் கள்ளச் சாராயம் காய்ச்சுபவன், கள்ளக்கடத்தல் செய்பவன், விபசாரம் செய்பவன் ஆகிய எல்லோரும் கொள்ளைக் காரர்கள் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

இத்தகைய மனிதர்கள் கையில் நாட்டின் செல்வமும் அதிகாரமும் ஒன்று சேர்ந்து கிடைத்துவிட்டால் பொது மக்கள் கதி என்னவது?

அடுத்து வெளியிடப்படவிருக்கும் திரைப்படத்துக்கு முன்னோடியாக 'டிரெய்லர்' என்னும் துண்டுப்படம் காட்டு வார்கள். அதில் வெளிப்படவிருக்கும் படத்தின் விசேஷக் காட்சிகள் நிறைந்திருக்கும்.

அந்த முன்னோடி படத்தைத்தான் நக்சல்பாரிகள் வங்கத் திலும், ஆந்திராவிலும், கேரளாவிலும் நடத்திக் காட்டி வருகிறார்கள்.

கம்யூனிச முன்னேற்ற கருத்துக்கள் நிறைந்த முழுப்படத் தின் தன்மை எவ்வளவு பயங்கரமானதாயிருக்கும் என்பதை இப்போதிலிருந்தே அவர்கள் காட்டத் தொடங்கிவிட்டனர்.

இந்த கம்யூனிசத்துக்கும் இப்போது கூறப்படுகிற சோஷ லிசத்துக்கும் உள்ள வித்தியாசம் மனைவிக்கும் பெண்சாதிக் கும் உள்ள பெயர் வித்தியாசம்தான்.

இரண்டும் அரசாங்கத்துக்கு அதாவது ஆளும் வர்க்கத் திற்கு—சர்வாதிகாரம் வழங்குவதையே தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இவ்விரண்டுக்கும் உண்மையான பெயர் "ஸ்டேட்டிசம்" என்பதேயாகும்.

## நமக்கு வேண்டுவது இதுவல்ல

கடவுளின் பெயராலும் மதத்தின் பெயராலும் ஒரு கூட்டம் மக்களைச் சுரண்டிப் பிழைத்தது.

மோட்சம் நகரம் என்று பயமுறுத்தி ஒரு கூட்டம் பிழைத்தது.

உடல் வலிவாலும், கத்தி, வாள், ஈட்டி, துப்பாக்கி போன்ற சனியன்களாலும் ஒரு கூட்டம் மக்களை அச்சுறுத்திப் பிழைத்து வந்தது.

பணத்தாலும், பணத் திமிராலும் ஒரு கூட்டம் பிழைத்து வந்தது.

அறிவாலும், மந்திர—ஜாலங்களாலும் ஒரு கூட்டம் ஏமாற்றிப் பிழைத்து வந்தது.

மன்னர்கள் என்போர் பல காலம் மக்களைச் சுரண்டிப் பிழைத்தனர்.

இப்போது யுத்தம் புதிய நவநாகரீக முன்னேற்ற கருத்துகள் நிரம்பிய அரசியல் சூதாடிகள் மக்களின் ஜீவாதார உரிமைகளை எல்லாம் பறித்து மக்கள்மீது சர்வாதிகாரம் —கடவுள், மதம், வீரம், மோட்சம், நரகம், மன்னர், குருக்கள் போன்ற பலர் கூட்டாக நடத்திவந்த சுரண்டல் நாடகத்தை—தான் தனியாகச் செலுத்தப் பார்க்கிறது.

## நமக்கு வேண்டுவது என்ன ?

1. மகாத்மா காந்தியடிகள் சொன்னவாறு மக்கள்மீது மிகக் குறைவான அதிகாரம் செலுத்தப்படுவதுதான் நல்ல அரசாங்கமாகும்.

2. மக்கள் சுதந்திரமாகத் தொழில் புரியும் உரிமையும், சொத்துரிமையும் இதர ஜீவாதார உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

3. பொதுநல சர்க்கார்—வெல்பேர் ஸ்டேட்—என்னும் பெயரால் மக்களின் சுதந்திரத்தை ஆக்கிரமிக்கவோ, சோஷலிசத்தின் பெயரால் மக்களை ஒட்டாண்டிகளாக்கவோ அனுமதிக்கக் கூடாது.

4. பட்டினங்கள் பெருகுவதைத் தடுத்து பட்டிக்காடுகளெல்லாம் தொழில் வளமும், கல்வி வளமும், பிற வளமும் பெறச் செய்யவேண்டும்.

5. சட்டசபை மெம்பர்களுக்கும், மந்திரிகளுக்கும் குறைந்த பட்ச யோக்கியதாம்சங்கள் யாவை என வரையறுக்கப்பட வேண்டும்.

6. சட்டசபை மெம்பர்கள், மந்திரிகள் ஆகியோர் சம்பளங்களும், தினப்படிகள், அலவன்சுகள் ஆகியவையும் ஒரு வரம்புக்குள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

7. ஒரு தனி மனிதன் அல்லது ஒரு தனிக் குடும்பத்துக்கு உயர்ந்த பட்ச வருமானம் இவ்வளவுதான் என்று நிர்ணயிக்கப்பட வேண்டும்.

8. அத்தகைய உயர்ந்தபட்ச வருமானத்துக்கு மேல் சம்பாதிக்கப்பட்ட வருமானத்தை வரியாக வசூலித்து அத்தொகை மக்கள் சமுதாய வருமானம் என்ற கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும்.

9. அதேமாதிரி ஒரு தனி மனிதன் அல்லது குடும்பத்துக்குக் குறைந்தபட்ச வருமானம் எவ்வளவு என்று நிர்ணயிக்கப்படவேண்டும்.

10. அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகைக்குக் குறைவாக வருமானம் இருக்கும்பட்சத்தில் அக்குறைந்த தொகையை மக்கள் சமுதாய கணக்கிலிருந்து எடுத்து ஈடு செய்ய வேண்டும்.

11. ஒவ்வொரு கிராமமும் ஒரு கிராம சமுதாயமாக மிளிர வேண்டும்.

12. அக்கிராம விவகாரங்கள் அந்தக் கிராம சபையினால் கவனிக்கப்படவேண்டும்.

13. ஒவ்வொரு கிராமத்துக்கும் கிராமாதிகாரிகளும், கிராம காவலர்களும், நியாய விசாரணை சபையும் இருக்க வேண்டும்.

14. கிராமத் தொழில் பெருகச் செய்ய வேண்டும்.

15. ஒவ்வொரு நகரமும் நகரசபையினரால் பரிபாலிக்கப் பட்டு வரவேண்டும்.

இவ்வாறு அதிகாரங்களும், நிர்வாகமும் பரவலாக்கப் படும்போது மக்களுக்கு நேரடியான தொடர்பும், திறனும் பொறுப்புணர்ச்சியும் பெருக வாப்புகள் உண்டாகும்.

மாநில அளவில் அதிகாரங்கள் குறையும்.

ஒவ்வொரு மாநிலமும் சுதந்திரமாக செயல்பட வேண்டும்.

16. பெடரல் முறையில் மாநிலங்கள் அனைத்தும் மத்திய அரசுடன் இணைக்கப்பட வேண்டும்.

இந்த ரீதியில் நமது சிந்தனை வளர்ந்து செயல்பட வேண்டும்.

ஒரு உதாரணம் சொல்லி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

பொட்டுப் போட்டவர்கள் எல்லாம் பத்தினிகள் என்று ஒரு ஊரில் தண்டோராப் போட்டார்கள். உடனே அந்த ஊரில் இருந்த பரத்தையர்கள் எல்லாம் பொட்டிட்டுக் கொண்டார்கள். அவர்கள் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு பொட்டின் அளவை பெரியதாக்கிக் கொண்டே சென்றார்கள். ஒரு காசு அகலத்திலிருந்த பொட்டு

பத்துக்காசின் அளவுக்கு வளர்ந்து, ஐம்பது காசு அகலத்துக்கு விரிந்து, விரிந்து, விரிந்து நாளடைவில் நெற்றியின் அகல நீளத்துக்கு பரிணமித்துவிட்டதாம்!

அந்தமாதிரி இந்த நாட்டில் சோஷலிசம் வேண்டும் என்று சொல்பவர்கள்தான் முன்னேறிகள் என்று தண்டோரா போடப்பட்டதும், மாதம் பத்து லட்சம் சம்பாதிப்பவர்களும் சோஷலிசம் பேசுவதில் பிச்சைக்காரர்களையும் மிஞ்சிவிட்டார்கள்! இரண்டு பூனைகள் சண்டை போட்டுக்கொண்டு குரங்கிடம் ஆப்பத்தைப் பறிகொடுத்தக் கதையாகக் கூடாது.

வந்தே மாதரம்!

# 14

# அந்த நாளும் வந்தது!

அந்த நாளும் வந்திடாதோ என்று பாபநாசம் சிவன் அவர்கள் மிக்க உருக்கத்தோடு பாடியதை நான் கேட்டதுண்டு.

முன்பொருகால் தாம் சுவைத்த பொன்னுளை அவர் எண்ணிப் பாடியிருக்கலாம்.

அந்நாள் மீண்டும் வராதா என்றவர் மனம் ஏக்கமுற்றிருக்கலாம்... நமக்கு அந்த நாள் வந்தது!

என்று தணியுமிந்த சுதந்திர தாகம்! என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்...என்று கவிச்சக்ரவர்த்தி சுப்ரமணிய பாரதியார் ஏங்கித்தவித்த அந்த நாள் வந்தது. ஆனுல் அப்பொன்னுன நாளைப் பார்க்க அவர் உயிருடன் இருக்கவில்லை,

ஆம், சுதந்திரதாகம் தணித்த அந்த நாள் வந்தது. அடிமையின் மோகம் கொன்ற அந்த நாள் வந்தது.

பாரத அன்னையைக் கட்டிப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலிகள் அறுந்து, நொறுங்கி, வீழ்ந்த அந்த நந்நாள் வந்தது.

முப்பது முக்கோடி பாரத மக்கள் தோளுடன் தோள் சேர்ந்து, அணிவகுத்துச் சுதந்திர தேவியின் முன்னின்று, அவள் புகழினைப் பாடி மெய்சிலிர்த்த அற்புதக் காட்சி நிறைந்த அந்த அபூர்வ நாள் வந்தது.

தில்லி செங்கோட்டையின் மீது பறந்திருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சின்னமான யூனியன்ஜாக் கொடி இறக்கப் பட்டுப் பாரதத்தாயின் மணிக்கொடி ஆரோகணிக்கப்பட்ட சரித்திரத் திருநாள் வந்தது.

பாரதத் திருநாட்டின் கௌரவம் மீண்டும் பாரெங்கும் உயர்ந்த நாள் வந்தது.

பாரத மக்கள் தோள் கொட்டினர்கள். மன்னும் இமய மலை தங்கள் மலையென்று ஆர்ப்பரித்தார்கள். கங்கை காவேரி நீர்கள் தங்களுடையதென்று எக்களித்தார்கள். புனர்வாழ்வு பெற்ருர்கள்.

இவ்வாருகப் பாரதநாட்டு மக்கள் அனைவரும் வெற்றி முரசு கொட்டிய சுதந்திரத் திருநாள் 1947–ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி அதிகாலைக்கு முன்பே உதய மாயிற்று.

25 ஆண்டுகளுக்கு இப்பால் இன்று வாழும் மக்களில் பல்லோருக்கு அந்நாள் ஒரு வரலாற்றுத் திருநாளாகத் தானிருக்கும்.

ஆனல், அன்று வாழ்ந்திருந்த என் போன்றவர்க்கு, அந்நாள், ஒரு வெற்றித் திருநாளாகத் திகழ்ந்தது.

அன்று எங்கள் மனதில் பீறிட்ட எழுச்சியை, மகிழ்ச்சிப் பெருக்கை, உள்ளக்கிளர்ச்சியை, உணர்வின் வேகத்தை அள விட்டு வர்ணிக்கத்தக்க வார்த்தைகள் உலகில் வழங்கும் எம்மொழியிலும் காணல் அரிதாம்.

அத்திருநாளைக் காணும் பொருட்டு எங்களுக்கு முன் வாழ்ந்த எத்தனை பேர்கள் வெஞ்சிறையில் வாடினர்கள்!

தம் இன்னுயிரைத் தந்து போராடினர்கள்?

ஊர் பேர் தெரியாத அந்த வீரர்களுக்கெல்லாம், இந் நாளில் வாழும் நாம், சிரந்தாழ்த்தி அஞ்சலி செலுத்தல் அன்றி வேறென்ன செய்ய முடியும்?

நாங்களும் எங்கள் இல்லங்களை விட்டு வெளியேறினோம். சுகபோகங்களை மறந்தோம். மனைவி மக்களை விட்டுப் பிரிந்தோம்.

வீராங்கனைகள் தங்கள் யாவற்றையும் துறந்து, வீராவேசங்கொண்டு, வெள்ளைக்காரனை வெளியேற்றும் தொண்டில் ஈடுபட்டார்கள். அடிமைத் தளையை அறுத்தெறிய ஆவேசம் பூண்டார்கள்.

அவ்வீரவனிதையர், தங்கள் சேலையை வரிந்துகட்டி, ஆண்களுடன் சரிநிகர் சமானமாக, நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்ட காட்சியை என்னென்போம்!

அவர்கள் குண்டாந்தடியடி பட்டார்கள். குருதி வழிந்து பாயத் தெருக்களிலே செத்து மடிந்தார்கள். சிறைச் சாலைகளில் புகுந்தார்கள்.

உடல் மெலிந்தார்கள். எனின் அவர்கள் உள்ளம் தளரவில்லை.

ஏழைமையில் உழன்றார்கள். எளிமையில் தவழ்ந்தார்கள். எனினும் அவர்கள் சீலம் குன்றவில்லை. சீர்மை மங்கவில்லை.

தாயின் மணிக்கொடியைத் தாங்கிச் சென்றார்கள்; தடியடிகள் பட்டும் தங்கள் கொடியினைத் தளராது பற்றி நின்று பாரத அன்னைக்கு வெற்றி, வெற்றியெனப் பள்ளுப் பாடினார்கள்.

"பந்தமுற்றெத்தனை நாள்—இந்தப்
பாரினில் ஈடழிதல்?
தொந்தமில்லாத சுக—வாழ்வைத்
தோற்றுவிப்போம் வாராய்"

என்று அந்தச் சாரணர்களும் சாரணிகளும் தெருக்களிலே பாடிச் சென்றார்கள்.

"இந்த வுடல் சதமா?—இது
என்றும் இறப்பதுவே!
தந்தை மரிப்பவனே-பெற்ற தாயும் மரிப்பவளே"

மிக்கவெம் புல்லடிமை—நீங்கி
மேதகு வாழ்வு பெற...
சத்தியப்போர் செய்குவாய்—அட
இந்தியனே எழுவாய்

என்று அவர்கள் உறக்கத்திலிருந்த மக்களைத் தட்டி எழுப்பினார்கள்.

"வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று,
வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரததேசந்தன்னை
வாழ்விக்கவந்த காந்தி"

எம்மிடையே அன்று வாழ்ந்திருந்து,

"அடிமை வாழ்வகன்று-இந்நாட்டார்
விடுதலை யார்ந்து, செல்வம்
குடிமையிலுயர்வு, கல்வி, ஞானமும்
கூடி யோங்கிப் படிமிசை தலைமையெய்தும்
படிக்கொரு சூழ்ச்சிசெய்து
முடிவிலாக் கீர்த்திபெற்று புவிக்குளே"

அவரும் முதன்மையுற்று, நம்மையும் முதன்மைபெறச் செய்தார்.

வெள்ளையனே! வெளியேறு! என்று காந்தி குரல் கொடுத்தார்.

1947-ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 14-ந் தேதி நள்ளிரவில் அடையாள பூர்வமாகப் பிரிட்டிஷ் படையினர் ஒரு பகுதி பம்பாயில் கப்பலேறி இங்கிலாந்தை நோக்கித் திரும்பினார்கள்.

இந்தியா சுதந்திர நாடாயிற்று.

இந்திய மக்கள் இவ்வுலகினில் மீண்டும் சுதந்திர மக்களாயினர்! ஆயினும் அந்தோ...

இந்திய மண்ணில் பிறந்து, இந்தியத் தாயின் மடியில் தவழ்ந்து, இனிய கனிவர்க்கங்களை உண்டு கொழுத்து, இந்தியாவின் நதி தீரங்களிலே நீந்தி விளையாடி, இந்தியப் பூங்காவிலே உலவித் திரிந்த மக்கள் சிலர், மதத்தின் பெயரால், இந்தியாவைத் துண்டாடிச் சென்றதும், அதன் விளைவாகப் பலகோடி மக்கள் இடம்விட்டுப் பெயர்ந்தும், அவர்கள் பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமான சொந்த வீடுகள், சொத்துச் சுகங்கள் யாவற்றையும் இழந்ததும், அவர்களிற் லட்சோப லட்சம் பேர்கள் மதவெறியர்களால் கொலையுண்டதும், எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும், மனம் நொந்து புழுங்கி, ரத்தக்கண்ணீர் சிந்தும் அவர்களது உறவினர்கள் இன்றும் நம்மிடையே இருக்கக் காண்கிறோம்.

இந்தியா சுதந்திரம் பெறுதற்கு நாம் கொடுத்த அரிய விலை இதுவாம். இதை எண்ணினுல் நமது நெஞ்சம் எரி தழலாகின்றது.

* * *

சுதந்திரம் வந்த நாளன்று, நான் பிறந்த கோவைமா நகரில் இருந்தேன்.

அன்று திரள் திரளாக மக்கள் கதர்க்கடைகளை முற்றுகை யிட்டு, அங்கிருந்த கதராடைகளையும், கதர்க் கொடிகளையும் வாரிச் சென்றதைக் கண்டேன்.

வீடுகள் தோறும் பாரதத்தாயின் மூவர்ணக்கொடி பட்டொளி வீசப் பறந்திடக் கண்டேன்.

தெருக்கள் தோறும் தோரணங்கள் அலங்கரித்தன. வீட்டின் முன்புற வாசல்களை மாக்கோலங்கள் அழகுறச் செய்தன.

பட்டாசுகள் வெடித்தன. பள்ளிப்பிள்ளைகள் சீருடை அணிந்து அணிவகுத்துச் சென்றனர். கோவில் மணிகள் ஒலித்தன.

மக்கள் ஒருவரையொருவர் கட்டித் தழுவிப் பரவசப் பட்டனர்.

சுதந்திரத் திருநாள் பிறப்பதற்கு முந்திய நாளாகிய 14–ந் தேதியன்றே கோவை மா நகரம் திருவிழாக்கோலம் பூண்டது.

நகரின் பல பாகங்களிலே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. பொதுக் கூட்டங்களில் நகரப்பிரமுகர்கள் பிரசங்கமாரிகள் பொழிந்தனர்.

## கோவை கலெக்டர்

அன்று கோவை ஜில்லாக் கலெக்டராயிருந்த F. W. A. மாரீஸ் என்னும் ஆங்கிலேயர் என்னிடம் வந்தார்.

நான் "கஞ்சன்" என்னும் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டுக் கோவை சென்ட்ரல் ஸ்டூடியோவில் இருந்தேன்.

மறுநாள் நடைபெறவிருக்கும் சுதந்திரத்தின் விழாக் கொண்டாட்டக் கூட்டத்தில் பாடுவதற்கேற்ற ஒரு பாட்டு இயற்றித் தருமாறு கலெக்டர் மாரீஸ் என்னிடம் கேட்டார்.

அன்றே, அப்பொழுதே, அந்த இடத்திலேயே பல அடிகள் கொண்ட ஒரு பாட்டு எழுதிக் கொடுத்தேன்.

அந்தப் பாட்டிற்கு ஜுபிடர் பிக்சர்ஸ் சங்கீத டைரக்டர் எஸ். எம். சுப்பையாநாயுடு இசை அமைத்துப் பாடச் செய்தார்.

ஜுபிடர் பிக்சர்ஸ் பார்ட்னர் எம். சோமசுந்தரம், அப் பாட்டைப் பதிவு செய்து கொடுப்பதற்குத் துரித ஏற்பாடுகள் செய்தார்.

மறுநாள் மாலை நாலேமுக்கால் மணிக்கு கோவை காரனேஷன் பார்க்கில், காந்தி—இர்வின் ஸ்டேடியத்தின் பின்புற மைதானத்தில், கோவைக் கலெக்டரின் 'அழைப்புக் கிணங்கப் பெருந்திரளாக மக்கள் கூடியிருந்தனர்.

பாண்டு வாத்யங்கள் முழங்கின. போலீஸ் படையின் அணி வகுப்பு மரியாதையைக் கலெக்டர் ஏற்றுக்கொண்ட பின், அசோக சக்கரம் பொறித்த இந்தியாவின் மூவர்ணச் சுதந்திரக் கொடியை, மக்களின் ஆரவாரத்தினிடையே ஏற்றி வைத்தார்.

கொடியேற்றத்திற்குப் பிறகு கலெக்டர் "தர்பார்" நடத்தினர்.

அப்போது அவர் கூறியதாவது:—

"இத்தகைய அதிமுக்யத்துவம் வாய்ந்ததும், சிறப்புடையதும், சரித்திரப் புகழ் பெற்றதுமான ஒரு கூட்டம், இங்கு கூடியிருக்கும் உங்களது வாழ்நாளில், மீண்டும் நடைபெறப் போவதில்லை."

"சுதந்திர லட்சியம் நிறைவேறுவதற்குப் பாடுபட்டும், சிறை சென்றும், உயிர் நீத்த வீரர்களை நினைவு கூறி, அவர்கட்கு நாம் இத்தருணத்தில் அஞ்சலி செலுத்துவோம்.

"சுதந்திரம் பெறுவதற்கு முன்னின்று வழிவகுத்துச் செயலாற்றிய மகத்தான ஸ்தாபனத்தையும் நாம் போற்றிப் புகழ்ந்து நன்றி கூறுவோம்.

"அசோகர் காலத்தில் இந்தியாவின் ஒற்றுமையும், கலாச்சார மேன்மையும் உச்ச நிலை அடைந்திருந்தது. அவர் காலத்தில் பொறிக்கப்பட்ட அசோக சக்கரம் இன்று நமது தேசீயக் கொடியில் நடு நாயகமாக விளங்குகிறது.

"கடந்த காலத்தில் உள் நாட்டுப் பூசல்கள் அந்நிய ஆக்கிரமிப்புக்கு அடிகோலியது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்து, அத்தகைய அபாயங்கள் மீண்டும் தலை தூக்கச்

செய்யாதவாறு, நாம் ஒற்றுமை குலையாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

"பாகிஸ்தான் பிரிவினை இந்த நாட்டுக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும். அப்பிரிவினை நேர்ந்தது குறித்து நாம் ஆறாத்துயர் கொள்கிறோம்."

கலெக்டர் மாரீஸ் அன்று கூறிய இவ்வார்த்தைகள், இன்றும் நமது கவனத்திற்குரியனவாகும்.

* * *

கலெக்டரின் தர்பாருக்கு என்னால் போக முடியவில்லை

அன்று அன்னூர், புஞ்சைப் புளியம்பட்டி ஆகிய ஊர்களில் நடைபெற்ற சுதந்திர விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக என் மனைவி கோவிந்தம்மாளும் நானும் அழைத்துச் செல்லப்பட்டோம்.

1926ஆம் ஆண்டில் நாங்கள் புஞ்சைப் புளியம்பட்டியில் குடியேறி, அங்கு ஆறாண்டு காலம் இருந்து, கதர் உற்பத்தியைப் பெருக்கி அந்த வட்டார மக்களின் மனதில் தேச பக்திச் சுடர் கொழுத்திப் பல போராட்டங்கள் நடத்தி இறுதியில் 1932ஆம் ஆண்டு நாங்களிருவரும் சிறை சென்றோமாதலால், அவ்வட்டார மக்கள் எங்களை விடுத்துச் சுதந்திர தினத்தைக் கொண்டாட இசையவில்லையாதலால், நாங்கள் அங்கு போக வேண்டியதாயிற்று.

* * *

கோவை காரனேஷன் பார்க்கில் நடைபெற்ற சுதந்திர தினவிழா கொண்டாட்ட நிகழ்ச்சிகளை ஜூபிடர் சோமசுந்தரம் அவர்கள் திரைப்படமாக்கினார். கலெக்டர் மாரீஸ் நிகழ்த்திய ஆங்கிலச் சொற்பொழிவு என்னால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அத்துடன் சேர்க்கப்பட்டது. நான் எழுதிக் கொடுத்த பாட்டுகளும் கனஜோராக அவற்றுடன் இணைக்கப்பட்டு இந்தச் செய்திச் சுருள் நான் வெளியிட்ட

'கஞ்சன்' படத்துடன் துணைப்படமாகச் சேர்க்கப்பட்டது. அத்துடன் மகாத்மா காந்தி பழநிக்கு விஜயம் செய்தக் காட்சிகளையும் ஜூபிடர் சோமசுந்தரம் திரைப்படமாக்கிக் கொடுத்ததும் 'கஞ்சன்' படத்துடன் வெளியிடப்பட்டதென் பது குறிப்பிடத்தக்கதாகும்.

பத்திரிகைகள் அனைத்தும் சுதந்திர தின மலர்கள் வெளி யிட்டன.

சுதந்திரத் திருநாள் வாழ்த்துக்கள் அச்சிட்டு மக்கள் ஒரு வருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர்.

இன்று நம் நாடு சுதந்திரம் அடைந்து இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. நாடெங்கும் வெள்ளி விழா கொண்டா டப்படுகிறது.

கடந்த 25 ஆண்டுகளில் பாகிஸ்தான் மூன்று முறை நம் மீது படையெடுத்து வந்தது. ஒவ்வொரு முறையும் செவ்வை யாக அடி வாங்கிக் கொண்டு ஓடிற்று.

முதன்முறையே காஷ்மீரத்தில் அதன் வாலை ஒட்ட நறுக்கியிருக்கலாம். அதைச் செய்திருப்போமானல் பாகிஸ் தானின் கொட்டம் அடங்கியிருக்கும். அதனுல் வருந் தொல்லையும் தீர்ந்து போயிருக்கும்.

சீனமும் ஒருமுறை நம்மீது மோதிப் பார்த்தது. தானுகவே போரை நிறுத்திப் பின் வாங்கியது.

நமது நாடு பலமிக்க நாடுகளில் ஒன்ருக இன்று உலகத் தாரால் கருதப்படுகிறது.

நாம் மேலும் மேலும் நமது பலத்தைப் பெருக்கியாக வேண்டும்.

வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் நாம் அயராது உழைக்க வேண்டும்.

நமது கிராமப்புறங்கள் அனைத்தும் தொழில் மயமாக வேண்டும்.

ஒவ்வொரு குடிலும் யாதாகிலும் ஒரு தொழில் புரியும் கூடமாக விளங்கவேண்டும்.

மக்களின் சோம்பலும் மடமையும் அகலுமானால் மக்கள் தம்மில் இன்று காணப்படும் ஏழ்மையும், வறுமையும் தானாக ஒழிந்துவிடும்.

வெறும் கூச்சல்களால் எதையும் சாதிக்க முடியாது.

கடின உழைப்பும், ஊக்கமும் முயற்சியும் நம்மில் பெருக வேண்டும்.

நாம் அனைவரும் பாரதப் புதல்வர்கள் என்ற எண்ணம் குன்றாதிருக்கவேண்டும்.

பாரத நாட்டு மக்கள் அனைவரும் ஒரே குலம், ஒரே இனம், ஒரே ஜாதி என்ற ஒற்றுமை வளருமானால், இந்த உலகிலுள்ள எந்த சக்தியாலும் நம்மைப் பணிய வைக்க முடியாது. நாம் தளரமாட்டோம். வாழ்க நிரந்தரம், பாரத சுதந்திரம்.

# 15

# நமது கிராமங்கள் முன்னேற்றமடைய நாம் என்ன செய்யவேண்டும்?

நமது கிராமங்களின் முன்னேற்றம் பற்றி வானளாவப் பேசப்படுகிறது.

இன்று நேற்றல்ல, பன்னெடுங்காலமாகப் பேசப் படுகிறது.

அதைப்பற்றிப் பேசாத நாள் இல்லை; பேசாத நா இல்லை; எழுதாத ஏடில்லை.

கோவில் நாமாவளி போன்று பொதுக் கூட்டங்களிலும் இப்பேச்சு முழங்குகிறது.

ஆனல் காரியத்தில் இதுகாறும் என்ன செய்யப்பட்டது; என்ன செய்யப்படுகிறது என்பது அக்கறையுள்ளவர்கள் எல்லோரும் அறிவார்கள்.

நமது கிராமங்களின் முதுகெலும்பாக இருப்பது விவசாயம். ஆதலால் விவசாயம் விருத்தி அடைந்தால் கிராமம் முன்னேறிவிடும் என்பதாகக் கருதப்பட்டு,

Grew more Food

உணவு உற்பத்தியைப் பெருக்கு

Green revolution
பசுமைப் புரட்சி

என்பன போன்ற ஸ்லோகங்கள் முழங்கின.

பாசன வசதிகள் அதிகரிக்க முயற்சிகள் செய்யப்பட்டன.
வீரிய வித்துக்கள்,
ரசாயன உரம்,
பூச்சிக் கொல்லி மருந்துகள்,
விசைத் தெளிப்பான் கருவிகள்,
இரும்புக் கலப்பைகள்,
டிராக்டர்கள்

ஆகியவை பிரபல்யப்படுத்தப்பட்டன.

ஒரு கதிர் விளைந்த இடத்தில் ஒன்பது கதிர்கள் விளைவிக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. விளைச்சல் போட்டிப் பந்தயங்கள் நடந்தன. கிருஷி பண்டிட் என்ற பட்டங்களும், ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

விவசாயக் கடன் வங்கிகள் நிறுவப்பட்டன. புதிய கிணறுகள் வெட்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், சில குறிப்பிட்ட வேளாண்மைப் பயிர்கள் விளைவிக்கவும் கடன்கள் வழங்கப்பட்டன.

பஞ்சாயத்து ஒன்றியங்களில் விவசாய விஸ்தரிப்பு அதிகாரி வீற்றிருக்கிறார். கூட்டுறவு அமைப்பாளர் குந்தியிருக்கிறார். சிறு தொழில் அபிவிருத்தியாளர், சமூகக் கல்வி நல ஊழியர், வீட்டுத் தோட்ட பிரசாரணிகளான கிராம சேவகிகள், சேவக்குகள் அணிவகுத்து நிற்கின்றனர்.

கால்நடை ஆஸ்பத்திரிகள், Health centre எனப்படும் கிராம மருத்துவ நிலையங்கள் செயல்படுகின்றன.

எனவே கிராம முன்னேற்றத் துறையில் அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லையென்று சொல்ல முடியாது.

ஆனால் கிராமங்கள் இவற்றால் முன்னேற்றம் அடைந்தனவா... இல்லையென்றால் ஏன் ஆகவில்லை...என்பன சிந்தித்து தெளிந்து அறிய வேண்டிய விஷயங்களாகும்.

விவசாய அபிவிருத்தி ஒன்றினால் மட்டும் கிராமங்களும், கிராம மக்களும் முன்னேற்றம் அடைந்துவிட முடியாது.

பூமிகள் உள்ள அளவுக்குத்தான் விவசாயத்தை விஸ்தரிக்க முடியுமே அல்லாது பூமியின் விஸ்தீரணத்தை அதிகப்படுத்த கடவுள்களாலும் முடியாது.

என்னதான், எத்தனைதான், விவசாய அபிவிருத்திக்குரிய காரியங்களை மேற்கொண்டாலும், விவசாயம் இயற்கையின் திருவிளையாடல்களுக்கு உட்பட்டதொன்றாகும்.

மழைமாரிகள் ஒத்துப் பெய்து, நோய் நொடிகள் இல்லாது, காலா காலத்தில் எல்லாம் ஒழுங்காக நடைபெற்று, விவசாயப் பண்டம் வீடு வந்து சேரும் வரையில் உறுதி சொல்ல முடியாது.

விவசாயம் சூதாட்டத்தைப் போன்றது. வாய்த்தாலும் வாய்க்கும்; ஏய்த்தாலும் ஏய்க்கும்.

சில சமயம் உழக்கோல் தடிதான் மிஞ்சும்.

மீளாக் கடனிலிருந்து மீண்டு, வாளாவிருக்கும் விவசாயிகளைக் காண்பது அரிது.

விவசாயத் தொழிலுடன் வேறு ஏதேனும் தொழில் செய்து வருவாய் பெறுபவர்களே மோட்டார் கார்களிலும், வில் வண்டிகளிலும் சவாரி செய்ய முடியும்.

முற்றிலும் விவசாயத்தையே நம்பி வாழும் சின்னஞ்சிறு குடியானவர்கள், வாடகைக்கு வண்டி ஓட்டுவார்கள், கூலிக்கு ஏர் உழப் போவார்கள். மண் வெட்டியைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு பிற பூமிகளில் வேலை செய்யப் போவார்கள். அவன் மட்டும் அல்ல; அவன் மனைவியும்

மக்களும் கூலி வேலைக்குச் சென்றால்தான் வயிறாரக் கூழேனும் குடித்துக் காலந்தள்ள முடியும். வானம் பார்த்த பூமியை மட்டும் நம்பி அவர்களால் வயிறு வளர்க்க முடியாது.

"ஆத்தாள் நூற்பது அய்யனுடைய அரைஞாண் கயிற்றுக்குத்தான் சரியாய்ப் போகும்" என்ற நிலையில்தான் அவர்கள் வாழ்ந்திருப்பார்கள்.

50 வருடங்களுக்கு முன் ஆறுமுகக் கவுண்டனுக்கு ஒரே ஒரு பையனும், இரண்டு பெண் குழந்தைகளும் இருந்தனர். அவனுக்கிருக்கிற பூர்வீகச் சொத்து முப்பது ஏக்கர் புன்செய் பூமி.

இரண்டு பெண்களையும் அதிக ஆடம்பரம் இல்லாமல் மணமுடித்துக் கொடுத்தான். பையனுக்கும் கல்யாணம் செய்து வைத்தான். பையன் கிடுகிடுவென்று ஆறு பையன்களுக்கு தகப்பனாகிவிட்டான்.

காலக்கிரமத்தில் முப்பது ஏக்கர் நிலமும் எட்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. ஆறு பேரப் பிள்ளைகளுக்கும் ஆளுக்கு நான்கு ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. பாட்டனும் தகப்பனும் மீதி ஆறு ஏக்கரை கூட்டாக உழுது, விதைத்து உண்டு வருகிறார்கள்.

விவசாய அபிவிருத்தியால் உற்பத்தி ஒன்றுக்கு இரண்டாகவோ மூன்றாகவோ பெருகியிருக்கலாம். ஆனால் தகப்பனும் மகனும் இரண்டே பேர் அனுபவித்திருந்த பூமிக்குள் இப்போது எட்டுப் பேர்கள் புகுந்து விட்டார்கள். ஆறு பேரப்பிள்ளைகளுக்கும் கல்யாணம் செய்தால் ஆறு மனைவிமார்கள் வந்துவிடுவார்கள். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப்படி ஆளுக்கு இரண்டே இரண்டு குழந்தைகள் போதுமென்றிருந்தாலும், அவர்கள் குடும்பத்தில் 12 குழந்தைகளும், 12 புருஷன் பெண்சாதிகளும், 2 கிழவிகளும் 2 கிழவர்களுமாகச் சேர்ந்து 28 பேர்கள் ஆகி விடுவார்களே! இன்னும் பல ஆண்டுகளுக்குப் பிறகு கொள்ளுப்பேரன்களும்,

பேத்திகளும் கூடிவிட்டால் அக்குடும்பத்தின் கதி எப்படி இருக்கும்?

எனவே இதினின்று நாம் அறிந்து கொள்வதென்ன?

விவசாயம் ஒன்றுக்குப் பத்தாய் பெருகினாலும் விரைந்து வரும் குடும்பங்கள் மேம்பாடு அடைய முடியவே முடியாது என்பதுதான்.

குடும்பக் கட்டுப்பாட்டினாலும் கிராம மக்கள் முன்னேற முடியாது.

அது அவரவர்கள் தன்னிச்சையாகச் செய்துகொள்ள வேண்டிய காரியம். காலங் காலமாகப் புத்திசாலிப் பெண்கள் அதை யாருக்கும் தெரியாமல் மிக ரகசியமாக (பகிரங்க ரகசியமாக) அதைச் செய்து கொண்டுதான் வந்திருக்கிறார்கள்.

குடும்பம் பெருத்தால் வருவாய் குன்றிவிடும். வருவாய் குன்றினால் சமுதாயத்தில் தங்களுக்கு உள்ள அந்தஸ்து தாழ்ந்துவிடும் என்ற ஒரே ஒரு எண்ணத்தினால் உந்தப்பட்டு எத்தனையோ செல்வந்தர் வீட்டுப் பெண்கள் ஒன்றுடன் இரண்டுடன் நிறுத்திக் கொள்வது பிரத்தியட்ச உண்மையாகும்.

ருஷ்யா, ஜெர்மனி போன்ற பிற நாடுகளில் குழந்தை பெருகுவதற்கு ஊக்கமளிக்கப்படும் இந்த நாளில், நமது நாட்டில் குழந்தைகள் அருகுவதற்கு ஊக்கமும், பொருளுதவியும் அளிக்கப்பட்டு வருவது வெட்கக் கேடாகும்.

மற்றும் முதலிரண்டு குழந்தைகளில் முக்கால் வாசிப்பேர் முட்டாள்களாகத்தான் பிறப்பார்கள்.

வயது முதிர்ந்து, நல்லறிவும், அனுபவமும் பெறாத நிலையில், காமவேட்கையில் இளந்தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் களைவக்குதவாத குட்டிச்சுவர்களாகத்தான்

திகழ்வார்கள் என்பது ஒவ்வொரு குடும்பத்தையும் ஆராய்ந்து பார்த்தால் தெள்ளத் தெளிய உணர முடியும்.

புலனடக்கத்துக்குப் பேர்போன மகாத்மா காந்திக்குப் பிறந்த முதல் மைந்தன் ஹீராலால் குடிகேடனுகவும், ஒழுக்க மற்றவனுகவும் திகழ்ந்து தன் தந்தையைத் தலைகுனிய வைத்தான்.

இது நாம் நேரில் கண்டது. இனி புராணத்தைப் புரட்டிப் பார்ப்போம்.

வசுதேவனுக்கும், தேவகிக்கும் எட்டாவதாகப் பிறந்தவன் கிருஷ்ணன். அந்தக் கடைக்குட்டி கிருஷ்ண பரமாத்மாவாக பூஜிக்கப்படுகிருன்.

பாண்டவர் ஐவரில் மூத்தவன் தருமன். எப்பேர்ப்பட்டவன்! சூதாட்டத்தில் தன் முடியிழந்து, தேசத்தையும் இழந்து, தன்னையும் இழந்து, தன் பெண்டாட்டியையும் பணயமாக வைத்திழந்த மகாபுத்திசாலி அல்லவா அவன்?

எனவே குடும்பக் கட்டுப்பாட்டின் விளைவாக எதிர் காலத்தில் காம வெறியில் கருத்தரித்துப் பிறந்த குழந்தைகளே இருக்குமாயின் இந்நாட்டை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.

## நமது முன்னிற்கும் வேலை

1. விவசாயம் ஒன்றை நம்பியே நமது கிராமங்களும், கிராம மக்களும் சுபிட்சமடைந்து விடுவார்கள் என்ற முட்டாள்தனமான சித்தாந்தம் கைவிடப்பட வேண்டும்.

2. குடும்பக் கட்டுப்பாடு செய்துவிட்டால், ஜனத்தொகை குறைந்து, உணவுப் பஞ்சமில்லாது போய் விடும் என்ற. தவருன கருத்தும் முயற்சியும் குழி தோண்டிப் புதைக்கப்பட வேண்டும்.

3. புதிதாக நிறுவப்படும் சகல தொழிற்சாலைகளும், தொழில் பட்டரைகளும் கிராமங்களின் எல்லைக்குள்தான் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்று சட்டம் போட வேண்டும்.

4. பட்டினக் கரைகளிலும் நெடுஞ்சாலைகளின் இரு மருங்கிலும் தொழிற்பேட்டைகள் தோன்றுவதை தடை செய்ய வேண்டும். இதை வேறு விதமாகச் சொல்வதானால், கிராமமக்கள் தொழில்களை நாடி கிராமங்களை விட்டு வெளி யேறி வருவது தடுக்கப்பட வேண்டும்.

5. இருபதாண்டுகளுக்கு முன் திரு. சி. சுப்ரமண்யம் தமிழ் நாட்டின் நிதி மந்திரியாக இருந்தபோது, கிராமங்களில் தொழில் அபிவிருத்தி ஏற்பட என்ன செய்யலாம் என்பதை ஆராய்ந்து, ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு மூன்று பேர்கள் அடங்கிய ஒரு சின்னஞ்சிறு குழு அமைக்கப்பட்டது. கீழ்க் கண்டவர்கள்தான் அக்குழுவின் மெம்பர்களி!

திரு என். மகாலிங்கம்

,, டெக்ஸ்டூல் பாலசுந்தரம்

,, சி. எ. அய்யாமுத்து

உரிய காலத்தில் இவர்கள் ஒரு திட்டம் தயாரித்துக் கொடுத்தார்கள்.

அத்திட்டடம் என்னவாயிற்றென்று ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

6. அத்திட்டத்தை சுருக்கி அதன் சாராம்சத்தைக் கீழே தருகிறேன்.

அ. பிளாக் லெவலில் கிராமங்கள் தோறும் ஒரு (ALL PURPOSE WORK SHOP) சர்வ தொழிற்சாலை ஆரம்பிக்கப் பட வேண்டும்.

ஆ. வாழ்க்கைக்கு அத்யாவசியமான சகல பொருட் களும் தொழிற் கருவிகளும், சிறந்த வல்லுனர்களைக் கொண்டு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட வேண்டும்.

இ. மேற்சொன்ன தொழிற்சாலைகளில் கிராம வாலிபர் கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு நேர் முகப் பயிற்சி அளித்து, அவர்களைத் தொழில் வல்லுனர்களாகச் செய்ய வேண்டும்.

ஈ. அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் தத்தம் கிராமங் களில் சுயமாகவோ அல்லது பலர் கூட்டாகச் சேர்ந்தோ, தொழிற்சாலைகள் அமைத்துப் பற்பல பொருட்களை உற்பத்தி செய்வதற்கு, அரசாங்கம் சகல வித உதவியும் உற்சாகமும் அளிக்க வேண்டும்.

2. இதன் பொருட்டு (RURAL INDUSTRIES ADVANCEMENT CORPORATION) கிராமீய தொழில் கள் முன்னேற்ற கார்ப்பரேசன்கள், மத்திய மாநில அரசாங்க ஆதரவுடன் நிறுவப்பட வேண்டும்.

இந்த ஸ்தாபனங்கள் கிராமத் தொழில் நிறுவனங்களுக் குத் தேவையான மூலதனத்தைக் கடனாகக் கொடுத்து வர வேண்டும்.

ஊ. ஒரு ஐந்தாண்டுத் திட்டம் வகுத்து, நமது நாட்டி லுள்ள சிறந்த எஞ்ஜினியர் பட்டதாரிகளையும், தொழில் அநுபவமுள்ளவர்களையும் திரட்டிச் சேர்த்து, செயல்பட வேண்டும்.

நமது கிராமங்கள் ஒவ்வொன்றும் ஒரு தொழிற்பேட் டையாக விளங்க வேண்டும்.

கிராமப் புறங்களின் உற்பத்தியான நவ நவமான பொருட்கள் லாரிகளில் ஏற்றப்பட்டு, அவை சாரை சாரை யாகப் பெரிய பெரிய நகரங்கட்கும், துறைமுகப்பட்டினங் கட்கும் போய்க் கொண்டே இருக்க வேண்டும். பிற நாட்டுச் சந்தைகளையும் பிடிக்க வேண்டும்.

இன்று தொழில் வளமும், கலையும் இல்லாது பாலைவனம் போல் காட்சி தரும் கிராமங்கள் செல்வங் கொழிக்கும் சுரங்கங்களாக மாற வேண்டும்.

இன்று சோம்பித் திரியும் கிராமத்து வாலிபர்களும், ஆண், பெண் தொழிலாளர்களும் காலை முதல் மாலை வரை வரிந்து கட்டிக் கொண்டு ஓடியாடி வேலை செய்ய வேண்டும்.

சோம்பலும் மூதேவியும் கிராமத்தை விட்டு குடியேறச் செய்து, வேலையோ வேலையென்று நகர்ப்புறங்கட்கு நாடோறும் செல்லும் கிராம வாசிகளைத் தத்தம் கிராமங்களிலேயே நிலை பெற்று வாழச் செய்ய வேண்டும்.

## காதி கிராமத் தொழில் கமிஷன்

என்ற பெயரில் பம்பாயில் ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. மலை முழுங்கும் மகாதேவன்கள் இதில் நிறைந்திருக்கிருர்கள்.

அரசாங்கம் ஆரம்பித்த கனரகத் தொழில்களுக்கும் போட்டியாக இந்தக் கமிஷன் 25 ஆண்டுகளுக்கு முன் இது சில ஆண்டிகளால் தோற்றுவிக்கப்பட்டது.

இது வரை ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இந்த ஆண்டிப் பரதேசிகள் விரையம் செய்துவிட்டார்கள்.

இன்று ஆண்டொன்றுக்கு 10 கோடி ரூபாய்க்கு கதர் உற்பத்தி செய்யப்படுவதாக இவர்கள் கணக்கு காட்டுகிருர்கள்.

முப்பதாண்டுகளுக்கு முன் ஒரு கதர் வேஷ்டி ஒரு ரூபாயுக்கு விற்கப்பட்டது. இன்று வேஷ்டியின் விலை பத்து ரூபாய்.

எனவே ஒன்றுக்குப் பத்தாக விலை கூடியுள்ளதே தவிர, உற்பத்தி பெருகவில்லை.

இந்தக் கமிஷனில் உள்ளவர்கள் ஆகாய விமானத்தில் தான் பறக்கிருர்கள்.

யார் அப்பன் வீட்டுச் சொத்து!

இவர்கள் ஒரு துரும்பைக் கூடக் கையால் தொடுவதில்லை.

கதர் உற்பத்தி செய்து வரும் சர்வோதய சங்கத்திற்கு கடன் கொடுத்து வருகிறார்கள். அதாவது மார்வாரி பிசினஸ் செய்து வருகிறார்கள்.

இந்தக் கமிஷன் சேர்மேனுக்கு மத்திய அரசாங்க மந்திரிகள் வாங்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறது!

பம்பாயில் மலபார்ஹில் என்ற பிரதேசத்தில் குடியிருக்கப் பங்களா!

இறக்குமதி செய்யப்பட்ட கார்!

இந்தக் கமிஷனுக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சேர்மேன் ஒரு லட்சம் கதர்க் குடும்பங்கள் என்றொரு (STUNT) ஸ்டன்ட் விட்டார். எல்லாம் FLOP. ஒன்றும் நடைபெறவில்லை.

நான் கதர் ஊழியனாக இருந்தபோது என்னுடன் ஒரு சக ஊழியன் இருந்தான். அவனுக்கு மாதம் அறுபது ரூபாய் தான் சம்பளம் கொடுக்கப்பட்டது.

அவன் காதி கமிஷன் காரியதரிசியானான். சம்பளம் மாதம் ஆயிரம் ரூபாய் வாங்கியிருப்பான். அவன் எப்போதும் ஆகாய விமானத்தில்தான் குடியிருந்தான்.

அவனைப் பற்றி வேடிக்கையாக ஒரு கதை சொல்வார்கள். நிஜமோ பொய்யோ எனக்குத் தெரியாது.

ஒரு நாள் கல்கத்தாவில் அவனுடைய பொடி டப்பியை மறந்து வைத்து விட்டு பம்பாயுக்கு ஏரோபிளேனில் வந்திறங்கினான். அடடே, பொடி டப்பியை மறந்து விட்டேனே என்று மறுபடியும் கல்கத்தாவுக்குப் பறந்து சென்று எடுத்து வந்தான் என்பதுதான் அக்கதை.

இருபது வருடங்களுக்கு முன் நான் சென்னை அரசாங்க கௌரவ கதர் ஆலோசகராக இருந்தபோது இவன் பம்பாயி

லிருந்து சென்னையில் காலை விமானத்தில் வந்திறங்குவான். அன்று மாலையே விமானத்திலேறிப் பம்பாய்க்குப் புறப்படு வான் என்பது மட்டும் எனக்கு நேரில் தெரியும்.

விமானத்தில் பறந்துவந்து அவன் சாதித்த காரியம் ஒன்றுமிராது. சும்மா என்னையும் திரு. வெங்கடாசலபதி யையும் பார்த்துவிட்டுப் போவான்.

## பனை வெல்லம் காய்ச்ச பனிரண்டாயிரம் ரூபாய்!

1954-ல் ஆவடியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டின்போது, சென்னை தேனும்பேட்டையில் அகில இந்திய கதர் கிராமத் தொழில் பொருட்காட்சி ஒன்று அரசாங்க ஆதரவில் நடைபெற்றது.

அப்பொருட்காட்சியை ஸ்தாபித்து நடத்துவதற்கு நான் தான் பொறுப்பாளியாக இருந்தேன். 30 நாட்கள்தான் அப் பொருட்காட்சி நடைபெற்றது.

காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள சகல கிராமத் தொழில்களும் அப்பொருட்காட்சியில் பிரத்தியட்ச மாகச் செய்து காட்டப்பட்டது.

பனை வெல்லம் காய்ச்சுவது எப்படியென்று செய்து காட்டப் பம்பாய் காதி கமிஷனிலிருந்து ஒரு "ஆபீஸர்" வந்திருந்தார்.

தினம் பத்து ரூபாய்க்குப் பனந் தெளிவு வாங்கி, அதனை வெல்லமாகக் காய்ச்சிக் காட்டுவதற்கு அந்த மகாதேவன் ரூ. 12,000-ம் வேண்டுமென்று என்னிடம் கேட்டார்!

இதைக் கட்டுக்கதையென எண்ணிவிடாதீர்கள். இது இந்நாட்டுச் சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டிய அரிய சம்பவம்.

0-, 6NAY5, E
N175

"எனது நினைவுகள்" என்ற எனது சுயசரிதையின் 781-ம் பக்கத்தில் இந்தச் சம்பவத்தை சவிஸ்தாரமாக எழுதியிருக்கிறேன்.

இந்தக் கதர் கமிஷன் உடனடியாக கலைக்கப்பட வேண்டும். அதனால் விரயம் செய்யப்படும் குறைந்தபட்சம் ஆண்டொன்றுக்கு 100 கோடி ரூபாய் நாட்டுக்கு மிச்சமாகும்.

அப்பெருந் தொகையைக் கொண்டு குறைந்த பட்சம் ஓராயிரம் கிராமங்களில் தொழிற்பேட்டைகள் நிறுவி நாட்டின் தொழில் வளத்தையும், நாட்டுமக்கள் செய்திறனையும் பெருக்க முடியும்.

★

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 109139
MADRAS

3B
-70